ममाप्येतौ मातः शिरसि दयया धेहि चरणौ ॥

மூககவியும் மேலே கண்டவாறு வேண்டுகிருர்.

பரமசிவனின் தேவியான காமாக்ஷி, இரட்டைச் சிலம்புகளின் ஒலியால் அபய வாக்குகளை தருபவையாகவும்,

பரந்த சிவந்தகாந்தி உள்ளவையாகவும், அக்ஞானம் என்ற இருட்டை போக்குவையாகவும், மிருதுவாயுமுள்ள தன் பாதங்களை க்ஷணகாலம் என் தலைமீது வைத்து, வணங்கிய என் சிரஸ்ஸை பரிசுத்தமாக்கட்டும் என்று பாதாரவிந்த சதகத்தில் வேண்டுகிறார்

वितन्वीथा नाथे मम शिरसि कामाक्षि
कृपया पदाम्भोजन्यासं पशुपरिवृढप्राणदयिते

என்கிற ச்லோகத்தில் மூககவி 'தயை செய்து என் சிரஸ்ஸில் உன் பாதாரவிந்தத்தை வைத்தருள்வாயாக என்கிறார். ஹேசிவே கொஞ்சம் மலர்ந்த உன் நீள்விழியினால் தூரத்திலிருக்கும் தீனனான என்னை ஸ்நாநம் செய்விப்பாயாக என்று,

दृशा द्राघीयस्या दरदलितनीलोत्पलरुचा
दवीयांसं दीनं स्नपय कृपया मामपि शिवे

என்று பகவத்பாதர் ஸௌந்தர்யலஹரியில் கூறுகிறார். இதுபோலவே மூககவியும்,

मातः क्षणं स्नपय मां तव वीक्षितेन मन्दा-
क्षितेन सुजनैरपरोक्षितेन ।

அன்னையே நாணம் மிகுந்ததும் ஸஜ்ஜனங்களால் நேராகப் பார்க்கப்படுவதுமான உன் கண்ணால் க்ஷணகாலம் என்னை ஸ்நாநம் செய்துவை என்கிறார்.

ஸ்ரீகாமாக்ஷி தேவியினிடம் அசஞ்சலமான பக்திகொண்டு அன்னையின் அருளைப்பெற்ற வரகவி மூககவி. இவருடைய இந்த நூல் ஓர் அநுக்ரஹ க்ரந்தம்: ''உலகத்திலே மிகச் சிறந்ததாக விளங்கும் இந்த ஸ்துதி நூலை படிப்பதால் மட்டுமே, அந்த க்ஷணத்திலேயே இந்த மகாகவியோடும்' இறுதியிலே பரதேவதையோடுமே ஒன்றாகும் நிலையை ஸாதகன் அடைகிறான்'' என்று அநுக்ரஹித்த ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் வாக்கே இதற்குச் சான்றாகும். அர்த்தத்தில் அதிகமாக ஈடுபாட்டைக் கொள்ளாமலும்கூட, மந்த்ர சாஸ்த்ரத்தைப்போல இந்த மூகபஞ்சதியை அநுசந்தானம் செய்வது மிகப் புண்ணியமாகும்.

★ ★ ★ ★

ப்ரத்யக்ஷ தேவதை யார்?	தாய்.
பூஜிக்கத் தக்க குரு யார்?	தந்தை.
எல்லா தேவதா ஸ்வரூபமாகவும் இருப்பது யார்?	வேதமுணர்த்தும் கர்மாநுஷ்டானம் செய்யும் பிராம்மணன்.
குலம் அழியக் காரணம் என்ன?	ஸாதுக்களுக்குக் கஷ்டம் விளைவிப்பது.
எவர் சொல் வீணாகாது?	ஸத்யமுரைப்போர், மௌனி, அடக்கம் உள்ளவர்.

—ஸ்ரீசங்கர பகவத்பாதர்.

எது தானம்?	யாரிடமும் எதையும் கேளாமலிருத்தல்.
யார் மித்ரன்?	பாபச் செயலிலிருந்து நம்மை தடுப்பவன்.
எது அலங்காரம்?	சீலம்.
வாக்குக்குப் பூஷணம் எது?	ஸத்யம்.
மின்னல்போல் க்ஷணம் தோன்றி மறைவது எது?	துஷ்டர்களுடைய சேர்க்கையும், யுவதிகளும்.
எவர் குலபர்வதம்போல் அசைவற்றவர்?	ஸாதுக்கள்.

—ஸ்ரீசங்கர பகவத்பாதர்.

யார் மேலான தெய்வம்?	சித்சக்தி.
உலகைக் காப்பவன் யார்?	சூர்யன்.
பிழைப்புக்குக் காரணம் யாது?	மழை.
சூரன் யார்?	பயந்தவரைக் காப்பவன்.
காப்பவன் யார்?	குரு.
யார் ஜகத்குரு?	பரமசிவன்.
ஞானம் யாரிடமிருந்து கிடைக்கும்?	சிவனிடமிருந்து.

—ஸ்ரீசங்கர பகவத்பாதர்.

காஞ்சி ஸ்ரீ காமாக்ஷீ

ஸ்ரீ குஹானந்த மண்டலி ஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள்

ஆருமெய்தற் கரிது பெரிதுமே
ஆற்ற லெய்தற் கரிது பெரிதுமே
தேர ரும்மறி யாது திகைப்பரே
சித்த மும்மறி யாது திகைப்பரே
கார்நி றத்தம ணர்க்கொரு கம்பமே

*　　　*　　　*

வாரிருங் குழன்மை வாணெடுங்கண்
மலைமகள்
மதுவிம்மு கொன்றைத்
தாரிருந்தட மார்புநீங்கத்
தையலா ளுலகுய்ய வைத்த
காரிரும் பொழிற் கச்சிமூதூர்க்
காமகோட்டம்

என்று த்ராவிட வேதத்தாலும் போற்றப் பட்டது காஞ்சி.

இந்தக் காஞ்சிபுரம் துண்டீர மண்டலம் என்னும் தொண்டை நாட்டிற்கு நடுநாயகமாக விளங்குகின்றது. தபோவனம், ப்ரம்மசாலை, அற்புத க்ஷேத்திரம், அலங்கார நகரம், ஸத்யவ்ரத க்ஷேத்திரம், பாஸ்கர க்ஷேத்திரம், தைஜஸ க்ஷேத்திரம், தர்ம க்ஷேத்திரம், ரக்ஷாதாண்டவ க்ஷேத்திரம், முக்தி க்ஷேத்திரம் என்னும் சிறப்புப் பெயர்கள் பெற்றது.

விநாயகர், ஸுப்ரம்மண்யர், ஹரிஹரபுத்திரர், பைரவர், வ்ருஷப தேவர், ருத்ரகோடிகள், சுவேதன் முதல் நகுலீசர் வரையுள்ள சிவாம்ச பூதர்களாயுள்ள பெரியோர்கள், திருமாலின் அவதாரபேதங்கள், அவஸ்தா பேதங்கள், மும்மூர்த்திகள், அஷ்ட திக்பாலகர்கள், தேவகுரு, நவக்ரஹங்கள், அனேகம் அஸுரர்கள், மன்மதன், தக்ஷன், விஷ்வக்ஸேனர், கருடன், ஆதிசேஷன் முதலிய நாகராஜர்கள், மஹாகாளன், ரேணுகாதேவி, கலைமகள், திருமகள், அகஸ்தியர், ஹயக்ரீவர், ததீசி, வ்யாஸர், ஸப்தருஷிகள், பரசுராமர், கொங்கணர், மார்க்கண்டேயர் முதலிய ரிஷிச்ரேஷ்டர்கள், அனேகம் ஸித்தர்கள், அரசர்கள், இன்னும் எண்ணற்ற பெரியோர்களாலும் வேண்டப் பெற்ற வரத்தைப் பெற்றதால் வரநகரம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றது இக் காஞ்சிபுரம்.

வேதவேதாந்தங்களால் தேடப்பட்ட பாதாரவிந்தகளை யுடையவளாயும், ஸச்சிதானந்த ஸ்வரூப ப்ரம்ம சக்தியாயும், ஊர்த்த்வாம்னாயாதி தேவதையாயும், காதி, ஹாதி, ஸாதி, வித்யா ஸ்வரூபிணியாயும், மனு முதலான பதினான்கு உபாஸகர்களால் உபாஸிக்கப் பட்டவளாயும், சக்தி ஸம்பந்தத்தால் மூன்று, சிவ ஸம்பந்தத்தால் இரண்டு, விஷ்ணு ஸம்பத்தத்தால் ஒன்று இவ்விதம் ஆறு வகையான பேதங்களோடு கூடினவளாயும், க்ருத யுகத்தில் தூர்வாஸ மஹரிஷியால் இரண்டாயிரம் சுலோகங்களாலும், த்ரேதா யுகத்தில் பாசுராமரால் ஆயிரத்தைநூறு சுலோகங்களாலும், துவாபர யுகத்தில் தௌம்யாசாரியரால் ஆயிரம் சுலோகங்களாலும், கலியுகத்தில் மூககவி என்னும் மஹானால் ஐநூறு சுலோகங்களாலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட பெருமையையுடையவளாயும், பஞ்சதசாக்ஷரீமயமான காயத்ரீ மண்டபத்தில் விளங்கும் பிலாகாசத்திலிருந்து தோன்றிக் காமலோசனா என்று பெயர் பெற்றவளாயும், பிலத்தில் தோன்றியவள் காமலோசனா என்றால் பாலையேதான் பஞ்சதசாக்ஷரீ ரூபமாக விளங்குகிறாள் என்று அர்த்தம். வாக்பவபீஜம், காமராஜபீஜம், சக்திபீஜம் என்று பாலையின் பீஜங்கள்: இந்த பீஜங்களேதான் வாக்பவகூடம், காமராஜகூடம், சக்திகூடம் என்று பஞ்சதசாக்ஷரீ வித்யையில் பெயர் பெற்று விளங்குகின்றன. விதையே மரமாவது போல் பாலையேதான் பஞ்சதசீவித்யையால் கூறப்படும் காமாக்ஷீ. காயத்ரீ மஹாமந்திரத்தில் இருக்கும் மூன்று பாதங்களின் ஸாரம்தான் பஞ்சதசாக்ஷரீ வித்யையின் மூன்று கூடங்

கள் என்று த்ரிபுராதாபினி என்னும் உபனிஷத் கூறுகின்றது.

பரமேசுவரனல் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட காமகோடி என்னும் பெயர் பெற்ற ஸ்ரீசக்ரத்தில் நித்ய ஸான்னியத்தமாகவே விளங்குபவளாயும், பஞ்சப்ரேதங்களையே மஞ்சமாக உடைத்தானவளாயும் கைகளில் பாசம், அங்குசம், புஷ்பபாணம், கரும்புவில் இவைகளை தரிப்பவளாயும், மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சக்தி ஸ்வரூபமாக விளங்குபவளாயும், பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்னும் நான்கு வாக்ரூபமாக இருப்பவளாயும், கலைமகள், திருமகள் இவர்களால் வீசப்பட்ட சாமரங்களை யுடையவளாயும், பாலா, பஞ்சதசீ, ஸௌபாக்ய வித்யை, ஷோடசீ, மஹா ஷோடசீ என்னும் வித்யைகளுக்கு லக்ஷ்யையாயும், ரதிதேவிக்கு மாங்கல்ய பிக்ஷையளித்தவளாயும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களை இச்சா மாத்திரத்தினலேயே விளையாட்டாகச் செய்பவளாயும், ஸூர்யன், சந்திரன் இவர்களை இரு குண்டலங்களாக அணிந்திருப்பவளாயும், மூன்று கண்களையுடையவளாயும், சந்திர கலையைத் தரித்தவளாயும், பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக விளையாட்டாக ஸகுண ஸ்வரூபத்தை ஸ்வீகரிப்பவளாயும், நிர்க்குணையாயும், பந்தகாஸுரன், பண்டாஸுரன் முதலான அஸுரர்களை அழித்து உலகிற்கு க்ஷேமத்தை அருள்பவளாயும், உலகாணித் தீர்த்தம் என்னும் பஞ்சதீர்த்தக்கரையில் வீற்றிருப்பவளாயும், கம்பாநதீ தீரத்தில் விளையாடுபவளாயும், தசரத சக்ரவர்த்தியின் தவத்திற்கிரங்கித் தன் அம்சபூதர்களான நான்கு குமாரர்களை அருள் செய்தவளாயும், பஹிர்முகமாக உபாஸிப்பவர்களுக்கு மிக தூரத்தில் இருப்பவளாயும், அந்தர் முகமாய் உபாஸிப்பவர்களுக்கு அதிசீக்கிரமாகவே தன் ஞானத்தை அருள் செய்பவளாயும், த்ரிகரண சுத்தியுடன் தன்னை அண்டினேர்க்குத் தன் நித்யானந்த நிலையை யுணர்த்துபவளாயும், மும்மூர்த்திகளாலும் பூஜிக்கப்பட்டவளாயும், சங்கராவதாரமான ஸ்ரீசங்கர பகவத் பாதாள் அவர்களால் அத்வைத நிலையை யுணர்வதற்காகத் தனக்கு அபேதமாக உபாஸிக்கப்பட்டவளாயும், இருக்கும் காமலோசன என்னும் காமாக்ஷீ நித்ய ஸான்னித்யமாகவே காஞ்சி நகரில் விளங்குகிருள்.

இக்காமாக்ஷீ என்னும் மூன்றக்ஷரங்களின் மஹிமை ஆதிசேஷனுலும் வர்ணிக்க முடியாதது.

1. காமனைக் கண்ணில் வைத்ததாலும்,

2. பக்தர்களின் காமங்களைத் தன் பார்வை ஒன்றினலேயே பூரணம் செய்வதாலும்,

3. காலத்தையும், மாயையையும் க்ஷீணமடையச் செய்வதாலும்,

4. கா-என்றல் ஸரஸ்வதி மா-என்றல் லக்ஷ்மீ இவர்களை இரண்டு கண்களாக வைத்திருப்பதாலும்,

5. காமன் என்றல் ஈசன், இந்த ஈசனுக்குக் கண்களாக இருப்பதாலும்,

6. கா-என்றல், ஸரஸ்வதி. மா-என்றல், மாஹேச்வரி. க்ஷி-என்றல் க்ஷீரஸாகரஜா, அதாவது மஹா ஸரஸ்வதி, மஹாகாளி, மஹாலக்ஷ்மீ ஸ்வரூபமாக விளங்குபவதாலும்,

7. காம என்றல் கடபயாதி ஸங்க்யாரீதியாக ஐம்பத்து ஒன்று. இந்த ஐம்பத்து ஒன்று அக்ஷரங்களே பார்வையாக இருப்பதாலும்,

8. கா-என்றல் ஒன்று. மா-என்றல் ஐந்து-பதினைந்து. காமராஜம் என்னும் பஞ்சதசாக்ஷரீ மஹாவித்யை இரு கண்களாக இருப்பதாலும்,

9. கா-என்றல் ஒன்று. மா-என்றல் ஐந்து. க்ஷி-என்றல் ஆறு. தான் ஒருவளே காஞ்சீபுரத்தில் த்ரிபுரா, ராஜராஜேஶ்வரி, மஹாகாமேஶவல்லபா. காமாக்ஷீ, காமகோடி யென்னும் ஐந்து பேர் பெற்று, சக்தி பேதம் மூன்று, சிவபேதம் இரண்டு, விஷ்ணு பேதம் ஒன்று என்னும் ஆறுவகை பேதத்தோடு காஞ்சீபுரத்தில் விளங்குவதாலும்,

10. தான் ஒருவளே பஞ்சகோசாதீதயாயும் ஷட்பாவரஹிதையாயும் விளங்குவதாலும்,

11. தான் ஒருவளே பஞ்சபஞ்சிகா ரூபமாகவும் ஷடாம்னய ரூபமாகவும் விளங்குவதாலும்,

12. தான் ஒருவளே பஞ்சபூத மயமான சரீரத்தில் ஷட்சக்கரங்களில் விளங்கும் யோகினி ஸ்வரூபமாக விளங்குவதாலும்,

13. தான் ஒருவளே பஞ்சப்ரம்ம மய மஞ்சத்தில் ஷடன்வயீ சாம்பவி என்னும் வித்யையாக விளங்குவதாலும்,

14. தான் ஒருவளே ஐந்து முகன பரமேசுவரனுகவும் ஆறுமுகன குமார கடவுளாகவும் இருப்பதாலும்,

15. தான் ஒருவளே ஐந்து ஞானேந்திரியங்களுக்கும் புலனுகாத முலாதாரம் முதலான ஆறு சக்ரங் களுக்குமேல் ப்ரம்ம ரந்திரத்தில் விளங்கும் ஆயிரம் தளத்துடன் கூடின தாமரை மலரில் குருஸ்வரூபமக விளங் குவதாலும், காமாக்ஷீ என்னும் பெயர் பெற்றுக் காஞ்சிபுரத்தில் காமகோடி பீடத்தில் நித்யஸான்னியத்யமாகவே விளங்குகிருள்.

இக்காமாக்ஷீ என்னும் மூன்றக்ஷரங் களாகும் விலைமதிக்க முடியாத ரத் னத்திலிருந்து இன்னும் அனேகம் அர்த்தங்களாகின்ற பேரொளி வீசிக் கொண்டிருக்கின்றது.

இந்தப் பேரொளியை ஸ்வானு பூதி பெற்ற மஹான்கள் அவரவர்கள் அனுபவதிலிருந்து இன்னும் கண்டு கொண்டிருக்கின்ருர்கள்.

இந்தக் காமாக்ஷீ தேவியானவள் காமகோடி மீடத்தில் விளங்கும் த்ரி புராம்பிகையில் ஜ்யோதி ஸ்வரூபமான பூர்ண சக்தியாயும். தவக்கோலத் துடன் விளங்கும் காமாக்ஷீ தேவியினி டத்தில் ஓர் அம்சரூபமாகவும், ஸ்வர்ண காமாக்ஷியினிடத்தில் கல் யாண கௌரீ ரூபமாகவும், ஏகாம் ரம் என்னும் ஜ்யோதிர்லிங்கத்தில் நிர்க்குண சிவஸ்வரூபிணியாகவும், ஏகாம்ரநாதன் என்று பெயர் பெற்ற லிங்கத்தில் ஸகுண சிவஸ்வரூபிணியா கவும், தன் அர்த்தாம்சமாயும், பிம்ப ரூபமாயும் இருக்கும் வரதராஜப் பெருமாளிடத்தில் புருஷ ரூபிணியாக வும், இவ்விதம் ஆறுவகையான பேதத் துடன் கூடி, காஞ்சி மண்டலத்தில் விளங்குகின்ருள்.

நாமும் பரமேச்வரனுல் ப்ரதிஷ்டை செய்யப்பட்டதாயும், ப்ரம்மாவினுல் பூஜை பண்ணப்பட்டதாயும், காலாந் தரத்தில் இதர மதஸ்தர்களால் ஆக்ர மிக்கப்பட்டு, நம் பாரத தேசத்தின் பரம பாக்யமான ஸ்ரீ பகவத் பாதாள் அவர்களால் ஜீர்ணேத்தாரணம் செய் யப்பட்டதாயும், காமகோடி என்னும் பெயர் பெற்று விளங்கும் ஸ்ரீ சக்ரா திஷ்டாத்ரியாயும் இருக்கும் ஸ்ரீ காமாக்ஷீ தேவியை அந்தர்முகமாக உபாஸ்தி செய்து இந்த ஸம்ஸார ரூபமான யுத்தத்தில் ஜயம் பெறுவ தற்காக இப்போது காமகோடி பீடா திபதியாயும், சந்திரனை சிரஸ்ஸில் தரித்த காமாக்ஷீ ஸ்வரூபமாயும், விளங் கும் ஜகத்குருவின் அனுக்ரஹத்திற்கா ளாகி நித்யானந்தப் பெருவாழ்வைப் பெறுவோமாக!

कामपरिपन्थिकामिनि कामेश्वरि कामपीठमध्यगते ।
कामदुघा भव कमले कामकले कामकोटि कामाक्षि ॥

மன்மதனுக்கு விரோதியான பரமசிவனின் சக்தியுள்ள காமேஶ்வரியாயும், ஸ்ரீகாமகோடி பீடத்தின் மத்தியில் விளங்குபவளாயும், ஸஹஸ்ரதள கமலத்தில் விளங்கும் பராசக்தியாயும், காமகலா ஸ்வரூபிணியாயும், எல்லா காமனைகளின் எல்லையாயும், விளங்குகின்ற ஓகாமாக்ஷியே! என்னுடைய ஸர்வாபீஷ்டங்களையும் நிறைவேற்றுகின்ற காமதேனுவாக ஸம்பவிப்பாயாக.

ஸ்ரீ மாத்ருகா பீடங்கள்

ஸ்ரீ குஹானந்த மண்டலீ ஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள்

நம் பாரத தேசம் மிகவும் புராதனமானது. அனேகம் ஜீவன்முக்தர்கள் வாழ்ந்து வந்த நாடு. இப்போதும் அனேகம் ஜீவன் முக்தர்களும், ஸித்தர்களும், கர்மாக்களில் ஈடுபட்ட புண்ணிய புருஷர்களும் யோகிகளும் பக்திமான்களும் உலகிற்குத் தெரிந்தும் தெரியாமலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

பாரதம் என்றால் மஹாப்ரகாசத்தில் ஈடுபட்டிருக்கின்றது என்று அர்த்தம். அதாவது அத்வைதத்திலேயே திளைத்திருக்கின்றது. இந்த அத்வைத ஞானமோ சித்தசுத்தி ஒன்றினால்தான் ஏற்படும். இந்தச் சித்தசுத்திக்குக் காரணம் பலனை இச்சிக்காமல் கர்மாவைச் செய்வதுதான். பலனை இச்சிக்காமல் யாவரும் ஒரு கர்மாவையும் செய்வதில்லை. கர்ம பலனை இச்சிக்காதே என்று கீதாசார்யனும் அர்ஜுனனைப் பார்த்துக் கூறுகின்றார்.

கர்மாவை சாஸ்த்ரோக்தமாக அனுஷ்டானம் செய்யவேண்டும் என்று கூறும் மஹாவைதிகர்களாலும் அந்தக் கர்மானுஷ்டானத்தைச் சரிவரச் செய்ய முடிவதில்லை.

ஏதோ சில புண்ய புருஷர்கள் கர்மாவை ஆடம்பரமில்லாமல் கூடுமானவரை நியமத்துடன் அனுஷ்டானம் செய்துகொண்டு தான் வருகின்றார்கள். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

கர்மாவை நியமத்துடனும் சாஸ்திரங்களில் கூறியபடியும் அனுஷ்டானம் செய்ய முடியவில்லை. ஆகையால் அந்தக் கர்மாக்களை விட்டு விடுவோம் என்று நினைக்கலாமா? என்று கேட்டால் அதுதான் முடியாத விஷயம்.

சாஸ்த்ரோக்தமான கர்மாக்களை விட்டுவிட்டால் சாஸ்த்ர விருத்தமான கர்மாக்களைத்தான் கடைப்பிடிக்க வேண்டியிருக்கின்றது. சாஸ்திர விருத்தமான கர்மாக்களைக் கடைப்பிடிப்பதால் பாபம்தான் வந்து சேருகின்றது. ஆகையால் கஷ்டமோ சுகமோ எதுவாவது ஏற்படட்டும், பெரியோர்கள் சென்ற மார்க்கத்தில் கூடுமானவரையில் நாமும் சென்று கொண்டிருப்போமாக.

நம்மால் இயன்ற அளவு கர்மாக்களைச் செய்துகொண்டு அந்தந்தக் கர்மாக்களுக்குப் பலன்கொடுப்பதற்கு ஒருவர் இருக்கின்றார் என்று தீர்மானம் செய்து அவரையும் நாம் உபாஸித்தல் அவசியம்.

கர்மாக்களுக்குப் பலன் கொடுக்க ஒருவர் இருக்கின்றார் என்றால் அவர் யார்? அவர் உருவம் என்ன? அவரை நாம் எவ்விதம் உபாஸிப்பது? இது போன்ற அனேகம் கேள்விகள் வரலாம். இதுபோன்ற சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காக முதிர்ந்த அனுபவம் பெற்ற ஓர் மஹானை ஆச்ரயிக்கவேண்டும்.

அந்த மஹான் கூறும் மார்க்கத்தைச் சந்தேகமில்லாமல் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

அவர்களும் அதிகாரிகளைப் பொறுத்துத் தான் மார்க்கத்தையும் காட்டுவார்கள்.

அந்த மார்க்கத்தில் ஆலயம் தொழுவதும் ஒரு பரிசுத்தமான மார்க்கம். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று ஔவைப் பாட்டியும் கூறியிருக்கின்றார்கள்.

இந்த ஆலயங்களோவெனில் சில தேவர்களாலும், சில சித்தர்களாலும், சில ரிஷிகளாலும், சில பக்திமான்களான அரசர்களாலும், மனிதர்களாலும் கட்டப்பட்டதாக இருக்கின்றன.

ஆலயமென்றால், நாம் தேவ தர்சனத்திற்காக க்ஷேத்திரத்தில் சென்றவுடன் உலக சம்பந்தமான நம் சித்த வ்ருத்திகள் நாசமடைந்து எல்லாம் தேவதா மயமாகவே பார்க்கும் தன்மையைக் கொடுக்கக்கூடியது என்று பொருள்.

நம் பாரத தேசத்திலோ கணக்கிலடங்காத க்ஷேத்திரங்கள் இருக்கின்றன.

சில சிவ க்ஷேத்திரங்கள். சில விஷ்ணு க்ஷேத்திரங்கள். சில தேவீ க்ஷேத்திரங்கள். சில கணேச க்ஷேத்திரங்கள். இன்னும் அனேக மூர்த்தி க்ஷேத்திரங்கள் மஹான்களால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்று நம் பாரத தேசத்தில் விளங்குகின்றன.

இதில் தேவீ க்ஷேத்திரங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

பாத்ம புராணத்திலும் தேவீ பாகவதத்திலும் அனேகம் க்ஷேத்திரங்கள் தேவீ ஸான்னித்யம் பெற்றதாகக் கூறப்படுகின்றன.

இவை நூற்றெட்டு என்றும் அறுபத்தெட்டு என்றும் அறுபத்து நான்கு என்றும் ஐம்பத்து ஒன்று என்றும் முப்பத்து ஆறு என்றும் பதினெட்டு என்றும் பன்னிரண்டு என்றும் கூறப்படுகின்றன.

இதில் அனேக தந்த்ரங்கள் ஒரே முகமாக ஐம்பத்து ஒன்று என்று கூறுகின்றன.

ஐம்பத்து ஒன்று என்று கூறப்பட்ட க்ஷேத்திரங்கள் அகாராதி க்ஷகாராந்தமான அக்ஷரமயமாக விளங்குவதால் மிகவும் விசேஷமான பீடங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஐம்பத்தி ஒன்று பீடங்களும் நம் பாரத தேசத்தில் வியாபகமாகவே விளங்குகின்றன.

இந்த ஐம்பத்தொன்று பீடங்களும் மிகச் சிறப்பு வாய்ந்தவை. விசேஷமான சிறப்புப் பெறுவதற்கு ஒரு கதை புராணங்களில் காணப்படுகின்றது.

தக்ஷ ப்ரஜாபதி தன் ஜாமாதாவான பரமேச்வரனை அழைக்காமல் ஒரு யாகம் செய்தான். அப்போது பார்வதி பரமேச்வரனைப் பார்த்து, ''தங்களை என் தகப்பனார் அழைக்காவிட்டாலும் அவர் செய்யும் யாகத்திற்கு நான் செல்லவேண்டும்'' என்று பிடிவாதமாகக் கூற, பரமேச்வரனும் செல்லக்கூடாது என்று கூறினார். உடனே ஸதிதேவிக்குக் கோபம் வர, அந்தக் கோபத்தைப் பார்த்து பரமேச்வரனும் பயந்து ஓடுவதற்குப் ப்ரயத்தனம் செய்த சமயத்தில் அம்பாள் தசமஹாவித்யா ஸ்வரூபமாகப் பத்து திக்குகளிலும் தோன்றினாள். உடனே பரமேச்வரனும் வருங்காலத்தை நினைத்து ஸதிதேவியை யாகத்திற்குச் செல்ல உத்தரவு கொடுத்தார். யாகசாலையை அடைந்த ஸதிதேவியைத் தக்ஷப்ரஜாபதி வரவேற்காதது மட்டுமல்ல, அவள் பதியான பரமேச்வரனையும் அனேக நிந்தியமான வார்த்தைகளால் தூஷணம் செய்தான்.

இதைப் பொறுக்காத ஸதிதேவி யாகசாலையிலேயே யோக சக்தியால் ப்ராணனை விட்டாள்.

இந்த விஷயத்தை நாரதர் மூலம் அறிந்த ருத்ரன் மிகவும் கோபம் கொண்டு வீரபத்ரனை ஸ்ருஷ்டித்துத் தக்ஷ ப்ரஜாபதியையும் யாகசாலையையும் யாகசாலையில் இருந்த ரித்விக்குகளையும் த்வம்ஸம் செய்தார். பரமேச்வரனும் ஸதிதேவியின் ம்ருத சரீரத்தைத் தோளில் சுமந்துகொண்டு திரிய, தேவர்களும் ரிஷிகளும், ம்ருத சரீரத்தைத் தூக்கிக்கொண்டு திரிய வேண்டாம் என்று எவ்வளவோ ப்ரார்த்தனை செய்தும் கேட்கவில்லை.

உடனே விஷ்ணுவும் தம் சுதர்சன சக்ரத்தால் அந்த ஸதிதேவியின் ம்ருத சரீரத்தைத் துண்டு துண்டாக அறுத்தெறிந்தார்.

விஷ்ணு சக்ரத்தால் அறுக்கப்பட்ட ஸதிதேவியின் அங்கங்களும் முன் கூறப்பட்ட அக்ஷரமயமான பீடங்களில் விழுந்தன. இதனால் இந்த அக்ஷரமயமான ஐம்பத்தொரு பீடங்களும் மிகவும் சக்திவாய்ந்தனவாக ஆயின.

மேரு தந்த்ரத்தில் ஸதிதேவீயின் அங்கங்கள் எந்தெந்த அக்ஷரபீடங்களில் விழுந்தன என்ற விவரம் கூறப்படுகின்றது.

வடமொழிப் பரிச்சயம் இல்லாதவர்களுக்காகத் தமிழிலேயே எழுதுகிறேன்.

இதில் கூறப்பட்ட ஸ்தானங்கள் தற்சமயம் எந்தப் பெயரால் அழைக்கப்படுகின்றன என்று தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரை இப்போது சொல்லப்படும் பெயரையும் தெரிவிக்கிறேன்.

மேரு தந்திரத்தில் 10-ஆவது ப்ரகாசத்தில், 800-ஆவது சுலோகத்திற்குமேல் 917-ஆவது வரை இந்த விஷயம் கூறப்பட்டிருக்கின்றது.

அ. அ. காமரூபம் (1)

இந்தப் பீடம் அஸ்ஸாம் பிரதேசத்தில் கோஹட்டிக்கு ஸமீபம். ப்ரம்மபுத்திரா நதிக்கரையில் நிலாத்ரி என்னும் பர்வதத்தில் இருக்கின்றது. இவ்விடத்தில்தான் ஸதிதேவியின் யோனி விழுந்தது. இந்த மலை சுமார் 600 அடி உயரம் இருக்கின்றது. 500 அடி உயரத்தில் ஆலயம். அதை ஒட்டினாற்போல் ஒரு குகை. அந்தக்

குகையில் த்ரிகோணுகாரமாகவும் ஜலம் நிறைந்ததாகவும் ஒரு சிறிய குளம் போல் 32 அங்குல அளவில் இந்தப் பீடம் விளங்குகின்றது. இந்தப் பர்வதத்தில் தசமஹா வித்யைகளுக்கும் ஆலயங்கள் இருக்கின்றன. முக்தியை இச்சித்தவர்களுக்கு முக்தியும், கௌள மார்க்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு அந்த ஸித்தியும் ஏற்படும். முன் காலத்தில் மாதம் மாதம் ரஜஸ் ஏற்பட்டிருந்ததாகக் கூறுகிறார்கள். இதற்கு உப பீடம் இரண்டு. சாபரமந்த்ரமும் சோகிமந்த்ரமும் இந்த உப பீடங்களில் ஸித்தியாகும். இது ஸ்ரீவித்யைக்குக் காரணமாக இருப்பதால் அணிமாதி ஸித்தியை இச்சிப்பவர்கள் அங்கு செல்லலாம்.

आ. ஆ. காசி (2)

இவ்விடத்தில் அம்பாள் ஸ்தனங்கள் விழுந்தன. ப்ரளயத்திலும் நாசமில்லாதது. இந்தப் பீடத்தில் மரித்தால் முக்திதான். அம்பாள் ஸ்தனங்கள் விழுந்ததும் அவற்றிலிருந்து பால் பெருக்கெடுத்தது. அந்தப் பெருக்கானது அஸி, வருணா என்ற பெயருடன் நதி ரூபமாக விளங்குகின்றது. அந்தக் காசியைச் சுற்றி ஒரு யோஜனை தூரம் தேவ பூமி என்று கூறப்படுகின்றது. அங்கு உச்சரிக்கப்படுவதான எல்லா மந்த்ரங்களும் ஸித்தியைக் கொடுக்கும்.

நான்கு எல்லைகளிலும் நான்கு ஆம்னாய தேவதைகளுக்கும் ஸ்தானங்கள் இருக்கின்றன. அவ்விடத்திலிருந்து ஆம்னாய மந்த்ரங்களை உச்சரித்தால் ஸித்தி ஏற்படும். கங்கைக்கு அக்கரையில் அதிபவித்ரமான காசிதேசத்தின் மற்றோர் பாகம் இருக்கின்றது. வியாஸ மஹரிஷியின் சாபத்தால் கர்த்தப க்ஷேத்திரமாக அது விளங்குகின்றது. அங்கு மந்த்ர உச்சாரணம் செய்தால் தற்காலத்திற்குப் பலன் கொடுக்கும். அஸி என்னும் நதிக்கு தெற்குப் பாகத்தில் ஸாரதா க்ஷேத்திரமிருக்கின்றது. அங்கு தக்ஷிண மார்க்கத்திற் கூறப்பட்டதான மந்த்ரங்கள் ஸித்தியைக் கொடுக்கும்.

வருணா நதியின் வடக்கு பாகத்தில் உத்தர ஸாரநாத க்ஷேத்திரமிருக்கின்றது. இந்தப் பீடம் வாமமார்க்க அனுஷ்டானத்தால் ஸித்தியைக் கொடுக்கின்றது. இவைதான் தக்ஷிண ஸாரநாதம், உத்தர ஸாரநாதம் என்னும் இரண்டு உப பீடங்களாக விளங்குகின்றன.

इ. இ. நேபாளம் (3)

இந்தப் பீடத்தில் அம்பாளின் குதம் விழுந்தது. ஆகையால் இந்தப் பீடம் வாமமார்க்கத்திற்கு மூல ஸ்தானம் என்று கூறப்படுகின்றது. இதற்கு 300 உப பீடங்கள் இருக்கின்றன. இங்கு 56 லக்ஷம் பைரவர்களும் பைரவிகளும், 20,000 சக்திகளும் விளங்குகின்றனர். இந்த நேபாள பீடத்தை ஒட்டினாற் போல் 14 மயானங்கள் இருக்கின்றன. இவைகளில் எட்டு உபபீடங்கள் தக்ஷ மார்க்கத்தை ஆச்ரயிப்பவர்களுக்கும் 4 உப பீடங்கள் வைதிக மந்த்ரங்களுக்கும் ஸித்தியைக் கொடுக்கும். நேபாள தேசத்திலிருந்து கிழக்குப் பாகத்தில் அம்பாள் குதத்திலிருந்து மலம் விழுந்தது; அந்த இடம் கிராதர்கள் என்னும் ஜாதியாரால் சூழப்பட்டது. அவ்விடத்தில் 30,000 தேவயோனிகள் இருக்கின்றார்கள்.

ई. ஈ. ரௌத்ர பர்வதம் (4)

இங்கு ஸதிதேவியின் இடது கண் விழுந்தது. ஆகையால் இந்த ஸ்தானத்தை மஹா பீடம் என்று கூறுவார்கள். எந்த மந்த்ரத்தை உச்சாரணம் செய்தாலும் ஸித்தி ஏற்படும். வாம மார்க்கானுஷ்டானத்தால் தேவதைகளின் தர்சனம் ஏற்படும்.

उ. உ. காச்மீரம் (5)

இவ்விடத்தில் ஸதிதேவியின் இடது காது விழுந்ததால் இதுவும் ஓர் மஹா பீடம். எந்த மந்த்ரத்தை ஜபித்தாதாலும் அதன் ஸித்தி ஏற்பட்டு வித்யைகளில் கரை கண்டவனாகவும் தத்துவ ஞானியாகவும் ஆகின்றான். வைதிக மார்க்கத்திலோ, கௌள மார்க்கத்திலோ, ஸ்ம்ருத்யுக்தமான மார்க்கத்திலோ, தக்ஷிண மார்க்கத்திலோ தவறுதல் ஏற்பட்டால், அதற்கு ப்ராயச்சித்தத்தைக் கொடுக்கக் கூடியவையாயும் உடனேயே ஸித்தியைக் கொடுக்கக் கூடியவையாயும் மிகவும் ரஹஸ்யங்களாயும் இருக்கின்ற தீர்த்தங்கள் இருக்கின்றன. ஆனால் இவை கலியுகத்தில் மிலேச்சர்களால் சூழப்பட்டவையாக ஆகிவிடும்.

ऊ. ஊ. கான்யகுப்ஜம் (6)

இவ்விடத்தில் ஸதிதேவியின் வலது காது விழுந்ததால் மிகவும் சோபனமாக இருக்கின்றது. கங்கா நதிக்கும் யமுனா நதிக்கும் மத்ய ப்ரதேசமானது அந்தர்வேதி என்று கூறப்படுகின்றது.

இந்த ஸ்தானம் ஸோமபானம் செய்யும் தீக்ஷிதர்களின் இருப்பிடமாகக் கூறப்படுகின்றது. இவ்விடத்தில் ப்ரம்மா முதலான தேவர்கள் தங்கள் தங்கள் பேரால் அனேகம் தீர்த்தங்களை உண்டு பண்ணியிருக்கின்றார்கள். ஒவ்வோர் அடிக்கும் வைதிக மந்த்ரங்கள் ஸித்தியைக் கொடுக்கும். யமுனை நதிக்கரையில் ஸதிதேவியின் கர்ண மலம் விழுந்ததால் இந்த்ரப்ரஸ்தம் என்ற பேருடன் ஓர் உபபீடமானது இருக்கின்றது. அந்தப் பீடத்தின் மஹிமையால் வேதத்தை மறந்து போன ப்ரம்மாவிற்கு மறுபடியும் அந்த வேத ஸ்மிருதியானது ஏற்பட்டது. நிகம போதகம் என்ற பேருடன் ஒரு தீர்த்தமானது ப்ரஸித்தியை அடைந்தது. மஹாகாளியானவள் மஹாகாளரைக் குறித்துத் தவம் செய்து வரம் பெற்ற இடம் இது.

ஈ. ரு. பூர்ணகிரி (7)

ஸதிதேவியின் நாஸிகை விழுந்த இடம். இவ்விடத்தில் யோகப் பயிற்சி செய்தால் சீக்கிரமாகவும் பூர்ணமாகவும் யோக ஸித்தி ஏற்படும். மந்த்ரங்களை ஜபம் செய்தால் அந்த மந்த்ரத்திற்குரிய தேவதை ப்ரத்யக்ஷமாக வந்து அருள் செய்யும்.

ஊ. ரூ. அற்புதாசலம் (8)

ஸதிதேவியின் வஸ்த்ரம் விழுந்த இடம். அம்பாஜி என்று ப்ரஸித்தமாக தேவி வீற்றிருக்கின்றாள். தன் தன் ஆசாரத்தில் மிகவும் ப்ரியமானவள், ஏதாவதொரு மந்த்ரத்தை உச்சரித்தால் அது சரியான காலத்தில் ஸித்தியைக் கொடுக்கும். தேவ ஸ்திரீகள் வாஸம் செய்யும் இடம். அங்கு ப்ரம்மசர்ய வ்ருதானுஷ்டானம் மிகவும் கடினம். ப்ரம்மசர்ய வ்ருதத்தைப் பன்னிரண்டு ஆண்டுக் காலம் ஒருவன் சரிவர அனுஷ்டானம் செய்தானேயானால் அவனை நான் பர்த்தாவாக வரிப்பேன் என்று அவ்விடத்தில் அம்பாஜி என்னும் சக்தியானவள் கூறியிருக்கின்றாள். மகான்கள்கூட மூன்று நாட்கள் இருக்கும்போதே ப்ரம்மசர்ய வ்ருதத்திலிருந்தும் நழுவி விட்டதாகக் கூறுவர். வாமமார்க்கத்தை அனுஷ்டானம் செய்தால் ஸித்தி பெறலாம். தக்ஷிண மார்கானுஷ்டானத்திற்கு விக்னங்கள் ஏற்படும்.

஌. லு. ஆம்ராதகேச்வரம் (9)

ஸதிதேவியின் வலது கபோலபாகம் விழுந்த இடம். தனதன் முதலான யக்ஷர்களும் யக்ஷிணிகளும் அங்கு வசிக்கின்றார்கள். அங்கு புரச்சரணை செய்தால் தனதன் முதலான யக்ஷர்கள் யக்ஷிணிகளுடைய அருள் ஏற்படும்.

ॡ. லூ. ஏகாம்ரம் (10)

காஞ்சிபுரத்தில் விளங்கும் ஏகாம்ரம் என்னும் பீடத்தில் ஸதிதேவியின் நகங்கள் விழுந்தன. வித்யாதரர்கள் அவ்விடத்தில் தபஸ் செய்திருக்கின் கின்றார்கள். வித்யார்த்திகள் அவ்விடத்தில் ஸரஸ்வதி ஸம்பந்தமான மந்த்ரங்களை புரச்சரணை செய்தார்களேயானால் அவர்களுக்கு இஷ்டமான வித்யையில் பாண்டித்யம் ஏற்படும். தாங்கள் கேள்விப்படாத வித்யைகள் கூட அவர்கள் புத்தியில் ஸ்புரிக்கும். இது பெரிய காஞ்சிபுரம்.

ஏ. ஏ. த்ரிஸ்ரோதః (11)

ஸதிதேவியின் த்ரிவலி விழுந்த இடம். இந்த இடத்திற்கு கிழக்கு, மேற்கு, தெற்குப் பாகத்தில் மூன்று உபபீடங்கள். க்ருஹஸ்தனை ப்ராம்மணனுக்கு அங்கு ஸித்தி ஏற்படும். இதரர்களுக்கு ஏற்படாது. புஷ்டியைக் கொடுக்கக் கூடினதான மந்த்ரங்கள் ஸித்தியை கொடுக்கும்.

அந்த இடம் சின்னக் காஞ்சிபுரம் பக்கத்தில் இருக்கும் முக்கூடல்.

ஐ. ஐ. காமகோடி (12)

ஸதிதேவியின் நாபி விழுந்த இடம். காம மந்த்ரங்கள் எல்லாம் ஸித்தியைக் கொடுக்கும். நான்கு உப பீடங்கள், நான்கு திக்குகளிலும் இருக்கின்றன. அவ்விடத்தில் விளங்கும் தேவியைத் தர்சனம் செய்தாலே தன் இஷ்டங்கள் நிறைவேறும். அங்கு அப்ஸரஸுகள் வாஸம் செய்கின்றார்கள். வித்யைகள் எல்லாம் சீக்கிரமாகவே ஸித்தியைக் கொடுக்கும். இது காமாக்ஷி தேவி விளங்கும் ஸ்தானம்.

ஒ. ஒ கைலாசம் (13)

ஸதிதேவியின் அங்குலிகள் விழுந்த இடம். ஹிமாலயத்தில் விளங்குவது கைலாஸம் என்னும் பர்வதம். தேவியின் விரல்களில் கணுக்களெல்லாம் சிவலிங்கங்களாகவே விளங்குகின்றன. கைகளின் ரேகைகளால் எண்ணிக் கொண்டு ஜபம் செய்தால் சீக்கிரமாகவே அந்தத் தேவதை அருள் செய்யும்.

ஔ. ஔ. ப்ருகுபீடம் (14)

ஸதீதேவியின் பற்கள் விழுந்த இடம் கல்போக்தமான எல்லா வைதிக மந்த்ரங்களும் தங்கள் தங்கள் உருவத்துடன் அவ்விடத்தில் விளங்குகின்றன. அந்த மந்த்ரங்களை ஜபம் செய்தால் உடன் ஸித்தியைக் கொடுக்கின்றன.

அம். அம். கேதாரம் (15)

ஸதீதேவியின் வலது கை விழுந்த இடம். அங்கு ஸித்திகள் சீக்கிரமாகவே ஸித்தியைக் கொடுக்கும். இந்தக் கேதாரத்திற்கு வலது பாகத்தில் அகஸ்த்யாச்ரமம் என்று ஓர் உபபீடமிருக்கின்றது. அங்கு ஸதீதேவியின் கங்கணம் விழுந்திருக்கின்றது. இந்த இடம் எல்லா ஸித்தியையும் கொடுக்கும். அதற்குப் பின் பாகத்தில் ஸதீதேவியின் மோதிரங்கள் விழுந்த இடம் ஓர் உபபீடம். அந்தப் பீடத்தில் இந்த்ராக்ஷி என்னும் தேவி விளங்குகின்றாள். இந்த தேவி முன் காலத்தில் இந்திரனால் உபாஸிக்கப் பட்டவள். இந்தப் பீடத்திற்குப் பின் பாகத்தில் ரேவதி என்னும் நதிக்கரையில் ஸதீதேவியின் வளையல்கள் விழுந்த இடம் ஓர் உபபீடம்.

அங்கு ராஜராஜேச்வரி என்னும் தேவி விளங்குகின்றாள். பதிதன்கூட அங்கே விமோசனத்தை அடைகிறான். வாமா சாரானுஷ்டானத்தில் சீக்கிரம் ஸித்தி ஏற்படுகின்றது. அங்கு ஜபம் செய்தால் யக்ஷிணிகள் கண்களுக்குப் புலப்படுவார்கள்.

அ:. அ:. சந்த்ரபுரம் (16)

ஸதீதேவியின் இடது கபோலம் விழுந்த இடம். அவ்விடத்தில் எல்லா மந்த்ரங்களும் ஸித்தியைக் கொடுக்கும். சிறிதும் ஸந்தேஹமில்லை.

க. க. ஸ்ரீபீடம் (17)

ஸதீதேவியின் மஸ்தகம் விழுந்த இடம். கலியுகத்தில் பாபிகளால் அங்கு செல்ல முடியாது. இரவில் எல்லாச் சக்திகளும் ஸ்வேச்சையாக விளையாடுகின்றார்கள். அங்கு செல்லும் தர்ம மார்க்கத்தில் இருப்பவர்களை சக்திகள் ஒன்றும் செய்வதில்லை. தர்ம மார்க்கத்திலிருந்து நழுவினவர்களைக் கொன்று தின்று விடுவார்கள். இந்த இடத்திற்குப் பூர்வ பாகத்தில் ஸதீதேவியின் காதணி விழுந்ததால் ஓர் உபபீடமேற்பட்டது. அந்தப் பீடத்தில் பரம்ம வித்தையை ப்ரகாசிப்பிக்கின்றவளான ப்ராஹ்மீ என்னும் சக்தியானவள் விளங்குகின்றாள்.

ஸ்ரீபீடத்திற்கு அக்னிகோணில் காதணியின் ஒரு பகுதி விழுந்ததனால் ஓர் உபபீடமானது ஏற்பட்டது. அந்தப் பீடத்தில் வாக்சுத்தியைக் கொடுப்பவளான மாஹேச்வரி என்னும் சக்தி விளங்குகின்றாள்.

ஸ்ரீபீடத்திற்குத் தெற்குத் திக்கில் ஸதீதேவியின் பத்ரவல்லீ விழுந்ததனால் ஓர் உபபீடம் ஏற்பட்டது. அந்தப் பீடத்தில் ஜயத்தை செய்பவளான கௌமாரீ என்னும் சக்தி விளங்கிறாள். (பத்ரவல்லீ என்றால் ஸ்திரீகளின் ஸ்தனங்களில் கஸ்தூரியால் எழுதப்பட்ட சித்திரம்.)

ஸ்ரீபீடத்திற்கு நைர்ருதி திக்கில் ஸதீதேவியின் கண்டமாலை விழுந்ததனால் ஓர் உபபீடமானது ஏற்பட்டது. அந்தப் பீடத்தில் இந்த்ரஜால ஸித்தியைக் கொடுப்பவளான வைஷ்ணவீ என்னும் சக்தி விளங்குகிறாள்.

ஸ்ரீபீடத்திற்கு மேற்குத் திக்கில் ஸதீதேவியின் நாஸாபரணமான முத்து விழுந்ததால் ஓர் உபபீடமானது ஏற்பட்டது. அந்தப் பீடத்தில் சத்ருக்களை த்வம்ஸம் செய்பவளான வாராஹீ என்னும் சக்தி விளங்குகிறாள்.

ஸ்ரீ பீடத்திற்கு வாயு திக்கில் ஸதீதேவியின் நெற்றிச் சுட்டி விழுந்ததால் ஓர் உபபீடமானது ஏற்பட்டது, அந்தப் பீடத்தில் க்ஷுத்ர தேவதைகளின் ஸித்தியைக் கொடுக்கக் கூடினவளான சாமுண்டா என்னும் சக்தி விளங்குகின்றாள்.

ஸ்ரீபீடத்திற்கு ஈசான பாகத்தில் ஸதீதேவியின் ஜடைபில்லை விழுந்ததனால் ஓர் உபபீடமானது ஏற்பட்டது. அந்தப் பீடத்தில் நல்ல வாக்கு ஸித்தியைக் கொடுப்பவளான மஹாலக்ஷ்மீ என்னும் சக்தி விளங்குகிறாள்.

க². க². ஓங்காரம் (18)

நர்மதாதீரத்தில் அமரகண்டகம் என்னும் ஓங்கார க்ஷேத்திரத்தில் ஸதீதேவியின் தோள் விழுந்தது. இந்த இடத்தில் உபாஸித்த முனிவர்கள் தபஸ் செய்து ஜீவன் முக்தர்களாக ஆனார்கள்.

இந்த ஓங்கார பீடத்தில் வடக்கு பாகத்தில் ஸதீதேவியின் கஞ்சுகம் (ரவிக்கை) விழுந்ததனால் ஒரு பீடத்தில் ஜ்யோதிர்மந்த்ரப் ப்ரகாசத்

தைக் கொடுப்பவளான ஜ்யோதிஷ் மதி என்னும் தேவி விளங்குகிருள்.

ஏ. ³. ஜாலந்த்ரம் (19)

ஸதிதேவியின் மார்பு ப்ரதேசம் விழுந்த இடம். அங்கு அக்னி பகவான் ஜ்வாலேயோடுகூடத் தபஸ் செய்து தேவமுகன் என்னும் பெயர் பெற்ருன். இந்தப் பீடத்திற்கு ஸமீபத்தில் ஜ்வாலாமுகி என்று பெயர் பெற்ற ஓர் உபபீடமிருக்கின்றது. மந்த்ர ஸித்திக்கான புரச்சரணே செய்யும்போது ஜபம், ஹோமம், தர்ப்பணம், ப்ராம்மண போஜனம் என்னும் அங்கங்களேச் செய்யவேண்டியது. இந்த அங்கங்களில் கூறிய ஹோமத்தை ஹோம த்ரவ்யத்துடன் இந்த ஜ்வாலாமுகீ என்னும் ஹோமகுண்டத்தில் செய்தால் மந்த்ர ஸித்தியானது சீக்கிரமாகவே ஏற்படும். கோரக்ஷகர் என்னும் ஸித்தர் இந்த இடத்தில்தான் எட்டு ஸித்தியையும் அடைந்தார். இந்த இடத்தைத் தர்சனம் செய்வதாலேயே எல்லா ஸித்திகளேயும் அடையலாம்.

ঘ. க⁴. மாளவம் (20)

ஸதிதேவியின் இடது தோள் விழுந்த இடம். மாளவம் என்னும் ராகத்தைக் குறிப்பிடும்படியான இந்தப் பீடத்தில் அனேகம் கந்தவர்கள் உபாஸ்தி செய்து ஸங்கீதக் கலேயில் சிறந்தவர்களாஞர்கள்.

ঙ. ங. குலாந்தகம் (21)

ஸதிதேவியின் கக்ஷப்ரதேசமானது விழுந்த இடம். (கக்ஷம் என்ருல் அக்குள்) வித்வேஷணம், உச்சாடனம் மாரணம், முதலான ப்ரயோகங்களே இந்தப் பீடத்தில் அனுஷ்டானம் செய்தால் சீக்கிரம் ஸித்தியைக் கொடுக்கும்.

च. ச. கொட்டகம் (தேவகோடம்) (22)

ஸதிதேவியின் இடது கக்ஷப்ரதேசம் விழுந்த இடம். ராக்ஷஸர்கள் இந்தப் பீடத்தில் தபஸ் செய்து தேவர்களே ஜயிக்கும் ஸித்தியை அடைந்தார்கள்.

ছ. ச.² கோகர்ணம் (23)

ஸதிதேவியின் ஜடரம் (வயிறு) விழுந்த இடம். விசேஷமான பீடம்,

ज. ஜ.³ மாருதேச்வரம் (24)

ஸதிதேவியின் வலி (வயிற்றின் மடிப்பு) விழுந்த இடம். இந்தப் பீடம் சிவ மந்த்ர ஸித்தியைக் கொடுக்கக் கூடியது.

ঝ. ச.⁴ அட்டஹாஸம் (25)

ஸதிதேவியின் வயிற்றின் இரண்டாவது மடிப்பு விழுந்த இடம். கணேச மந்த்ர ஸித்தியைக் கொடுக்கக் கூடியது.

ঞ. ஞ. விரஜ: (26)

ஸதிதேவியின் வயிற்றின் மூன்ருவது மடிப்பு விழுந்த இடம். எல்லா விஷ்ணு மந்திர ஸித்தியையும் கொடுக்கக் கூடியது.

ट. ட. ராஜக்ருஹம் (27)

ஸதிதேவியின் அடி வயிறு விழுந்த இடம். உப வேதங்களின் விசேஷ அறிவைக் கொடுக்கக்கூடியது. ஸதிதேவியின் ஒட்டியாணத்தில் இருக்கும் சிறு சலங்கை விழுந்த இடம் ஓர் உப பீடம். கண்டிகை என்னும் பெயர் பெற்ற இந்த உப பீடத்தில் இந்த்ர ஜால ஸித்தியானது ஏற்படும்.

ठ. ட.² மஹாபதம் (28)

ஸதிதேவியின் ப்ருஷ்டபாகமானது விழுந்த இடம். ஜாதி ப்ரஷ்டர்களான ப்ராம்மணர்களின் சரீரமானது இந்தப்பீடத்தில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது. அவர்கள் ஜன்மாந்த்ரத்தையடைந்து வேதமார்க்கத்திலிருந்து நழுவினவர்களான அதிதேஹ ஸௌக்கியத்தைக் கொடுக்கக் கூடினதான அகோரி மார்க்கத்தை அவலம்பித்து அந்த மார்க்கத்தை நடத்திவைப்பவர்களாக ஆனூர்கள்.

ड. ட.³ கொல்லகிரி (கோலாபுரம்) 29.

ஸதிதேவியின் ஜகனம் விழுந்த இடம். எல்லா வனதேவதா மந்திர ஸித்திகளேயும் கொடுக்கக்கூடியது.

ढ. ட.⁴ ஏலாபுரம் 30.

ஸதிதேவியின் வலது தொடை விழுந்த இடம்.

ण. ண. காலேச்வரம் 31.

ஸதிதேவியின் இடது தொடை விழுந்த இடம், ம்ருத்யும்ஜய மந்த்ரம், ஆயுஸ்ஸைக் கொடுக்கக்கூடியதான மந்திரங்கள் சீக்கிரம் ஸித்தியைக் கொடுக்கும்.

त. த. ஜயந்தீ 32.

ஸதிதேவியின் வலது முழங்கால் விழுந்த இடம். தனுர்வேத ஸித்தியைக் கொடுக்கக்கூடியது.

थ. த.^{2} உஜ்ஜயினீ 33.

ஸதிதேவியின் இடது முழங்கால் விழுந்த இடம். கவச மந்த்ரங்களின் ஸித்தியைக் கொடுக்கக்கூடியது.

द. த.^{3} யோகினீ 34.

ஸதிதேவியின் வலது கணுக்கால் விழுந்த இடம். கௌள மந்த்ரங்களுக்கும் வாம மார்க்க மந்த்ரங்களுக்கும் ஸித்தியைக் கொடுக்கக் கூடியது. இதர மார்க்கங்கள் ஸித்தியைக் கொடுக்காது.

ध. த.^{4} க்ஷீரிகா 35.

ஸதிதேவியின் இடது கணுக்கால் விழுந்த இடம். வேதாள மந்த்ரங்களும் ஸங்கர மந்த்ரங்களும் ஸித்தியைக் கொடுக்கக் கூடியது.

न. ந. ஹஸ்திநபுரம் 36.

ஸதிதேவியின் வலது கால் கறடு விழுந்த இடம். பாதச் சிலம்புவிழுந்த இடம் உபபீடம். நூபுரார்ணவம் என்று பெயர். இந்தப் பீடத்திலும் உபபீடத்திலும் சூரியன் ஸம்பந்தமான மந்த்ரங்கள் ஸித்தியைக் கொடுக்கும்.

प. ப. உட்டீசம் 37.

ஸதிதேவியின் இடது கால் கறடு விழுந்த இடம். ஸாதகர்களுக்கு ஸித்தியைக் கொடுக்கக் கூடியது. உட்டீசம் என்னும் மஹாதந்த்ரத்தின்படி அநுஷ்டானம் செய்பவர்களுக்கு ஸித்தியைக் கொடுக்கக்கூடியது. இடது கால் பாதச் சிலம்பு விழுந்த இடம் டாமரம் என்னும் உபபீடம்.

फ. ப.^{2} ப்ரயாகம் 38.

ஸதிதேவியின் தேஹரஸம் (சரீரத்தின் கொழுப்பு) விழுந்த இடம். இந்த இடத்தில் இருக்கும் (மண்)ம்ருத்திகையானது வெளுப்பாக இருக்கின்றது.

கங்கை யமுனை மத்தியிலும் இரு கரைகளிலும் ஸதிதேவியின் அஸ்திகள் (எலும்பு) விழுந்த இடங்கள் பீடங்களாக ப்ராம்மணர்களால் செய்யப்பட்டது. கங்கையின் கிழக்குப் பக்கத்தில் பகளா முதலான உபபீடங்களும், கங்கையின் உத்தர பாகத்தில் சாமுண்டா முதலான உபபீடங்களும், கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியில் ராஜராஜேச்வரீச்வரம் என்னும் உபபீடமும், யமுனாநதியின் தென் கரையில் புவனேச்வரீ பீடமும் விளங்குவதால் ப்ரயாகையானது தீர்த்தராஜம் என்றும் பீடராஜம் என்றும் கூறப்படுகின்றது.

ब. ப.^{3} ஷஷ்டீசம் 39.

ஸதிதேவியின் வலது குதிகால் விழுந்த இடம். பாதுகா ஸித்தியைக் கொடுக்கக்கூடியது.

भ. ப.^{4} மாயாபுரம் 40 (ஹரித்வாரம்)

ஸதிதேவியின் இடது கால் விழுந்த இடம். தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள் மாயா ஸித்தியைப் பெற்ற இடம்.

म. ம. மலயம் 41.

ஸதிதேவியின் சரீரத்திலிருக்கும் இரத்தம் விழுந்த இடம். ரக்தாம்பரர்கள் முதலான பௌத்தர்களுக்கு ஸித்தியைக் கொடுக்கக்கூடிய இடம்.

य. ய. ஸ்ரீசைலம் 42.

ஸதிதேவியுன் சரீரத்தின் பித்தம் விழுந்த இடம். எல்லா மந்த்ரங்களும் ஸித்தியைக் கொடுக்கும். விசேஷமாக வைஷ்ணவ மந்த்ரங்கள் ஸித்தியைக் கொடுக்கும்.

र. ர. மேரு 43.

ஸதிதேவியின் மேதஸ்ஸு விழுந்த இடம். ஸ்வர்ணாகர்ஷண பைரவ மந்த்ரம் ஸித்தியைக் கொடுக்கும். (மேரு என்பது ஹிமாலயத்தின் ஒரு கொடுமுடி)

ल. ல. கிரிபீடம் 44.

ஸதிதேவியின் ஜிஹ்வாக்ரம் விழுந்த இடம். இந்தப் பீடத்தில் ஜபம் செய்தால் வாக்ஸித்தி ஏற்படும். (ஜுன காட்டில் கிரிணர் என்று கூறுவார்கள்.)

व. வ. மாஹேந்த்ரம் 45.

ஸதிதேவியின் சரீரத்தின் மஜ்ஜா விழுந்த இடம். எல்லா சக்தி மந்த்ரங்களுக்கும் ஸித்தியைக் கொடுக்கும்.

श. ச. வாமனம் 46.

ஸதிதேவியின் பெருவிரல் (வலது) விழுந்த இடம். இந்த இடத்தில் ஜபம்

செய்தால் மந்த்ரிகளின் முக்யமான இடத்தைப் பெறலாம்.

ஷ. ஷ. ஹிரண்யபுரம் 47.

ஸதிதேவியின் இடது கால் பெரு விரல் விழுந்த இடம். வாமமார்க்க ஸித்தியை அடையலாம்.

ஸ. ஸ. மஹாலக்ஷ்மீபுரம் 48.

ஸதிதேவியின் ருசியானது விழுந்த இடம். ஸர்வஸித்தியையும் கொடுக்கக் கூடியது.

ஹ. ஹ. அத்ரிஸ்தானம் 49.

ஸதிதேவியின் நரம்புகள் விழுந்த இடம். கண் பார்வைக்குத் தெரியக் கூடியன எவ்வளவு ஸித்திகளுண்டோ அவ்வளவும் அவ்விடத்தில் ஏற்படும்.

ள. ள. சாயாபீடம் 50.

ஸதிதேவியின் சரீரத்தின் நிழல் தெரிந்ததனுல் சாயாபீடம் என்று பெயர் வந்தது.

க்ஷ. க்ஷ. சத்ரடம் 51.

ஸதிதேவியின் கேசபாகம் விழுந்த இடம். இவ்விடத்தில் ஸித்திகள் சிக்கிரமாகவே ஏற்படும்.

இவ்விதம் மேரு தந்திரத்தில் கூறின விதம் ஐம்பத்தொன்று பீடங்கள். நித்யாஷோடசிகார்ணவம், ஞானூர்ணவம் முதலான க்ருந்தங்களில் ஒன்றிரண்டு பீடங்களின் பெயர் மாறுதலாகக் கூறப்பட்டிருக்கின்றது.

சில தந்த்ரங்களில் சாயாசத்ரம் ஒரே பீடமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அப்போது ஒரு பீடம் குறைவு வருவதால் அதற்குப் பதிலாக ஜலேசம் என்று கூறப்பட்டிருக்கின்றது.

இதில் கூறப்பட்டிருக்கும் பீடங்கள் எங்கு இருக்கின்றன? இந்த ஸமயத்தில் எந்தப் பெயரால் அந்தப் பீடங்கள் அழைக்கப்படுகின்றன என்று தெரியவில்லை. தெரிந்தவரையில் நான் எழுதியிருக்கின்றேன்.

ஒரு ஸமயம் மூலக்ரந்தத்தைத் தற்சமயம் காமகோடி பீடத்தில் விளங்கும் காமாக்ஷி ஸ்வரூபமான பெரியவர்களுக்குப் படித்துக் காண்பித்தேன்.

அப்போது அவர்கள் த்ரிஸ்ரோதஸ் என்றுல் முக்கூடலாக இருக்கலாம் என்று அருள் செய்தார்கள். ஏனென்றுல் ஏகாம்ரம், த்ரிஸ்ரோதஸ், காமகோடி இம்மூன்றும் சேர்ந்தாற்போல் இருப்பதால் முக்கூடலாகத்தான் இருக்கலாம் என்று அருள் செய்தார்கள். பிறகு நான் 'காஞ்சி மஹிமை' என்ற புஸ்தகம் பார்த்தபோது சின்னக் காஞ்சிபுரத்திற்கு த்ரிஸ்ரோதஸ் என்று ஒரு பெயர் இருப்பதைப் பார்த்தேன்.

செம்பொற் கோயில்

புலவர் பு. மா. ஜயசெந்தில்நாதன், M. A.

எல்லாவுலகங்களும் இறைவனின் விளக்கமே. இறைவனே எல்லாவுயிர்களிலும், பொருள்களிலும் உட்பொருளாய், நுண்ணியனாய் விளங்குகின்றான். எனினும் இறைவன் சிறப்பாக எழுந்தருளியிருக்கின்ற இடங்கள் திருக்கோயில்களேயாகும். பண்டைக்காலத்தில் ஊரின் அமைப்பில் கோயில்கள் பொருத்தமான இடத்தைப் பெற்றிருந்தன.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.''

''திருக்கோயில் இல்லாத திருவிலூரும்........அடவிகாடே'' என்பன போன்ற அருள்மொழிகள் ஆலய வழிபாட்டை வலியுறுத்த எழுந்தனவேயாம். எல்லாக் கோயில்களும் சிறப்புடையனவே. எனினும் அவ்வக்காலங்களில் நிகழ்ந்த, நிகழ்த்தப்பெற்ற அற்புதச் செயல்களாலும், அமைப்பாலும், தவப்பெருமையாலும் சிற்சில கோயில்கள் பிறவற்றிலும் மிக்க சிறப்புற்றுத் திகழ்கின்றன, அத்தகைய கோயில்களுள் காஞ்சியில் உள்ள 'திருவேகம்ப'மும் ஒன்றாகும்.

''செங்கனி வாய்த் திருக்காமக் கோட்டியாம்'' ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் திருக்கோயிலின் திருக்குட முழுக்கு விழாவின் மலராக வெளிவரும் இம் மலரில் திருவேகம்பத்துச் செல்வனைச் சிந்தித்தலும் பொருத்தமே.

தொண்டை நாடு கல்விக்குப் பெயர் பெற்றது. அங்ஙனமே வாய்மைக்கும் இருப்பிடமாகத்திகழ்ந்தது. ''தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து'', ''வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை தொட்டாரே!'' என வருந் தொடர்கள் இக் கருத்தை வலியுறுத்துவன. இதற்குச் சிறப்புடைய தொண்டை நாட்டின் கண்ணாகத் திகழ்கின்ற தலம் கச்சிப்பதி—காஞ்சிபுரம். பாலாற்றின் வடபால் அமைந்திருக்கும் இத்தலம் ஒருகால் எல்லாச் சமயங்களும் பெருகியிருந்த சமயப்பொதுவிடமாகத் திகழ்ந்தது. அவ்வவற்றுக்குரிய அடையாளங்கள் இன்னும் இத்தலத்தே உள்ளன.

பிரமனால் வழிபடப்பெற்ற இத்தலம் அற்புதத் திருக்கோயில்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. அன்னை ஸ்ரீகாமாக்ஷி அம்பாளின் அருட்சத்திபீடமும், ஏகாம்பர நாதப் பெருமான் ஆலயமும், சிற்பங்கள் மலிந்திலங்கும் கைலாச நாதர், வைகுண்ட பெருமாள் கோயில்களும், அத்திகிரி அருளாளரின் ஆலயமும், சொன்ன வண்ணஞ்செய்த பெருமாள் கோயிலும், வாமனத்திலிருந்து விசுவரூபமெடுத்து உலகினையளந்தான் திருக்கோயிலும் அவற்றுள் சில;

'கலைமலி காஞ்சி' என்னுந்தொடர் போல, 'கோயில்கள் மலிகாஞ்சி' என்னும் தொடரும் இதற்குப் பொருத்தமே.

வசிக்க முத்திதரவல்ல இத் தலம் பிருதிவித் தலமாகும். பெருமான் ஏகாம்ரநாதர். சிவலிங்கம்-மூலலிங்கம் மணல் லிங்கமாகும். தலமரம் மாவடி, ஏக+ஆம்ரம்→ ஏகாம்ரம்→ ஏகாம்பரம், ஏகம்: ஒன்று. ஆம்ரம்: மாமரம். ஏகாம்ரம்: ஒற்றை மாமரம். மாமரத்தின் கீழ் இறைவன் லிங்கவடிவில் வந்து தோன்றியமையின் ஏகாம்ரநாதர் எனப் பெயர் பெற்றார். மக்கள் வழக்கில் இப் பெயரே ஏகாம்பரநாதர் என்று வழங்குகின்றது. திருமுறைகளில் இத் திருக்கோயில் 'கச்சியேகம்பம்', 'திருக்கச்சியேகம்பம்', 'திருவேகம்பம்' என்றே குறிக்கப்படுகிறது.

காஞ்சி மண்டலம் முழுமைக்கும் தேவி, ஜகன்மாதா ஸ்ரீகாமாக்ஷியே ஆவாள். இத்தலம் சக்தி பீடமாதலின் எந்தச் சிவாலயத்திலும் தனியாகத் தேவி சந்நிதி கிடையாது. எனினும் அவ்வக் கோயில்களில் வழிபடும் வடிவமாகக் காமாக்ஷியின் திருவடிவையே பல பெயர்

களில் போகசக்தியாக எழுந்தருளச் செய்வது மரபு. இம் மரபின்படி திருவேகம்பத்து உள்ள வழிபடு தேவி வடிவம் 'ஏலவார் குழலி' என்பதாகும், எனினும் இன்னும் எக்காலத்தும் எல்லா விழாக்களிலும் வழங்கும் மரபு 'ஸ்ரீகாமாக்ஷிதேவி உடனுறை திருவேகம்பப் பெருமான்' என்பதே.

மூலலிங்கம் - ஏகாம்பரநாதர் சந்நிதி விசாலமானது. தொலைவில் நின்று பார்ப்போருக்கும் நன்கு காட்சிதரும் முறையில் மூலவர் சந்நிதி அமைந்துள்ளது. வேதமாகிய மாவடியின் கீழ் வேதத்திற்குத் தலைவராகிய பெருமானே சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். சைவசமய ஆசாரியர்கள் நால்வரும் இப் பெருமானைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

''கருவார்கச்சித் திருவேகம்பனை வணங்குவோர்க்கு வினைகள் வந்து சேரா'' என்பார் திருஞானசம்பந்தர்.

இத்தலத்துப் பெருமானை 'எப்போதும் இனியவனாக' அநுபவித்து, ''கண்ணிலுண்மணி கச்சியேகம்பனே'' என்று போற்றுகின்றார் திருநாவுக்கரசர்.

''ஏலவார் குழலாள் உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற, காலகாலனைக் கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே'' என்று வாயாரப் புகழ்ந்து மனமுருகிப் பாடித் துதிக்கும் சுந்தரமூர்த்திகளின் அமுத வாக்கின் ஆற்றலை என்னென்போம்!

''ஏதலூர் தங்கா வாதவூர் கோமான்'' இப்பெருமானையும் கோயிலையும் சொல்லும்போது, ''தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்'' என்று தம் திருவாசகத்துள் போற்றுகின்றார்.

'தேசமெல்லாம் புகழ்ந்தாடும்' என்று பாடும் மணிவாசகர் தொடருக்கு ஒப்ப அப்பர் வாக்கும் நம் நினைவுக்கு வருகிறது. அப்பர் பெருமான் தம் திருத்தாண்டகம் ஒன்றில், ''எல்லாவுலகமும் ஆனாய் நீயே, ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே' என்று பாடுகின்றார். இவ்விரு தொடர்களிலும் கருத்தொற்றுமையை நம்மால் காணமுடிகிறதல்லவா! 'செம்பொற்கோயில்' என்றதனால் கோயிலின் அழகும் பெறப்படுகின்றது.

மாவடி வைகும் பரமனான ஏகாம்ரநாதனை நாம் அனைவரும் வழிபட வேண்டும் என்பதை நமக்குணர்த்தும் வகையில் காமாக்ஷியே (அம்பிகையே) சிவபூசை செய்யுந்தலம் இஃதொன்றே. வழிபாட்டு மேன்மையை உணர்த்துவதன்றிச் செய்தும் காட்டுகின்ற செம்மை இத் திருக்கோயிலுக்கே உரியதொன்றாகும். அவ்வாறு செய்த தேவிக்குப் பெருமான் மாவின் மூலத்து வந்து தோன்றிய தகைமையைச் சேக்கிழார் அருமையாகப் பாடுகின்றார்.

தலமாகிய மாவடி அளவற்ற பெருமையுடையது, வேதமே மாமரம். நான்கு வேதங்களும் நான்கு கிளைகள். இத்தல மரம் வேத வடிவாதலின் இதன்மீது ஏறுவதற்கு அநுமதி இல்லை. இம் மாவடியின் சிறப்பைக் காஞ்சிப் புராணத்துள், ஆசிரியர் சிவஞானமுனிவர் பலபடப் போற்றிப் பாடியுள்ளார். இங்குப் பெருமான் சோமாஸ்கந்த வடிவில் வீற்றிருக்கின்றார். கையில் சின்முத்திரைக் கோலம். கீழே பதஞ்சலி, வியாக்ரபாதர் வடிவங்கள். அதற்குக் கீழ் ஒருபுறம் பஞ்சாக்னி நடுவில் தபஸ் காமாக்ஷி வடிவமும், மறுபுறம் இலிங்கோற்பவ வரலாறும் உள்ளன. இவ்விடம் சிறந்த பிரார்த்தனை இடம்.

தழுவக் குழைந்த பிரான்:

கைலையில் இறைவன் பின்நின்று விருப்புடன் தேவியார் பெருமானின் திருக்கண்களை மூடினார். உலகங்கள் இருளில் மூழ்கின. ஒருகண நேரம் உலகங்களுக்குத் துன்பம் நேர்ந்தமையின் அதற்குக் கருவாயாகப் பெருமானின் ஆணைப்படி தேவியார் காஞ்சி வந்து கம்பையாற்றின் கரையில் மாவடியின் கீழ் மணலால் இலிங்கம் அமைத்துப் பூஜைசெய்து வழிபடத் தொடங்கினார். ஒருநாள் வழிபாட்டின்போது வெள்ளம் வருமாறு பிரான் அருள, அதைக் கண்டு மனங்கலங்கி, ''ஒரு பொற்கொடி வளர்ந்து தன் இரு தளிர்களாலும் இரு புறங்களிலும் மேருமலைச் சிகரத்தைத் தழுவிக்கொண்டாற் போலத் தேவி விரைந்தெழுந்து சிவலிங்க பீடத்தின் மேல் தன் வலது முழந்தாளை ஊன்றிப் பெருமானைத் தம் இரு கைகளாலும் இறுகத் தழுவிக்கொண்டார். பெருமானும், பெருமாட்டியின் தழுவுதலுக்குக் குழைந்து காட்டினார். அன்றுமுதல் பெருமான் 'தழுவக் குழைந்த தலைவர்' ஆயினார். இந் நிகழ்ச்சியை உள்ளத் தெண்ணிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

''எங்கள் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள்போல்
உள்ளத்துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவியோடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே''

என உள்ளமுருகப் பாடிப் போற்று கின்ருர்.

காமாக்ஷி தேவியார் இறைவனிடம் இரு நாழி நெல் பெற்றுக் காஞ்சியில் எண்ணுன்கு (8+4=32) அறங்களையும் வளர்த்து வந்தார், இதுபற்றியே அம்பாளுக்கு 'அறப்பெருஞ் செல்வி' என்றும் பெயர் வழங்கலாயிற்று. இதற்குச் சான்ருக இத்தலத்தில் 'அறப்பெருஞ் செல்வித் தெரு' என்று ஒரு வீதியிருப்பதும் கண்கூடு. காமக்கோட்டத்திலிருந்து அறம் வளர்க்கும் அம்பாளின் தகைமையைச் சேக்கிழார் பெருமான் மிகவும் அருமையாகப் பாடுகின்ருர்.


''எண்ணரும் பெருவரங்கள்முன் பெற்றங்
கெம்பிராட்டி தம்பிரான் மகிழ்ந்தருள
மண்ணின்மேல் வழிபாடு செய்தருளி
மனையறம் பெருக்குங் கருணையினுல்
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க
நாடுகாதலின் நீடிய வாள்க்கைப்
புண்ணியதிருக்காமக் கோட்டத்துப்
பொலியமுப்பதோடிரண்டறம்புரக்கும்.''

(பெரியபுராணம்; 1153)

ஜகன்மாதாவாக எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் ஸ்ரீகாமாக்ஷி தேவியையும், திருவேகம்பப் பெருமானையும், இக்காலத்துக் கண்கண்ட தெய்வமாய் விளங்கி நமக்கெல்லாம் அருள்பாலித்து வரும் காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் திருவடிக் கமலங்களையும் தரிசித்து, இறையருளும் குருவருளும் துணைநிற்க நன்னெறி யொழுகிப் பிறவிப் பயனைப் பெறுவோமாக!

நித்யஸுகம், அல்பஸுகம் என இரண்டு ஸுகம் உண்டு. இதைப் பகுத்தறிவது கஷ்டம். ஜலமும் பாலும் கலந்தாற்போல இது ஒன்ருக இருக்கும். ஹம்ஸ பக்ஷியைப்போன்ற விவேகியே இதைப் பிரித்து அறிவான். நித்தியஸுகம் மோக்ஷம்: அல்பஸுகம் ஸம்ஸாரம், இவ்வுலகைத் தவிர பரலோகமில்லை என்று சொல்பவன் அடிக்கடி இறந்து, பிறந்து, யமன் வசமாகிருன்.

—ஸ்ரீசங்கரபகவத்பாதர்.



ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோயில் கோபுரங்களின் தூர தோற்றம்

மாட்சிகொள் காமாக்ஷி

ரா. கணபதி

காமாக்ஷியின் மஹிமையையும், கருணையையும், கவினழகையும் எழுதி முடியுமா?

சிவாலயங்களுக்கெல்லாம் பிரதானமாகச் சிதம்பரம் 'கோயில்' என்றே பெயர் பெற்றிருப்பதுபோல், விண்ணகர (விஷ்ணு க்ருஹ)ங்களுக்கெல்லாம் முக்கியமாக ஸ்ரீரங்கம் 'கோயில்' எனவே வழங்குமாப்போல், சக்தி ஆலயங்களுக்கெல்லாம் மூலமாக முடியணியாக ஒன்றைச் சொல்லலாம் எனில் அது காம கோஷ்டம்—காம கோட்டம்—தானே?

மன்மதனுக்குச் சிவபெருமான் மீது வெற்றி ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதற்காக ஒரு சமயம் பரதேவி, சகல ஆலயங்களிலுமுள்ள அம்பிகைகளின் ஜீவகலைகளையெல்லாம் இக் காம கோஷ்டக் கருவறைக்குள் தான் ஆகர்ஷித்துக்கொண்டு காமதஹனனைக் காமாவஸ்தைக்கு ஆளாக்கினள். பிறகு அவர் மதனனின் வெற்றியை ஒப்பியவுடன், இங்கிருந்தே அந்த ஜீவகலைகளைப் புதுச் சக்தியுடன், முன்னிலும் பொலிவுடன் அந்தந்த ஸ்தலங்களுக்குத் திருப்பி அனுப்பினள். ஆகவே இன்று எந்த அம்பாள் சந்நிதியில் நாம் நுகரும் அபரிமித அருளாற்றலும் ஒரு காலத்தில் காம கோஷ்டத்தில் தங்கியிருந்து அங்கேயே புதுப் போஷாக்குப் பெற்றவைதாம். இதனால் தான் அம்பாள் ஸந்நிதி எதற்குமே 'காம கோஷ்டம்' என்ற பெயர் வழங்கப்படுகிறது.

மானஸாரம் என்ற சில்பசாஸ்திரம் தேவீ ஸந்நிதியமைப்பைக் கூறத் தொடங்குகையில், ''காம கோஷ்ட விதிம்வக்ஷ்யே'' (படலம் 65. ச்லோ 1) என்றே சொல்வது குறிப்பிடத்தக்கது.

சிதம்பரம், திருவொற்றியூர், திருப்பழனம், கோயிலாடி. திருக்காட்டுப்பள்ளி, அவிநாசி. விஜயமங்கலம், திருப்பாலைவனம், வல்லம், ஹஸ்திகிரி ஆகிய ஆலயக் கல்வெட்டுக்களிலே அந்தந்த க்ஷேத்ர அம்பாள் ஸந்நிதியைக் காமகோட்டம் என்றே வர்ணித்திருக்கிறது. அப்பர் ஸ்வாமிகள் திருஅதிகையிலும், ஞானசம்பந்தர் திருஇரும்பூளை [ஆலங்குடி]யிலும், காமகோட்டியைப் பாடியுள்ளனர். இவர்களோடு சுந்தரமூர்த்தியும் கச்சியிலேயே உள்ள ஓணகாந்தன் தளியில் காம கோட்டத்தைப் போற்றுவதால், மூவரும் நாவாரத் தேவாரம் இசைத்த பெருமை நம் தேவி காமாக்ஷிக்கே உரித்தாகிறது.

'திவாகரம்' என்ற நிகண்டுவில், தெய்வப் பெயர்த் தொகுதியில், ''காமகோட்டி, அம்பிகை, கௌரி, ஆரியை, சக்தி, அயிராணி, பார்வதி, இமயவல்லி, உமையவள் பேரே'' என்பதாகக் காம கோட்டியே தேவீ நாமங்களில் முதலிடம் கொள்கிறாள். அவளது மிகப் பிரசித்தமான அம்பிகை, கௌரி, சக்தி, பார்வதி, உமை என்ற பெயர்களும் இதன் பின்னரே கூறப்படுகின்றன.

பிரபஞ்ச மத்தியும், காஞ்சி மத்தியும் ஜீவனின் ஹ்ருதய மத்திக்கு ரூபகமாக, அப்படிப்பட்ட பரம புண்ய ஸ்தானத்தில் பரப்பிரம்ம சக்தியின் பரமங்கள ரூபமாகக் காமாக்ஷி அமர்ந்து அகிலாண்ட சராசரங்களை மாட்சியுடன் ஆட்சி புரிந்து வருகிறாள். தன் காட்சியாலாயே இந்தப் பிரபஞ்ச நாடகத்திலிருந்து மீட்சியும் தருகிறாள் கருணைகடாக்ஷியாம் காமாக்ஷி.

இப்படிச் சொன்னால் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றுகிறது: அதாவது பிரபஞ்சத்தை இயக்குபவளே அதினின்று விடுவிக்கவும் செய்கிறாள் என்றால் எதிரெதிர் துருவங்களான காரியங்களைச் செய்வதாக ஏற்படுகிறது. இதுவேதான் ஆதி ஆசார்யர்கள் நயம்படக் கூறும் அவளது, ''துரதிகம நிஸ்ஸீம மஹிமா''

—அதாது ''அறிதற்கரிய எல்லையிலாப் பெருமை.''

பிரம்மம் பரமசாந்தமாக எச்செயலும் அற்று, தன்னில் தானாக இருக்கிறது. அதே போதில் மஹாசக்தியுடன் இத்தனை ஜீவஜடப் பிரபஞ்சங்களைச் சிருஷ்டித்து, அவர்களைத் தன்னில் வேறுபோல் எண்ணச்செய்து, ஆட்டிப் படைத்துக் கொண்டுமிருக்கிறது. ஜீவர்களின் நல்ல எண்ணங்கள், நல்ல உள்ளுணர்ச்சிகள், நல்ல உந்துதல்கள் ஆகியவற்றைப் போலவே தீய எண்ணங்கள், தீய உள்ளுணர்ச்சிகள், தீய உந்துதல்கள் யாவற்றுக்கும் கூட அதே மஹாசக்திதான் காரணமாக இருக்கிறது. நல்லதின் அழகு பொலிவெனப் புலனாகவே இத் தீமை உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் மனித மனங்களைச் சுதந்தரமாக விட்டிருப்பதுபோல் அது விளையாட்டுக் காட்டும்போது, மக்கட்குலமானது சுயநலனை விரும்பித் தீமையிலேயே அதிகம் பாய்கிறது. இதன் விளைவாக, தண்டனையாக, துக்கத்தையே அதிகம் அநுபவிக்கிறது. இந்தத் துக்கத்தை நீக்கி நித்யானந்தப் பெருவாழ்வை நல்க மஹாசக்தி பல திவ்ய ரூபங்களைத் தரித்து வந்து அநுக்கிரஹம் புரிகிறது. அது துக்க நிவிருத்தியைப் பல விதங்களில், பல மட்டங்களில் செய்கிறது. ஒரு நிலையில் லௌகிக இன்பங்களை வழங்கி அதன் மூலமே லௌகிகத் துன்பங்களைப் போக்குகிறது. இன்னொரு நிலையில் இப்படிப்பட்ட உலகியல் நலன்களை நல்காமலே, துன்பத்தைத் தாங்கவும், அதைப் பொருட்படுத்தாமலிருக்கவும் செய்கிறது. ஒரு நிலையில் உலகு முழுதும் தன் அலகிலா லீலை இலகு அற்புதம் என உணர்வித்து, பக்தியின்பத்தில் ஆழ்த்துகிறது. இன்னொரு நிலையில் உலகம் முழுதும் தன் மாயமே என உணர்வித்து, இம் மாயத்தை அடியோடு அகற்றி, மூலமாம் அத்வைத ஞானாநுபூதியில் ஈடுபட்டிருக்கச் செய்கிறது.

இவ்வாறு பலவகைப்பட்ட, ஒன்றுக்கொன்று முரணாகவும் தோன்றுகிற, திருவிளையாடல்களைப் புரிவதில் காமாக்ஷிக்கு இணையில்லை.

ஸ்ரீ வித்யா சாஸ்திரமானது காமகலா எனப் போற்றும் பூர்ண ப்ரம்ம சக்தியே காமாக்ஷி எனும்போதே சிலருக்கு முரண்பாடு தோன்றி முகம் சுளிக்கிறார்கள். ஜீவனின் பரமவிரோதி காமம்தான் என்பதால் காமகலா என்றவுடன் அருவருப்புத் தட்டுகிறது. மூலத்ரிகோணம் முதலிய மந்த்ர—யந்த்ர - தந்த்ரவிஷயங்களும் இந்தப் பொல்லாக் காம சம்பந்தமாகவே தோன்றிப் பீபத்ஸத்தை உண்டாக்குகின்றது. இனி புராண ரீதியில் பார்த்தாலும் காமாக்ஷியானவள் பரமேசுவரனை விரஹதாபத்தில் துடிக்க வைத்தாள், மன்மதனுக்குப் புத்துயிரும் புது வடிவும் தந்ததோடு அவன் சிருபெருமானையே வெற்றிகொள்ளுமாறு அருள் புரிந்தாள் என்றெல்லாம் பார்க்கும் போது, இதெல்லாம் ஆன்மிகம், தெய்விகம் என்பனவற்றுக்கு முற்றிலும் முரணாக இருப்பதாகவே, தத்துவங்களை உள்ளபடி உணராதாருக்குத் தோன்றலாம். வெறும் மனோதத்துவ ரீதியில் மட்டும் மத விஷயங்களை அலசும் நவீன ஆராய்ச்சியாளர்கள், 'புலன் கடந்த ஆன்மநெறிக்கு முயன்ற ஹிந்துக்கள், இப் புலன்களின் உந்தல்களை மீற முடியாமலே அவதிப்பட்டு, இவ்வுந்தல்களைத் திருப்தி செய்து கொள்ளவே லிங்க ஆராதனை, சாக்த தந்த்ரங்கள் ஆகியவற்றை உண்டாக்கிக்கொண்டு, அவற்றுக்குப் பெத்தப் பெயர் கொடுத்து ஏமாற்றுகிறார்கள்' என்று சாடுவது உண்மைதானோ என்று மயங்கவும் செய்யலாம். நம்மாழ்வார், மணிவாசகர் முதலிய பரம அத்வைதிகளிலிருந்து, ஸமீபத்து அத்வைதாவதாரமான ஸ்ரீரமண மஹரிஷிகள் வரையிலான மஹான்கள் நாயிகா பாவத்தில் பாடியிருப்பதையும் இவ்விதமே நா கூசாமல் வியாக்கியானம் செய்பவர்களும் உண்டு,

ஆனால் உண்மையில் இந்தக் காமகலையின் அர்த்தம் என்ன? ''ஸோகாமயத'' என்று ச்ருதி கூறுகையில், எவ்வாறோ அசலமான நிர்க்குணப் பிரம்மத்திலும், சிருஷ்டி செய்து தன்னைப் பலவாகக் காட்டவேண்டும் என்கிற காமமான சலனம் ஏற்பட்டதைச் சொல்கிறது. காமம் என்பது எல்லா ஆசைகளையும் இச்சைகளையும் குறிப்பது. பிரம்மம் இக் காமத்துடன் கூடிப் பிரபஞ்ச வியாபாரத்தை நடத்துகிறது. அந்தச் சமயம் அதற்கு இன்னொரு இச்சையும் உள்ளது. தான் ஏற்படுத்திய புலன் மனம் இவற்றின் உந்தல்களிலிருந்து ஜீவர்களை விடுவித்துத் தன்னோடு அவர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற ஆசையே இது. இப்படி மூலத்தோடு சேர்ந்திருப்பதில் இருவகை உண்டு. காணும் யாவும் அம்மூலத்தின் தோற்றமே என்பதாகக் காட்சியை ஒப்பி ரஸிக்கும்

பக்திநிலை ஒன்று. மற்றது, காட்சியும் காண்பவனுக்கு அந்நியமாயில்லாமல் ஒன்றி மறைந்துவிட்ட ஞான ஸமாதி.

இவ்வாறாகப் பிரம்மத்துக்கு உள்ள சிருஷ்டி ஆசை, சிருஷ்டித்ததைத் தன்னுள் லயப்படுத்திக்கொள்ளும் ஆசை, இரண்டுமே காமகலா ரூபகமாக அநுபூதிமான்களுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது. உலகியல் வாழ்க்கையில் தாம்பத்தியம் என்று ஏற்பட்டிருப்பது பிரம்ம சக்தியின் நிர்மிதம்தான். இந்தச் சேர்க்கைக்கு மூலம் பிரப்பிரம்மம் மேற்சொன்ன காமத்தோடு சேர்ந்து நடத்தும் அதிசய தாம்பத்தியம்தான். உலக தாம்பத்தியத்தால் உந்தப்பட்டு மூலத் தத்துவத்தையும் காம கலாவாக்குகிறார்கள் என்று கூறும் மனோதத்துவ 'மேதாவி'கள், பிரதிபிம்பத்திலிருந்து மூல பிம்பம் உண்டாயிற்று என்று கூறும் அனர்த்தத்தையே செய்கிறார்கள். வாஸ்தவத்தில் புருஷ ஸூக்தாதிகளிலிருந்து ஏற்படுவது யாதெனில், நாம் காண்கிற பிரபஞ்ச வாழ்வு முழுதுமே பிரம்ம கற்பனையில் உண்டான தத்வ ரூபகங்கள் (symbols) தான். இவற்றில் பல ரூபகங்கள் பராசக்தியின் கண்ணாமூச்சி விளையாட்டில் மூலத் தத்துவத்தையே மறைக்கிற அளவில் திரிந்து உருமாறி விடுகின்றன. இப்படித்தான் புனிதமான தத்துவ காம கலாவானது மனித வாழ்வில் நீசமானதாகிவிடுகிறது. ஆனாலும் ஸம்ஸ்காரங்களால் சுத்திகரிக்கப்பட்ட ஜீவாத்மாக்கள் மஹாத்மாக்களாகிறபோது, சாக்த தந்த்ர அநுபவிகளாகிறபோது, அல்லது மாணிக்கவாசகர் போன்ற ஞான பக்தக் கவிகளாகிறபோது பிரம்மத்தின் சிருஷ்டி-லய சிருங்காரத் தூய்மையை அவர்கள் நன்கு உணர்ந்து, அதில் ஆழத் திளைக்க முடிகிறது. சிருஷ்டி காமம், லய காமம் என்று இரண்டு காமங்கள் இல்லை. பிரம்மத்தின் ஒரே காமம்தான் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப்போல சிருஷ்டியாகவும் லயமாகவும் உள்ளது. இக்காமத்தைத் தாண்டிவிட்ட மஹாசக்திதான் கருணை, கிருபை, அருள், அநுக்கிரஹம், தயை, ப்ரேமை என்றெல்லாம் சொல்லப்படும் பரம மதுரமான அன்பு. தன்னில் தானான பிரம்மத்தில் எப்படியோ அன்பு என்ற அமுதக் கடல் வெடித்துப் பொங்கிவிட்டது. பிரேமை எனில் அதைப் புரிபவர் என்றும், அதற்குப் பாத்திரராகிறவர் என்றும் இருவர் இருந்துதானே ஆக வேண்டும். இதற்காகத்தான் மூலப் பரம்பொருள் தன்னையே அன்பைப் புரிகிற ஸகுணப் பிரம்மம் என்றும், அதைப் பெறும் ஜீவ-ஜடப் பிரபஞ்சம் என்றும் இரண்டுபோல் தோற்றுவித்துக்கொண்டது. விலகியிருந்து பின் சேர்ந்தாலே அன்பின் பூர்ண ருசி விளங்கும் என்பதால் ஜீவர்களை விலக்கி வைக்கிற இந்திரிய-மனோ விகாரங்களை உண்டாக்கியது. விகாரப்பட்டவர்கள் அடியோடு விநாசமாகி விடாதிருக்கவே திவ்ய ரூபங்களாலும், அவதாரங்களாலும், ஆசார்ய புருஷர்களாலும் அன்பின் அழைப்பை விடுக்கிறது.

பிரம்மத்தில் இந்தக் காமத்தைத் தாண்டிவிட்ட கருணைப் பெருஞ்சக்தியே காமாக்ஷி. காமத்தின் அச்சு (axis) தான் காமாக்ஷி. ஆதியில்—கால தத்துவமே இதன் பின்தான் பிறந்தது என்பதால் அதை ஆதி என்பதும் கூடப் பொருந்தாதுதான்-பிரம்மத்தில் இக்காமத்தைத் தூண்டிவிட்டவளே, பிற்பாடும் பிரபஞ்சலீலை போதும் என்பதுபோல் பிரம்ம சிவன் மன்மத தஹனம் செய்துவிட்டு மோனத்து ஆழ்ந்தபோது, ''என்ன, அன்பை மறப்பதாவது? த்வைதம்போல் பாவித்து அன்பு செலுத்தும்போதும், உள்ளூற மோன ஸமாதிச் சுனை பொசிந்து கொண்டேதானே இருக்கிறது? இரண்டுந்தான் வேண்டும்'' என்று அதை மறுபடி லீலாவிநோதத்தில் வலிந்து தள்ளுகிறது. இதுவே அதன் காவ்ய ரூபகத்தில் காமேச்வர காமேச்வரி திருக்கல்யாணமாகிறது.

அன்புக்கு ஆஸ்பதமாகப் பிரபஞ்ச லீலை நடக்கவேண்டுமெனில், மக்கள் தாம்பத்தியத்தில் ஈடுபடத்தான்வேண்டும். அவர்களுக்கு இதிலே எப்போது பார்த்தாலும் குற்ற வுணர்ச்சி (Guilty concious) இருக்கலாகாது எனக் காமாக்ஷியின் தாயுள்ளம் எண்ணுகிறது. ''தர்மத்துக்கு விரோதமில்லாத காமமாக நான் இருக்கிறேன்'' என்ற கீதாவாக்கியப்படி, அவளுடைய லீலானந்தத்தில் மக்கள் முதலில் கட்டுப்பட்டு இல்லறம் செய்வதில் தவறில்லை. இதில் பக்குவமான பிறகு அவளே இந்த லோக தர்மத்துக்கு மேற்பட்ட நிலைக்குத் தூக்கி விடுவாள். இதனால்தான் காமத்தை அடியோடு நீசமாக எண்ணிப்பொசுக்கி விட்ட பரமேசுவரனையே ஜீவராசிகளுக்கெல்லாம் முன்னுதாரணமாகக் கருதி அவனையும் மன்மதாவஸ்தைக்கு ஆளாக்கினாள். லோகத்துக்காக ஸ்ரீராமன் ஸீதா தேவியை அக்னிப் பரீக்ஷை செய்ததுபோலவே, தேவி ஈசனை காமாக்

ளியில் வறுத்து, காமனிடமே அவனுக்கு அபஜயத்தை வாங்கித் தந்தாள். இதில் அவள் செய்த தியாகம் பெரிதா, ஈச்வரன் செய்த தியாகம் பெரிதா என்றே சொல்ல முடியாதுதான்.

இதற்குப் பின் அவளே காமனுடைய கரும்பு வில்லையும் மலரம்பையும் தாங்கிக் காஞ்சிபுராதீச்வரியாக அமர்ந்து விட்டாள். இது எதற்காக? மன்மதன் இத் தனுசையும் பாணங்களையும் அளவு மீறிப் பிரயோகித்து ஜீவர்கள் தர்மம் மீறியும் தறிகெட்டும் போகச் செய்கிறான். அம்பாளோ அவர்களது ஐம்புலன்களைத் தர்மத்தில் கட்டுப்பட்டு நிறுத்தவே புஷ்ப பாணங்கள் ஐந்தினையும், அவர்களுடைய மனத்தை அறத்தில் அடக்கிக் கொண்டு வரவே கரும்பு வில்லையும் தாங்கியிருக்கிறாள். பிறகு பக்குவ உச்ச நிலையிலே, தர்மத்தில் கட்டுப்பட்டு அதற்கிணங்கச் செயலாற்றும் இம்மனத்தையும் புலனையும் அடியோடு செயலிழக்கச் செய்து தன்னில் தானாகவும் கனிவித்துக்கொள்வாள். மனித மனோ—இந்திரியங்களுக்கு அதீதமான பராபக்தி உணர்விலோ, அல்லது உணர்விறந்த நிர்விகல்ப ஞான நிலையிலோ இப்படிப்பட்ட ஜீவப் பிரம்ம ஐக்கியத்தை உண்டு பண்ணுவாள்.

தர்மத்தில் கட்டுப்படவே முதலில் ஜீவர்களுக்கு மனம் வராதே! அவர்களுக்கு இதற்கான பக்குவத்தைத் தன்னிடம் அவர்கள் கொள்ளும் அன்பினாலேயே ஏற்படுத்தவேண்டும் எனத் திருவுளம் கொள்கிறாள் பரம தயாநிதியான தாய். இதற்காகவே முதலில் அவர்கள் எதை வேண்டினாலும் அதை அருள்கிறாள். இந்த அருளால் அவர்கள் இவளிடம் அன்பு பூணுகிறார்கள். பிறகு சிறிது சிறிதாக அன்பு அம்மா எதைச் செய்தாலும் சரி, அதுவே ஆனந்தம் எனக்காண்கிறார்கள். பிறகே அவள் தர்மத்தில் கட்டுப்படுத்துவது. முடிவில் தர்ம—அதர்ம அதீதமான ஆத்மனில் நிலை நாட்டுவது. "In the beginning I give them what *they* want in order to make them ultimately want what *I* want to give" என்ற கதைதான். ஆரம்பத்தில் நமது கோடி காமங்களையும் பூர்த்தி செய்து, முடிவில் காமங்கள் யாவும் முடியும் கோடியான பரஞானத்தில் நம்மைச் சேர்ப்பவளே காம கோடியான ஸ்ரீ காமாக்ஷி மஹா த்ரிபுரஸுந்தரி.

இந்த ஆரம்ப நிலைக்கும் இறுதி நிலைக்கும் இடையே எத்தனை முரண்பாடுகள்? இதனால்தான் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் பித்துக்குளியான ஃபால்ஸ்டாஃப் முரண்பாட்டு மூட்டையாக (bundle of incongruities) இருப்பது போலவே ஸாக்ஷாத் இந்த ராஜராஜேச்வரியும் இருக்கிறாள். ஒருவேளை இதனால்தான் 'பித்துக்குளி காமாக்ஷி' என்ற பெயரே வந்ததோ என்னவோ? பித்தனென்றே போற்றப்படும் பரமேச்வரனில் முழுகித் தளித்துக் கொண்டிருப்பவளும் அன்றோ? நிர்க்குண ஆத்மாவிலும் நிலைத்து, லோக லீலையையும் ரஸிக்கும் ஞானியை, "பால-உன்மத்த-பிசாசவத்" என்பதற்கேற்ப ஸ்ரீகாமாக்ஷியும் பாலாவாக, பித்துக்குளியாக, 'பேய்க் காமாக்ஷி'யாக இருக்கிறாள்.

அவளுடைய முரண்பாடுகளைத்தான் மூகர் விசேஷமாக ரஸிக்கிறார். ச்ருங்காரத்திலிருந்து அத்வைதம்வரை எல்லாமாக அவள் இருப்பதை, "ச்ருங்காராத்வைத தந்த்ர ஸித்தாந்தம்" என்பார்! "மனஸிஜ ஸாம்ராஜ்ய கர்வ பீஜமாக" இருப்பவளையே "ஸாரஸ்வத புருஷகார ஸாம்ராஜ்ய" ராணியாக வர்ணிக்கிறார். முரண்பாடுகளைக் கவித்வ சமத்காரத்துடன், "உன் காற்சிலம்புகள் எப்போதும் வாயாடிக் கொண்டிருந்தாலும் மோன முனிவர்க்கும் ஆனந்த மூட்டுகின்றனவே!"; "உன் திருவடி சிவந்திருப்பினும் மனத்தை வெள்ளையாக்குகின்றனவே!"; "தூசுபட்டால் கண்ணாடி அழுக்காகும் என்பதற்கு மாறாக, உன் பாததூளி பட்டாலோ உள்ளழுக்கெல்லாம் நீங்கி அது தெள்ளிய கண்ணாடியாகிறதே!"; "நீ பவனுக்கு (சிவனுக்கு) ஆனந்தமளித்துக்கொண்டே பவத்துக்கு (ஸம்ஸாரத்துக்கு) அழிவைச் செய்கிறாயே!"; 'சிவனுக்கு மோஹமூட்டிய நீயே ஜீவர்களின் மோஹத்தை விரட்டியடிக்கிறாயே!" என்றெல்லாம் பல படித்தாக வியந்து கூறுவார்.

கருணைக்காகச் சிவனுக்குக் காம மூட்டுபவளேதான் நமக்கு ஞானதாயகியாக இருப்பவள். இதையே வள்ளலார் ரத்தினச் சுருக்கமாக,

கருணைக் கொடியே! ஞான சிவகாமக்
கொடியே! அருளுகவே!

என்பார்.

அத்வைத பரமாசார்யர்களும் கடைசியில் இந்தக் கருணைக் காமக் கொடியிடமே வந்தார். உத்தமோத்தமமான காமகோடி பீடத்தை ஸ்தாபித்தார்.

அம்பாளது ஐம்பத்தொரு பீடங்களுமே இக் காமகோடி பீடத்தில் அடக்கம். எல்லா சிவாலய சக்திகளும் குடிகொண்ட ஸர்வ சைவாலயேச்வரியான தபஸ்காமாக்ஷி விக்ரஹத்தைப்போல, ஸ்ரீகாமகோடி பீடமான ஸ்ரீயந்த்ரமானது ஸகல பீடஸமஷ்டி என்றே சொல்லலாம். ஏனெனில் இந்த ஐம்பத்தொரு பீடங்களை வடித்தெடுத்த ஸாரமாக மூன்றைச் சொல்லுகிறார்கள். இம்மூன்றில் காமாக்ஷி பீடம் வாக்பவம் என்றும், ஜ்வாலாமுகி மத்ய பீடம் என்றும் காமாக்கியா சக்தி பீடம் என்றும் சொல்லுவதுண்டு. ஆனால் காஞ்சியே விச்வத்தின் மத்ய ஸ்தானம் என்பதையும், காமாக்ஷியே காமனுக்கு வெற்றியீட்டித் தந்தவள் என்பதையும் நினைவு கூர்ந்தால் அவ்விரு பீடங்களும்கூடக் காமகோடியிலேயே இணைவதாக ஆகின்றன. அதாவது பூரணப் பிரம்ம சக்தியானது பேராற்றலுடன் தனது பெருங் கருணையைப் பெருக்கவிடும் மஹாபீடம் இதுவே.

ஐம்பத்தொரு பீடங்களைப்போல் பஞ்சபூத க்ஷேத்திரங்களும் காமகோட்டத்தில் அடக்கம். சைவ பஞ்சபூத ஸ்தலங்களில் மண்ணாக உள்ள காஞ்சி சாக்த பஞ்சபூதத் தலங்களிலோ ஆகாசமாக இருப்பது காமாக்ஷிக்கே உரித்தான இன்னொரு இனிய முரண்பாடு. ''வானந்தம் மண்ணினந்தம் வைத்துப் பார்க்கப் பார்க்க எனக்கானந்தம் தரு'' பராபர தத்துவம் அவள் என்பதே இதன் பொருள்.

சைவ ரீதியில்: பிருத்வீ க்ஷேத்திர நாயகியான இவளிடம் அப்புத் தல அகிலாண்டேச்வரி வாராஹியாக வந்து சுற்றிலே உறைகிறாள். மூன்றாவதாக, தேயுத்தலமாம் அருணாசலம். அருண அசலம் என்பதே அருணாசலம்: அசலம் என்றால் அசைவு (ஸ்பந்தனம்) இல்லாத பிரம்மம். இது வண்ணமற்ற வெள்ளையாக, ச்வேதாசலமாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் அதுவோ செக்கச் சிவக்க அருண வருணத்தில் வருணிக்கவொண்ணாத கருணையாக ஆகியுள்ளது. அருணாசலத்தின் இந்த அருணா அசல் காமாக்ஷிதான் என்பதற்கு. ''அருண கிரண ஜாலை..'', ''அருணாம் கருணா தரங்கிதாக்ஷீம்..'', ''ஜகத்ராதும் சம்போ: ஜயதி கருணா காசித் அருணா..'' ஆகிய மேற்கோள்கள் போதாதா? லலிதையின் தநுர்பாண-பாசாங்குசங்களுடன் பஞ்சப் பிரம்மாஸனத்தில் அமர்ந்துள்ள ஸ்ரீ காமாக்ஷியன்றி அருணா வேறு எவர்? நாலாவதாக வாயு க்ஷேத்திரமாம் காளத்தி ஞானம்பிகை. ''குருமூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி'' என்றபடிக் குருப் பரஞானப் பெருவடிவு நம் காஞ்சியன்னைதானே? இறுதியாகச் சிதம்பரம். சித்-அம்பரமேதான் இங்கு பில-ஆகாசம். அங்கே புருஷ ரூபத்தில் பஞ்சக்ருத்யத்தை நிருத்யம் புரிபவளே, இங்கு ஸ்திரீ ரூபத்தில், ''பஞ்சக்ருத்ய பராயணா''வாக இருக்கிறாள். இங்கே காமேச்வரி; அங்கே சிவ காமேச்வரி. திரு உருவ நடராஜனும், அருவ ரஹஸ்யமும் கொண்ட சிற்றம்பலத்தில் அருவுருவ ஸ்படிக லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்த அதே பகவத்பாதர்கள்தான், ஸுஸ்வரூப காமாக்ஷியும் அருப பிலாகாசமும் கொண்ட காமகோட்டத்தில் அருவுருவ ஸ்ரீ சக்ரத்தை ஸ்தாபித்து இதையும் அதையும் ஸர்வ ஸாம்யமாக்கியிருக்கிறார்.

இனி சாக்த பஞ்சபூத க்ஷேத்திரங்களைப் பார்த்தால்: முதலில் அயோத்யா. காமகோஷ்டத்திலுள்ள ஸந்தான ஸ்தம்பத்தைப் பிரதக்ஷிணம் செய்தே அயோத்யாதிபதி தசரதன் ஸ்ரீராமனைப் புத்திரனாகப் பெற்றான் என ஐதிஹ்யம் உள்ளது. அடுத்து (வட) மதுரை. மதுராதிபதியாம் சோர சிகாமணியான கண்ணன் இங்கே அம்பாளின் வலத்தே கள்ளர் பெருமாளாக இடம் கொண்டு ஆழ்வாரின் மங்களாசாஸனமும் பெற்றுவிட்டான். மூன்றாவதாக ஹரித்வாரம் எனப்படும் மாயாபுரி. ''மஹாமாயா விச்வம் ப்ரமயஸி'' என்றவாறு மாமாயை இலகும் காஞ்சிபுரியும் மாயாபுரிதான். அடுத்து, காசி. ஓர் அவஸரத்தில் பதரி நாதத்தில் காத்யாயனருக்குப் புத்திரியாக உத்பவித்த காமாக்ஷிதான், காசி சென்று அன்னபூரணியாக அறம் பாலித்துவிட்டு, பின்பு காஞ்சி சேர்ந்து இங்கும் அன்னப் பணியாற்றிவிட்டு (கருவறை வாசலெதிரே அன்ன பூர்ணா ஸந்நிதி உள்ளது) பிற்பாடு கம்பை நதியில் சம்புவை வழிபட்டு மணந்திருப்பவள். ஐந்தாவதாக அசல் காஞ்சியே. சாக்த ஐம்பூதத்தலங்களில் அயோத்தி - பிருத்வி; மதுரை - அப்பு; மாயாபுரி - தேயு; காசி - வாயு; காஞ்சி - ஆகாசம்.

இந்த ஆகாசத்தில் உபநிஷத வாக்கியப்படியே மற்ற எல்லாமும் கோக்கப் பட்டிருக்கின்றன!

''பாங்க்தம் வா இதம் ஸர்வம்'' என்ற ச்ருதி வாக்கியப்படி, ஐந்தைந்தாக உள்ள தத்துவங்களில், காமாக்ஷி

யின் ராஜதானி இரு விதத்திலும் ஐம் பூதத் தொடர்பு கொண்டிருக்கிறது.

மேலும் சில பஞ்சகங்களைப் பார்ப் போம்.

ஸ்ரீ காமாக்ஷி சிருஷ்டி, ஸ்திதி, ஸம் ஹாரம், மாயையாம் திரோதானம், மாயா நீக்கமான மோக்ஷ அநுக்ரஹம் ஆகிய ஐந்தொழில்களைப் புரிகிருள்.

ஐம்புலன்களை வசப்படுத்தப் பஞ்ச பாணம் தரித்திருக்கிருள். 'பஞ்சமீ' என்றே ஸஹஸ்ர நாமத்தில் அவளுக் கொரு பெயர்.

கர்மம்-பக்தி-யோகம்-ஞானம்-மந்த் ரம் என்று ஆன்ம நெறிகள் ஐந்து. காமகோட்டத்தில் எண்ணுன்கு அறம் இயற்றிய அன்னபூரணியே கர்மம். காமாக்ஷியை வழிபட்டுக் குரூபம் நீங்கி ஸௌந்தர்ய லக்ஷ்மியான திருமகள்—பக்தி. ஜயஸ்தம்பத்தின் இடப்புறம் குண்டலினி நாக வடிவாக விளங்கும் ஸுப்ரஹ்மண்யன்—யோகம். புருஷாக் குழியில் இறைவனின் புருஷகாரமாக விளங்கும் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்—ஞானம். ஸ்ரீ சக்ரம்தான் மந்த்ர ஸாதனை என்பதைச் சொல்ல வேண்டு வதில்லை.

அன்ன மயம், ப்ராணமயம், மனோ மயம், விஞ்ஞான மயம், ஆனந்தமயம் என்ற ஐங்கோசங்களில், அன்னபூரணி அன்னமயம், நாக ஸுப்ரஹ்மண்யன் ப்ராணமயம், அஷ்டபுஜ வீணுதாரிணி யாக ஸகலகலைகள் மூலம் மனோரஞ்ஜன மூட்டும் ராஜச்யாமளா மனோமயம், ஹயக்ரீவ - அகஸ்த்ய-தூர்வாஸாதிகள் விஞ்ஞானமயம், ஜகன்மாதா ஸ்ரீ மூல காமாக்ஷி ஆனந்தமயம்.

மூல காமாக்ஷி, தபஸ் காமாக்ஷி, ஹோம காமாக்ஷி (இன்று பாதுகா வடிவில் மட்டும்), பிலம், ஸ்ரீ சக்ரம் என்பதாக அம்பாளே இங்கு ஐந்து ரூபங்களில் பிரகாசிப்பது இன்னொரு விசேஷம்.

இதனுல்தான் ஆசார்யர்களும் தமது ஐந்தாவதான ஸ்ரீ மடத்தை இங்கு ஸ்தாபித்து அதனைத் தாமே அலங் கரித்து மற்றொரு காமாக்ஷியாக ஞானுட்சி புரிந்திருக்கிருர். பிறகு அவ ளுடனேயே விதேஹமாக ஐக்ய முற் றிருக்கிருர்.

அவரது அருள்நெறி ஓர் அற்புத ஆசாரிய பரம்பரை மூலம் இன்றளவும் காமாக்ஷி தாஸர்களாகவும், அவ ளோடு தன்மயமானவர்களாவும் உள்ள மஹநீயர்கள் மூலம் பாய்ந்து வரு கிறது.

ஸ்ரீ சந்திரசேகரேந்திரப் பெருமான் பரமேச்வரனே பரதேவதையை வழி பட்டாற்போல் காமாக்ஷியை உபாஸிக் கிருரெனில், ஸ்ரீ ஜயேந்திரப் பெருந் தகையோ குமரப் பெருமானைப்போல் அவளை ஆராதிப்பதாக அடியார் பலர் கருதுகிறார்கள். இவர்கள் ஜயேந்திரர் களிலேயே சந்திரசேகரர்களையும் காண் கிருர்கள்—குகனிலேயே சிவனைக் காண்பதுபோல. அவரது திருநாமத் திலேயே ஞானத்தந்தை-தனயர் இரு வரின் இணைப்பும் இருக்கிறது. 'ஜய' என்பது ஜயந்தனுன தேவராஜ குமார வின் பெயர்; 'இந்திர' என்பதுதான் அவனது தந்தையான தேவர் கோமான். ஜிதேந்திரியர்களான ஞானேந்திர சந்த்ரசேகரப் பெருமான் சங்கற்பித்த காமாக்ஷி கும்பாபிஷேகத் தைத் தம் ஸதா ஸர்வ கால தபஸாகக் கொண்டு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஈடேற்றி வைக்கும் அற்புதம் மகன் தந்தைக்கு ஆற்றும் அரும் கடன்.

பஞ்சமீதேவிக்கு வஸந்த நவராத் ரிப் பஞ்சமியிலேயே குடமுழுக்கு நடக் கும் பொருத்தத்தை என் சொல்ல?

கும்பாபிஷேகத்தில் அம்பாளும், இரு பெரியவர்களும், லக்ஷோப லக்ஷம் பக்தர்களும் பெறும் உள்ளக் குளுமை இவ்வுலகு முழுவதிலும் ஆன்மிக வித் தினைப் பச்சிடச் செய்யும் ஆனந்த வர்ஷமாக இருக்கட்டும்!

சர்வாதி பரம ஸாதக
குர்வாநீதாய காமபீட ஜுஷே |
ஸர்வாக்ருதயே சோணிம-
கர்வாயாஸ்மை ஸமர்ப்யதே
ஹ்ருதயம் ||

(பரமேச்வரன் முதலிய உத்தம உபாஸகர்களான குரவர்களால் காமகோடி பீடத்தில் உறைவிக்கப் பட்டவளும், அனைத்தும் தன் வடி வானவளும், செம்மையின் கொழுத்த செழிப்புமான ஸ்ரீ காமா க்ஷிக்கு இதய ஸமர்ப்பணம்.)

காமகோஷ்டமும் நாயன்மார்களும்

इक्षुकोदण्डपुष्पेषु पाशाङ्कुशकरोज्वलाम् ।
उद्यत्सूर्यनिभां वन्दे महात्रिपुरसुन्दरीम् ॥

இக்ஷு-கோதண்ட-புஷ்பேஷு பாசாங்குச-கரோஜ்வலாம் |
உத்யத்-ஸூர்யநிபாம் வந்தே மஹாத்ரிபுரஸுந்தரீம் ||

நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு சிவாலயத்திலும் ஸாந்நித்யம் பெற்று விளங்கும் பராசக்தி ஸ்ரீ காஞ்சி காமகோட்டத்தினின்று ஆவிர்பவித்த தாய் உமையே! காஞ்சி க்ஷேத்திரத்தின் எல்லைக்குள் இன்றும் சுமார் 50 சிவாலயங்கள் உள்ளன. ஒன்றிலாவது அம்பாளின் கர்பக்ருஹம் கிடையாது. ஆனால் காஞ்சி க்ஷேத்திரத்தின் எல்லைக்கப்பாலுள்ள ஒவ்வொரு சிவாலயத்திலும், க்ஷேத்திரத்திலும் அம்பாள் கர்பக்ருஹம் இருக்கின்றது. இது ஏன்?

ஸ்ரீலலிதா அர்ச்சனைக்கோவை, புராணங்கள், தந்த்ர நூல்கள், சிற்ப சாஸ்திரம், ஆகமம், கல்வெட்டுக்கள், சைவத் திருமுறைகள் ஆகியவற்றில் ''காமகோடி'' என்ற சொல்லும், அது சம்பந்தமான தகவல்களும் காணப்படுவதை இங்கு எடுத்துக்காட்டி, ஆராய்ந்து, மேலே காணப்படும் கேள்விக்குத் தகுந்த விடையைக் காணலாம்.

ஸ்ரீ லலிதா அர்ச்சனைக்கோவை:—

லலிதா ஸஹஸ்ர நாமம்—காமகோடிகாயை நம:

லலிதா த்ரிசதி—காமகோடி நிலயாயை நம:

லலிதா அஷ்டோத்ரம்—காமகோடி மஹாபத்மபீடஸ்தாயை நமோ நம:

இவ்விதம் லலிதாம்பிகையின் மூன்று அர்ச்சனைக் கோவைகளிலும் ஸ்ரீகாமகோடி பராசக்தியின் நாமாக்கள் காணப்படுகின்றன.

புராணம்:—

பாகவதம்: உலகப்புகழ்பெற்ற பாகவத புராணத்தின் பழைய தெலுங்குக்ரந்த லிபிகளில் உள்ள பிரதிகளில், தசமஸ்கந்தத்தில், பலராம தீர்த்தயாத்ரா ப்ரகரணத்தில் ''कामकोटि पुरीं काञ्चीम्'' (காமகோடி புரீம் காஞ்சீம்) என்று காஞ்சி க்ஷேத்ரம் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீவல்லபாசார்யர் இயற்றியுள்ள ''ஸுபோதினி'' என்ற பாகவத வ்யாக்யான நூலிலும் இவ்வாறே காணப்படுகிறது. வடஇந்திய பாகவத புராண நூல்களில் 'காமகோடி' என்ற சொல் ''कामकोष्णिपुरीं काञ्चीम्'' (காமகோஷ்ணி புரீம் காஞ்சீம்; என்று சிறுமாறுதலுடன் காணப்படுகிறது.

காமாக்ஷீ விலாஸம்: முன்பு சிவபிரானால் எரிக்கப்பட்ட மன்மதன் காஞ்சிபுரத்தில் ஸ்ரீகாமாக்ஷீதேவியைக் குறித்துத் தவம் செய்ய, அவன் தவத்திற்கு மகிழ்ந்து, காமாக்ஷீ தன் கடாக்ஷத்தால், அவனுக்கு மறுபடியும் சரீரத்தைக் கொடுக்க, மன்மதன் தான் சிவபிரானை ஜயிப்பதற்கும் கிருபை செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவனுடைய பிரார்த்தனையை அங்கீகாரம் செய்து, ஸ்ரீகாமாக்ஷீ எல்லா சிவாலயங்களிலுமுள்ள சக்திகளையெல்லாம் ஆகர்ஷித்துத் தன்னுள் அடக்கிக்கொண்டுவிட்டாள். இதன்பிறகு, ஒருசமயம் பிரம்மா சிவபிரானைத் தரிசிப்பதற்காகக் கைலாஸம் சென்று, சிவபிரானை வணங்கிவிட்டுத் தேவியைத் தரிசிக்கச் சென்றார். ஆனால் தேவியை அங்கு காணவில்லை, பிறகு அவர் பூலோகத்திலுள்ள ஸகல சிவாலயங்களுக்கும் போய்ப் பார்த்தார். எந்த சிவாலயத்திலும் தேவியின் ஸாந்நித்யம்

இல்லாமலிருந்தது. இப்படி இல்லா திருக்கக் காரணம் என்ன என்று பிரம்மா சிந்திக்க, இதெல்லாம் ஸ்ரீ காமாக்ஷியின் செயலே என்று அறிந்து, மறுபடியும் முன்போல எல்லா சிவாலயங்களிலும் தேவியின் ஸாந்நித்யம் ஏற்படவேண்டும் என்ற எண்ணத்துடன், ஸ்ரீ காமாக்ஷியின் ஸந்நிதியை அடைந்து, ஸ்ரீ காமாக்ஷியைத் தியானித்துத் தவம் செய்தார். ஸ்ரீ காமாக்ஷியும் ப்ரத்யக்ஷமாகி, ''காஞ்சிபுரத்தி லுள்ள சிவாலயங்களில் தவிர மற்ற சிவாலயங்களில் தேவியின் ஸாந்நித்யம் ஏற்படட்டும். ஆனால் சிவஜித் க்ஷேத்திரம் என்ற பெயரை அடைந்த இந்தக் காஞ்சிபுரத்தில் வேண்டாம்'' என்று அனுக்ரஹித்தாள்.

पुरा पञ्चशरोऽनङ्गः प्रत्यक्षाङ्गाभिलाषया ॥
कामकोष्ठं समासाद्य कामाक्षीं संप्रपूज्य च ।
हृदि ध्यात्वा तु तां कामस्तपस्तेपेऽतिदुष्करम् ॥
ततस्तत्कामदेवस्य तपसा तुष्टमानसा ।
कदाचित् तत्र कामाक्षी महात्रिपुरसुन्दरी ॥
प्रसाद्य महाशक्तिः स्वकटाक्षनिरीक्षणात् ।
ददौ कामाय दिव्याङ्गं नृणामानन्ददायकम् ॥

* * *

तदा सर्वेषु शैवेषु कैलासाद्यालयेषु च ।
यत्र यत्र स्थितास्सर्वा गौरीः स्वांशतया स्थिताः ॥
समाकृष्यैकयतो देवी तूष्णीमासीच्छुभानना ॥

* * *

कदाचिदथ लोकेशः कैलासाद्यालयेषु च ।
सेवार्थं परमेशस्य समागत्यालयं तदा ॥
देवीहीनालयं दृष्ट्वा शिवस्थानेषु सर्वशः ॥
किमर्थमम्बिका नास्ति सर्वशैवालयेषु च ॥
इति चिन्त्य ततो ब्रह्मा कामाक्ष्याश्चित्रमित्यपि ।
विज्ञाय ज्ञानदृष्ट्या तु कामकोष्ठमहीतले ॥
कामाक्ष्यास्सान्निधिं प्राप्य ध्यात्वाराध्य च ईश्वरीम् ।
सर्वालयेषु शैवेषु सर्वलोकस्थितेषु च ॥
यथा शम्भुस्तथा गौरी सदा सान्निध्यकांक्षया ।
हृदि ध्यात्वा तु कामाक्षीं द्वादशाब्दं तपोऽकरोत् ॥

ततः प्रसन्ना सा देवी कामाक्षी भक्तिकामदा ।
तत्र ब्रह्माणमालोक्य वचनं चेदमब्रवीत् ॥

* * *

शिवजित्क्षेत्रमित्युक्तमिदं क्षेत्रं विना भुवि ।
सर्वालयेषु शैवेषु सन्निधत्तां सदाम्बिका ॥

—காமாக்ஷீ விலாஸம்

(ச்லோகங்கள் 9-12; 31-32; 68-73; 75.

காஞ்சீ மாஹாத்மியம்: பஞ்சபூத க்ஷேத்திரங்களில் சிதம்பரம் ஆகாசக்ஷேத்திரம் என்று சொல்லப்படுகிறது. பஞ்சபூத சக்தி பீடங்களுள், காஞ்சிபுரம் ஆகாச பீடமாகக் கூறப்படுகிறது. எனவே சிதம்பரமும், காஞ்சியும் ஆகாச க்ஷேத்திரங்கள்.

சிதம்பரத்தில் கனகஸபை மாத்திரம் ஆகாச ஸ்தானம். காஞ்சியிலோ காஞ்சிபுரம் முழுவதுமே ஆகாச ஸ்தானமாகச் சொல்லப்படுகிறது. காஞ்சிபுரத்தில் காமாக்ஷி கோயிலில் காயத்ரி மண்டபத்தின் அடியிலுள்ள குகையில், அம்பாள் பிலாகாச ரூபிணியாக இருக்கிறாள். இந்த ஆகாசமே இந்த க்ஷேத்திரம் முழுவதும் பரவியிருப்பதால், இந்த க்ஷேத்திரத்திற்குச் சங்கங்களில் (கூட்டத்தில்) ஸ்பர்ச தோஷம் கிடையாது என்று காஞ்சி மாஹாத்மியம் கூறுகிறது. காசியில் ஸ்பர்ச தோஷம் இல்லை என்று சொல்லப்படுகிறது. காஞ்சியிலும் இதுபோல் ஸ்பர்ச தோஷம் இல்லை என்று காஞ்சி மாஹாத்மியம் கூறுகிறது.

यत्रापूर्वं त्वया काञ्च्यां स्मरतार्थमिमं हृदि ।
पूजनीयो महालिङ्गे नाम्ना मर्दलमाधवे ॥
तत्रैव च महानृत्तं सर्वरक्षाकराभिधम् ।
करोमि सततं हृष्टः पराकाशे बिलान्तके ॥
अत्र दभ्रसभामात्रं पराकाश इति स्मृतम् ।
तत्र सर्वाभिभूः काञ्च्यां पराकाशः स्मृतो बुधैः ॥
सत्यं ज्ञानमनन्ताद्यं यो वेदस्य गुहोन्तरे ।
परव्योम्नि च वै काञ्च्यां सोऽश्नुतेयमथेप्सितान् ॥
सर्वज्ञेनाणुनाणोर्वा महतो महतान्तरम् ।
ये तु पश्यन्त्यात्मकृतगुणाधिकन्तुगुग्जनाः ॥
तत्र ये परमाकाशे प्रविशन्ति जना हरे ।
ते सर्वे मन्मयाः स्युर्वै मुक्तात्मानस्तु ते स्मृताः ॥

अग्निमध्यगतं वस्तु तन्मयं स्याद्यथा क्षणात् ।
एवं काञ्चीं प्रविष्टा ये मन्मयाः स्युर्न संशयः ॥
तस्मादत्र नृणां सङ्गे श्वपचानान्न सूतकम् ।
चण्डालानामपि हरे स्पृष्ट्वा काञ्च्यां न सूतकम् ॥

—காஞ்சி மாஹாத்மியம்

(அத்தியாயம் 44-ச்லோகங்கள் 4-11)

தந்த்ர நூல்கள்:—

மேரு தந்த்ரம்: இடுப்பைச்சுற்றி அணியும் ஆபரணம் ஒட்டியாணம் எனப்படும். அதன் மத்திய பாகத்தில் காஞ்சி என்ற உறுப்பு உண்டு. இது நாபி ஸ்தானத்தை ஒட்டி அமையப்பெறும். மேருதந்த்ரம் என்ற நூலில் காஞ்சி க்ஷேத்ரம் நாபி ஸ்தானமாகக் கூறப்பட்டுள்ளது. (மேரு தந்த்ரம் 10-ஆவது ப்ரகாசம், 848-ஆவது ச்லோகம்)

ஸௌபாக்ய சிந்தாமணி: துர்வாஸ மஹரிஷியால் இயற்றப்பட்டு, இன்றும் காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷி ஆலயத்தில் பின்பற்றப்படும், 'ஸௌபாக்ய சிந்தாமணி' எனும் கிரந்தத்தில் மூன்றும் படலத்தில், 24 ஆவது ச்லோகத்தில், ''அயோத்யாதிஷு பீடேஷு ப்ரதிவ்யாதிஷ்வனுக்ரமாத்'' என்று சொல்லப் பட்டுள்ளது. அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, புரீ த்வாரவதி, என்னும் ஸப்த (7) மோக்ஷ புரிகளில், முதல் ஐந்தும் (அயோத்தி முதல் காஞ்சி முடிய) முறையே ப்ருதிவி முதலான 5 சக்தி பீடங்கள். அவற்றுள் கிரமமாகக் காஞ்சிபுரம் ஆகாச பீடமாகிறது. ஆகவே முன்னர் கூறப்பட்டது போல், சிதம்பரம் எப்படி பஞ்சபூத க்ஷேத்திரங்களில் ஆகாச க்ஷேத்திரமாகக் கொள்ளப்படுகிறதோ அதேபோல் காஞ்சி புரமும் ஆகாச க்ஷேத்திரமாகவே காஞ்சி மாஹாத்மியத்தில் கூறப்படுவதோடு இந்தத் தந்த்ர நூலிலும் கூறப் பட்டுள்ளது.

சிற்ப சாஸ்த்ரமும், ஆகமமும்:— சிற்ப சாஸ்த்ரங்களில், ஆலயங்களில் தேவியின் ஸ்தானத்தைப்பற்றிக் கூறும் இடங்களில் ''காமகோஷ்டம்'' என்றே சொல்லப்பட்டுள்ளது. மானஸாரம் என்ற சிற்பநூல், ''காமகோஷ்டவிதிம் வக்ஷ்யே'' என்று கூறுகிறது. (படலம் 65, ச்லோகம்-')

சைவ ஆகமங்களிலும் தேவியின் ஸ்தானத்தைக் கூறும் இடத்தில் இப்படியே 'காமகோஷ்டம்' என்ற பதம் காணப்படுகிறது.

''भोगांगमर्चनं कुर्यात् सर्वसम्पत्समृद्धिदम् ।
रात्रौ पूजावसाने तु अर्धयामेन कारयेत् ॥
मन्दिरस्योत्तरे भागे कामकोष्टस्य मध्यमे'' ।

(कारणागमे (तालपत्र) योगाङ्गार्चनभागे)

* * *

''कामकोष्टविधिं वक्ष्ये शृणुत्वं तत् प्रभञ्जन''

(सूक्ष्मागमे शक्तिप्रतिष्ठाकामकोटि विधिपटले)

கல்வெட்டுக்கள்:— காஞ்சி காமகோஷ்டத்தில் பிரஸன்னமாக இருக்கும் ஸ்ரீ காமாக்ஷி முன் கூறப்பட்டபடி எல்லா சிவாலயங்களுக்கும் சக்தியை அனுக்ரஹித்ததால், காஞ்சிபுரத்திற்கு வெளியில் உள்ள சிவாலயங்களில் (வெகு தூரத்தில் உள்ள சிவாலயங்களில் கூட) அம்பாள் ஸந்நிதி இருக்கும் இடம் 'காம கோட்டம்' என்று கூறப்பட்டு வருகிறது என்று பல சிவாலயங்களில் உள்ள கல் வெட்டுக்களிலிருந்து புலப்படுகிறது. அநேக சிவாலயங்களில் உள்ள தேவியின் ஸ்தானங்களைக் குறிப்பிடும் கல்வெட்டுக் களில் அடுத்துள்ள பக்கங்களில் சில தரப்பட்டுள்ளன. அவைகளில் அம்மன் ஸந்நிதிகள் காமகோட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. [South Indian Temple Inscriptions—(தென்னிந்தியக் கோவில் சாஸனங்கள்)—Published by the Government Oriental Manuscripts Library, Madras.

पीताम्बरं काञ्चनमेष देव्याः तत् काम-
कोष्ठस्थितिमास्थितायाः
चकार यद्वैरिविलासिनीनां वनाग्निधूमा-
म्बरतां करोति ॥

*(பீதாம்பரம் காஞ்சனமேஷ தேவ்யா:
தத் காமகோஷ்ட ஸ்திதிமாஸ்திதாயா:
சகார யத்வைரிவிலாஸினீநாம் வநாக்னி
தூமாம்பரதாம் கரோதி.)*

சைவத்திருமுறைகள்:—

திருவதிகைத் திருத்தாண்டகம்: கோயில்களில் கல்வெட்டுக்கள் பொறிக் கப்பட்டிருப்பதை ஒத்து, 7ஆம் நூற்றுண்டில் திருநாவுக்கரசர் (அப்பர்) தமது திருவதிகை வீரட்டானத்துத் திருத் தாண்டகத்தில் ''காமகோட்டி'' என்னும் பெயரை உபயோகித்துள்ளார்.

ஊர்	கோவில் காலம்	தெ.கோ. சா.	பாகம்	நம்பர்	பக்கம்	காணப்படுவது
1. சிதம்பரம்	ஷை	ஷை	பாகம்1	14	22	கோயிலுக்கும் திருக்காமக்கொட்டமு (கை) டய பெரியனாச்சியாருக்கும் சாத்தி அருள.
2. அவினாசி	ஷை	ஷை	ஷை	1[illegible]7	190	கொயிலில் திருக்காமக்கொட்டத்து னாச்சியார் பெருங்கருணை.
3. விஜயமங்கலம்	ஷை	ஷை	ஷை	267	248	திருனாகீசுவரமுடையார் திருக்காமக்கொட்டத்தாளு (கை) தட(ய)ன னாச்சியாருக்கு அமுதுபடி.
4. திருவொற்றியூர்	ஷை	ஷை	ஷை	530	517	திருவொத்தியூருடையனாயனார் கொயிற்த் திருக்காமக் கொட்டமுடைய னாச்சியாருக்கு வெண்டும் னிபந்தங்களுக்கு.
5. திருப்பாலைவனம்	ஷை	ஷை	ஷை	539	528	திருப்பாலவனமுடைய நாயனார் திருக்காமக் கொட்டம் இயாதிலும் பாபாதி நாச்சியாருக்கு.
6. திருக்காட்டுப்பள்ளி	ஷை	ஷை	பாகம்2	597	586	திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார் அழகமர் மங்கையார்க்கு.
7. ஷை	ஷை	ஷை	ஷை	598	586	திருக்காமக்கொட்டமுடைய பெரியநாச்சியார் அழகமர் மங்கையாருக்கு கற்றளி.
8. வல்லம்	ஷை	ஷை	ஷை	635	613	இக்கொயில் சிகாமகோட்டமுடைய னாச்சியாருக்கும் வெண்டும் நிமித்தத்துக்கு.
9. திருப்பழணம்	ஷை	ஷை	ஷை	1042	975	இக்கொயில் பூஜை நிலைகளும், திருக்காமகொட்ட முடைய நாச்சியார் கொயில் பட்டாசார்ய நிலையும்.
10. ஷை	ஷை	ஷை	ஷை	1048	980	நான் எழுந்தருளுவித்த திருக்காமக்கொட்டமுடையார் திருப்பழணத்துடையாற்க்கு.
11. ஷை	ஷை	ஷை	ஷை	1049	981	இன்னாயநார் திருக்காமகொட்டமுடைய பெரிய நாச்சியார்.
12. கோயிலடி	ஷை	ஷை	பாகம்3 பகுதி 1	1175	1152	இக்கொயிலில் நான் எழுந்தருளுவித்த திருக்காம கொட்டமுடை அகிலநாயகியார்க்கு பூஜைக்கும்.
13. ஹஸ்தகிரி	ஷை	ஷை	ஷை	1209	1220	ஶ்ரீபுரவராதிசுபர காமகொட்டி(டி)ம்பிகாலப்தாவர பிறஸாத.
14. சிதம்பரம்	ஷை	ஷை	பாகம்3 பகுதி 2	1271 1272 1273	1321 1322	देव्या स्तस्या ज्ञिशखरिदुहितुः कामकोष्ठस्थितायाः प्राकारव्या-मपिद्षयितमोसौक्लुप्तवान् मण्डपञ्च। किञ्चेस्स्याः स्वशति नटनस्यान योग्यप्रकारं सत्यां भक्त्या सुकरमकरोत् भूषणं मौक्ति पूर्वं ॥

எழுந்திரை நதித்துவலை நனைந்ததிங்கள்
இளநிலாத்திகழ்கின்ற வளர்சடையனே
கொழும்பவளச் செங்கனிவாய்
''காமகோட்டி''
கொங்கையினை யமர்பொருது கோலங்
கொண்ட
தழும்புளவே வரைமார்பில் வெண்ணூ
லுண்டே
சாந்தமொடு சந்தனத்தினளறுதங்கி
அழுந்திய செந்திருவுருவில் வெண்
ணீற்றுனே
அவனுகிலதிகை வீரட்டத்தானே!

கச்சி-ஓணகாந்தன்தளித் தேவாரம்: காஞ்சியம்பதியில் ஸர்வதீர்த்தக் கரையின் வடபாகத்திலுள்ள ஓணகாந்தன் தளித் தேவாரத்திலும் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் காமகோட்டத்தைப்பற்றிப் பின்வருமாறு பாடியுள்ளார்.

வாரிருங் குழன்மை வாணெடுங்கண்
மலைமகண் மதுவிம்மு கொன்றைத்
தாரிருந் தடமார்பு நீங்காத் தையலா
ளுலகுய்ய வைத்த
காரிரும் பெரழிற் கச்சிமூதூர் காம
கோட்ட முண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சைகொள்வதென்னே
ஓணகாந்தன்றளியுளீரே.

(7 ஆம் திருமுறை-ஓணகாந்தன் தளி-6)

ஆலங்குடித் தேவாரம்: ஏழாம் நூற்றூண்டில் ஞானசம்பந்தர் ''கச்சி காமக்கொடி'' என்று கச்சியைத் (காஞ்சியை) தென்னாட்டு சிவப்பதிகளில் ஒன்றான ஆலங்குடி என வழங்கும் திருவிரும்பூளை பற்றிய தேவாரத்தில் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

''நச்சித்தொழுவீர் கணமக்கது
சொல்வீர்
கச்சிப்பொலி காமக்கொடியுடன் கூடி
இச்சித்திரும் பூளையிடங் கொண்ட
வீசன்
உச்சித்தலையில் பலி கொண்டுழ
லூனே.''

(இந்த ஆலங்குடித் தேவாரத்தில் 'காமக்கொடி' என்று சொல்லியிருக்கிறது. இங்கே 'கொடி' என்பது குற்றெழுத்தாகத் தோன்றுகிறது. ஆனல் பழைய காலத்தில் குறில், நெடில் ஆகிய இரண்டும் ஒரே ஓர் எழுத்தாலேயே குறிக்கப்பட்டு வந்தது. பழைய கல்வெட்டுக்களைப் பார்த்தால் இது நன்ருக விளங்கும். வெள்ளைக்காரர்கள் அச்சுக்கூடங்களை ஏற்படுத்தியபிறகுதான் குறிலையும், நெடிலையும் குறிக்க வெவ்வேறு அடையாளங்கள் ஏற்பட்டன.)

இன்னும் எவ்வளவோ தேவாரங்கள் மறைந்துகிடக்கின்றன. அவைகள் அகப்பட்டு, ஆராய்ச்சி செய்யப்பட்டால், அவைகளிலும் ''காமகோட்டக்'' குறிப்புக்கள் காணப்படலாம்.

முடிவுரை: அம்பிகை மன்மதனுக்குப் புத்துயிர் அளித்தற்கு அனுகுணமாக ஸ்ரீ சிவபிரான் தேவியைத் தேடி அலையட்டும் என்ற எண்ணத்துடன் ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷி பிலாகாசத்தினுள் எல்லாச் சக்திகளையும் ஒடுக்கி வைத்துக் கொண்டுவிட்டாள். தேவியின் ஆகாச க்ஷேத்திரமாகிய காஞ்சியில் இன்னும் உள்ள சுமார் 50க்கு மேற்பட்ட சிவாலயங்களில் ஓர் ஆலயத்திலும் அம்பாள் ஸந்நிதி (கர்பக்ருஹம்) கிடையாது. காஞ்சீபுர நகர எல்லைக்கு வெளியில் உள்ள எல்லாச் சிவாலயங்களிலும், தேவியின் ஸந்நிதி (கர்பக்ருஹம்) இருக்கிறது. இதுவே காஞ்சீபுர நகர எல்லையை நிச்சயிப்பதற்கும் ஒரு காரணமாகிறது.

இப்படி காஞ்சீபுரத்தில் மாத்திரம் ஒரு சிவன்கோவிலிலாவது அம்பாள் ஸந்நிதியில்லாமல் அதன் எல்லைக்கு வெளியிலிருக்கும் எல்லா ஊர்களிலும் அம்பாள் ஸந்நிதி யிருப்பதற்கு, முன்பு சொன்ன காமாக்ஷி விலாஸ புராணத்தில் உள்ளபடி காமனுக்கு அம்பாள் தனது அக்ஷியின் (கண்ணின்) கடாக்ஷத்தினுல் அருள் செய்ததும், அதையனுஸரித்து அம்பிகை எல்லா சிவஸ்தானங்களிலும் உள்ள தனது சக்திகளையும் இக்காஞ்சியில் உள்ள தனது பிலாகாச ஸ்வரூபத்தில் ஆகர்ஷித்துக் கொண்டதும்தான் காரணம். காஞ்சி நகரத்தின் எல்லைக்குள் மாத்திரம் பெரிய கோவிலாயினும், சிறிய கோவிலாயினும் ஒன்றிலாவது ஏன் அம்பாள் ஸந்நிதி இல்லை என்று இந்நூலின் தொடக்கத்தில் குறிக்கப்பட்ட கேள்விக்கு காமாக்ஷி விலாஸம் என்னும் ஸ்தல புராணத்தைப் பார்க்காமலிருந்தால் காரணமே தெரியாது. பழைய காலத்தில் கோடிக்கணக்கான பொருள்களைக்கொண்டு அரசர்களாலும், பெருமக்களாலும் சிற்ப சாஸ்த்ரங்களையும், ஆகம சாஸ்த்ரங்களையும் அனுஸரித்துக் காஞ்சி நகரத்தில் நிர்மிக்கப்பட்ட எல்லா சிவாலயங்களிலும் வெளியிலுள்ள சிவாலயங்களுக்கு மாறுபாடாக அமைப்பு ஏற்பட்டிருப்பது இந்த ஒரு ஸ்தலபுராணத்தின் ஆதாரத்தின்பேரிலேயே என்பது ஸ்திரமாகிறது. ஸ்தல புராணமென்றுல் அதைத் தற்கால ஜனங்கள் வெகு லேசாக அலக்ஷ்யம் செய்கிறுர்கள். காஞ்சியில் 1964-ஆம் வருஷம் நடந்த ஆகம, சிற்ப ஸதஸில்

ஸ்ரீமைசூர் மஹாராஜா காலஞ்சென்ற ஜயசாமராஜ வாடியார் அவர்கள் ஸ்தல புராணங்களின் முக்கியத்வத்தைச் சொல்லியிருப்பது இங்கு நினைவூட்டற்பாலது.

முன்னர் சொல்லப்பட்ட மானஸாரம் என்னும் சிற்ப நூற்படியும், காரணுகமம், ஸூக்ஷ்மாகமம் என்னும் ஆகமங்களின் படியும், திருநாவுக்கரசு ஸ்வாமிகளுடைய திருவதிகைத் திருத்தாண்டகத்தின்படியும், முன்னர் கூறப்பட்ட 10 ஊர்களிலுள்ள சாஸனங்களின்படியும், சிவாலயங்களில் எழுப்புவிக்கப்பட்டிருக்கும் அம்பாள் ஸந்நிதிகளுக்கு எல்லாம் 'காமகோஷ்டம்' அல்லது 'காமகோட்டம்' என்ற பெயர் இருந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனல் காமாக்ஷிவிலாஸ ஸ்தல புராணப்படி காமகோஷ்டத்தில் விளக்கும் பராசக்தியினின்று வெளிவந்த சக்திகளின் ஸ்தானங்கள்தான் எல்லா க்ஷேத்திரங்களிலும் 'காமகோஷ்டம்' என்னும் பெயருடன் விளங்குகின்றன என்பது கும்பகோணத்திற்கு அடுத்த ஆலங்குடி (திரு இரும்பூளை) ஸ்ரீ திருஞானசம்பந்த ஸ்வாமிகளின் தேவாரத்தில் கச்சிக்காமக்கொடி என்ற தொடரால் விளக்கப்பட்டிருக்கிறது. காமாக்ஷிவிலாஸ ஸ்தல புராணமும், ஆலங்குடித் தேவாரமும் நமக்குக் கிடைத்திராவிட்டால், சிற்ப சாஸ்த்ரப் படியும், ஆகம சாஸ்த்ரப்படியும் சிவாலயங்களிலுள்ள தேவியின் ஸ்தானங்களுக்கெல்லாம் காமகோஷ்டம் என்று பெயர் என்பதை மாத்திரம் நாம் அறிந்திருப்போம். தனிச்சக்தி கோவிலாயுள்ள காஞ்சி காமாக்ஷியின் காமகோஷ்டபிலாகாசத்திலிருந்து வெளிவந்ததனலேயே உலகத்திலுள்ள ஸகல சிவக்ஷேத்ரங்களின் சக்தி ஸ்தானங்களுக்கும் 'காமகோஷ்டம்', 'காமகோட்டம்', 'காமகோடி' என்ற பெயர்கள் சிற்ப சாஸ்த்ரம், ஆகம சாஸ்த்ரம், தேவாரம் முதலிய வற்றில் வழங்கப்படலாயின. ஆகம, சிற்பசாஸ்த்ரங்கள் உபதேசிக்கப்பட்டதன் முன்பே ஸ்ரீ காஞ்சி காமகோஷ்டபிலாகாச ஸ்வரூப தத்வமும் அதினின்று காஞ்சி நகர எல்லைக்கு வெளிப்புறமுள்ள எல்லா சிவக்ஷேத்திரங்களிலும் சக்தியின் விஸ்தாரமும் அந்தந்த சாஸ்த்ர ப்ரவர்த்தகர்கள் ஸாக்ஷாத்கரித்த தத்துவம் என்பது வெளியாகிறது.

ஒரு ஸ்தல புராணத்தில் சொல்லியிருக்கும் தத்துவம், இவ்வளவு கல்வெட்டுக்களிலும் உறுதிப்பட்டதும், சிற்ப, ஆகம சாஸ்த்ரங்களும் அதற்கு ஆதாரமாய் நிற்றலும், சமயாச்சார்யர்கள் மூவரும் தம் பண்களில் அந்த தத்துவத்தையே வெளிப்படுத்துவதையும் நாம் கண்கூடாகக் காணும்பொழுது இன்னும் எந்தெந்த ஸ்தல புராணத்தில் என்னென்ன தத்துவம் அடங்கியுள்ளதோ என்று வியப்பு ஏற்படுகிறது. சம்பந்த ஸ்வாமிகள் எங்கேயோ ஆலங்குடியிலுள்ள சக்தி கோஷ்டத்தைக் 'காமக்கொடி' என்று மாத்திரம் சொல்லாமல் 'கச்சிப்பொலி காமக்கொடி' என்கிருர். காஞ்சீ க்ஷேத்திரத்தில் உள்ள ஆகாசம் முழுமையும் பராசக்தி ஸ்வரூபமானதுதான். இக்காஞ்சியில் உள்ள சிவாலயங்களில், தனிச்சக்தி கோஷ்டம் வேண்டாம் என்கிற காரணமும் வெளியாகிறது. காஞ்சி க்ஷேத்திரத்திலுள்ள ஸகல சிவாலய, விஷ்ணு ஆலய உத்ஸவங்களும், எவ்வளவு கோவில்கள் இருந்தாலும், காமகோஷ்டத்தைச் சுற்றியுள்ள ராஜ வீதிகளிலேயே நடத்தப்படுகின்றன என்பதும், காஞ்சியில் உள்ள ஆலயங்களின் பிரதான கோபுர வாயில்கள் எல்லாம் காமகோஷ்டம் உள்ள திக்கைப் பார்த்தே அமைந்திருக்கின்றன என்பதும் நாம் நேரில் காணும் சான்றுகளாம். ..

समरविजयकोटी साधकानन्दधाटी
मृदुगुणपरिपेटी मुख्यकादम्बवाटी ।
मुनिनुतपरिपाटी मोहिताजाण्डकोटी
परमशिववधूटी पातु मां कामकोटी ॥

தேவ வாக்கு

வேதம் எல்லா தர்மங்களுக்கும் மூலமானது. அதில் சொல்லியிருப்பவற்றையே நாம் செய்யவேண்டும், ஏனென்ருல் அது காலத்தினுல் நின்று நிலைத்து வந்திருக்கிறது. எல்லாக் காலத்துககும் பொதுவான சாச்வதமான தர்மங்களை அது சொல்லுகிறது. வேதம் வைரம்பாய்ந்த மரம். அநாதியாக வந்துகொண்டிருக்கும் சட்டபுஸ்தகம் அது. 'வேத வாக்கு' என்ருல் வெகு சுத்தமாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான், யாராவது ஏதாவது சொன்னுல், 'என்ன வேதவாக்கோ?' என்று சொல்லும் பழக்கம் உண்டாகியிருக்கிறது.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி முனிவர்கள்.

ஸ்ரீ சங்கரரின் சில உபமானங்கள்

டாக்டர் பி. கே. சுந்தரம்

உவமைகளைச் சொல்லி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உண்மைகளை விளங்க வைப்பதில் பகவான் சங்கரருக்குள்ள ஆற்றல் அதிசயிக்கத் தக்கது. தெரிந்ததை வைத்துத் தெரியாததைச் சொல்லித் தருவதுதான் உவமையின் தொழில்:—

ப்ரஸித்த-வஸ்து ஸாதர்ம்யாத்
அப்ரஸித்த வஸ்து ஸாதனம்

பார்க்கப்போனுல் கல்வியின் தத்துவமே இதுதான். ஒரு நக்ஷத்திரத்தைக் காட்டி அதன்பின் அதற்குப் பக்கத்திலிருக்கும் முக்கிய அருந்ததி நக்ஷத்திரத்தைக் காட்டுவதுபோல, ஏற்கனவே நாம் அநுபவத்தில் தெரிந்துவைத்துக் கொண்டிருக்கிற ஒன்றை வைத்துக் கொண்டு இன்னென்றைப் புரியவைப்பது கல்விமுறை, உவமை இல்லாமல் அநுமானம்கூடக் கிடையாது. உலகம் வெறும் மாயாகாரியமே என்று சொல்லுவதற்குக்கூட உபமானம் தேவைப்படுகிறது. கிளிஞ்சிலில் வெள்ளி தோன்றுவதுபோல, கயிறு பாம்பாகத் தெரிவதுபோல, பரம்பொருளினிடத்தில் உலகம் தோன்றுகிறது என்று உவகைள் சொல்லுவது வழக்கம், இந்த உவமைகள் சங்கரரால் சொல்லப்பட்டு அதனுல் புகழ்பெற்றன.

பழுதைக்கயிறு பாம்பாகத் தெரிவது எப்படி என்பதைப் புரிந்துகொண்டால், பிரமமத்திலிருந்து உலகம் தோன்றிய முறை புரிந்துவிடும். பழுதையில் தோன்றுகிற பாம்பு உண்மையுமல்ல, ஒரேயடியாகப் பொய்யுமல்ல. உண்மையாக இருந்தால் அது எப்பொழுதும் இருக்கவேண்டும்.

அப்படியில்லை. நெருங்கி நிதானித்து வெளிச்சத்தில் பார்த்தால் கயிறுதான் இருக்கிறது. பாம்பின் தோற்றமே முழுப்பொய்யோ என்றுல் அப்படியுமல்ல. முழுப்பொய் என்றுல் எவ்வகையிலும் அநுபவத்திற்கு வராது, முயல் கொம்பை யாராவது பார்த்திருக்கிறுர்களா? சரி. முயலைப் பார்த்திருக்கிறோம், ஆகவே முயலையும் கொம்பையும் கற்பனையில் இணைத்துப் பார்க்க முடியும்.

ஆனுல் மலடிமகனை இப்படிக் கற்பனை செய்வதுகூட முடியாது, இப்படிப்பட்ட இடங்களெல்லாம்தான் பொய் எனப்படுகின்றன. ''வட்ட சதுரம்'', ''கல்யாணமான பிரம்மசாரி'' என்பதெல்லாம்கூட இவ்வகையான பொய்கள் தாம். இவற்றுக்குத் தோற்றங்கூட இல்லை. கயிற்றில் தோன்றுகிற பாம்பு இத்தகைய பொய்யல்ல, அது பார்க்கப்படுகிறது. ''ஐயோ!'' என்று அலற வைக்கிறது. தோற்றமிருப்பதால் அது பொய்யன்று, தோன்றுமளவிற்கு அதற்கு இருப்பு உண்டு, நெருங்கி விசாரித்துப் பார்த்தால் இல்லாமற் போய்விடும். இதுபோல, இந்த உலகம் என்னும் தோற்றமும், ஈசுவர அநுக்ரஹத்தால் மெய்யறிவு வரும்வரைதான் இருக்கும்.

பாம்பின் தோற்றம் மறைந்த பின்னரும் எது அந்தப் பாம்பாகத் தோன்றியதோ அந்தக் கயிறு மிஞ்சி நிற்கும். அதுபோல உலகத் தோற்றம் மறைந்தபின்னரும் பரம்பொருளே எஞ்சி நிற்கும்.

இன்னும்: கயிற்றைப் பாம்பென்று அஞ்சி நடுங்கி ஓடுகிறுன். கூச்சலிடுகிறுன். கூட்டம் கூடுகிறது. இத்தனை

ஆர்ப்பாட்டங்களுக் கிடையிலும் கயிறு என்னவோ அப்படியேதான் இருக்கிறது. அதில் ஒரு மாறுதலுமில்லே, அதுபோல, உலகத்து ஆரவாரங்களெல்லாம் ஆத்மா வினிடத்து ஒரு சலனத்தையும் உண்டு பண்ணுவதில்லே. பொய்மைப் பேய்மை கள் கோடிகோடியானலும் உண்மை மாறுமோ என்கிருர் பகவான் சங்கரர்.

மேலும்; நிஜப் பாம்பாக இருந்தால் தடிகொண்டு அடித்தால் சாகும். பிரமை யாகத் தோன்றுகிற பாம்பைத் தடி கொண்டு அடிப்பது எப்படி? கருட மந்திரம் ஜபித்தால்தான் போகுமா? கிடப்பது கயிறுதான் என்ற அறிவு வந்தாலொழிய இந்தப் பாம்பு மறை யாது. இதுபோலவே, பொய்த்தோற்ற மான உலகத்தை என்ன செய்தாலும் போகாது. அணுக்குண்டு வைத்துத் தகர்த்தாலும் மறையாமல் இருப்பது பரம்பொருளே என்ற நிச்சயமான அறிவு வந்தால் அப்பொழுது இந்தத் தோற்றம் போகும்.

''பூமி ஏழு தீவுகளடங்கியது'' என் பது போன்ற, உள்ளதை உள்ளபடி சொல்லுகிற வாக்கியங்களால் ஆன பயன் ஒன்றுமில்லே. ஏதாவது ஒரு காரியத்திற்கு நம்மை ஏவுகிற சொற் களால் பயனுண்டு, ஆகவே ஏதோ, ''ஸத், சித், ஆனந்தம்'' என்று வர்ணிப் பதால் என்ன லாபம்? அந்த வர்ண னையை வைத்துக்கொண்டு என்ன செய் வது என்று பார்க்கவேண்டும். இவ்வளவு உயர்ந்த தன்மையுள்ள பரம்பொருளே உபாஸனே செய்யவேண்டும் என்று சொன்னல் அதில் பொருள் இருக்கிறது. வேதாந்த வாக்கியங்களெல்லாம் உபா ஸனே செய்யச் சொல்லுகின்றன. இப் படிச் சிலர் எண்ணுகிருர்கள். இதை மறுத்துச் சங்கரர் பதில் சொல்லும் பொழுது ஒரு சிறு உவமையினல் விளக்கிவிடுகிருர்:

''அப்பா! ஒரு செய்தியை உள்ளபடி தெரிந்துகொள்வதால் பலனே இல்லே யென்று சொல்லுகிருய்? கயிற்றைப் பாம்பு என்று எண்ணிப் பயப்படும் ஒருவனேப் பார்த்து, அது பாம்பல்ல, கயிறுதான் என்று தெளிவாக்கினல் அவன் பயம் தெளிந்து நிம்மதியடை கிருனே? அது பெரிய பயனில்லேயா? இதுபோல, நாம் என்றும் நமது என்றும் எண்ணியிருப்பதெல்லாம் தோற்ற மயக் கங்களே; உண்மையில் இருப்பது மெய்ப்பொருளே என்று தெரிந்து கொண்டாலே போதுமே! அத்தனே துன்பங்களும் நீங்கிவிடுமே! இது பெரிய பயன் இல்லே என்று யார் சொல்லுவார் கள்? உள்ளதை உள்ளபடி தெரிந்து கொள்வது ஒன்றுதான் நாம் செய்ய வேண்டியது. இதைத் தவிர வேறு செய்ய வேண்டியது ஒன்றுமில்லே.''

ஒருவன் செல்வச் சீமானுக வாழ் கிருன். தனது செல்வத்தைக் கவன மாகக் காப்பாற்றி வளர்க்கிருன். பின் ஒரு நாளில் அந்தச் செல்வத்தில் அவ னுக்குப் பிடிப்பு விட்டுப்போகிறது. அந்த நிலேயில் அந்தச் செல்லம் பறி போய்விடுகிறது என்று வைத்துக்கொள் வோம். அப்பொழுது அவன், ''ஐயோ! செல்வம் போய்விட்டதே!'' என்று அழுவானு? மாட்டான்.

பொய்யில் பிடிப்பு ஏற்பட்டால் அது தான் துன்பத்துக்கு விதை. விட்டு விடுதலேபெற்ருல் அது இன்பத்துக்கு ஏணி என்பது சங்கரர் தரும் குறிப்பு.

''எங்கும் பரந்துள்ள இறைவன் இதயத் துள் எப்படி அடங்கி ஒடுங்கி இருப்ப தாகச் சொல்லமுடியும்? அவனே இப் படிச் சிறுமைப் படுத்தலாமா? அபசார மில்லேயா?'' என்று கேட்டார்கள். சங்கரர் ஓர் உவமையைக் காட்டிப் பதில் சொல்கிருர். ''அப்பா! எல்லா உலகத்திற்கும் அரசனுக ஒருவன் இருக் கிருன். அவன் அயோத்திக்கும் அரச னுகத்தானே இருப்பான்?'' இப்படித் தான் நீக்கமற எங்கும் பரந்து நிற்கும் இறைவன் இதயத்துள்ளும் இருக்கத் தானே செய்வான்? இதற்கு மாருகச் சொன்னல்தான் இறைவனுக்குச் செய்யும் அபசாரமாகும் என்பது விளக்கம்.

இதயத்துள் ஏன் இறைவனே வைத்துச் சிந்திக்கவேண்டும் என்பது கேள்வி. சங்கரர் சொல்லுவார்: சாளக்ராமத் தையே விஷ்ணுவாக உபாஸிப்பதுண்டு, அதைவிட இன்னும் அந்தரங்கமான இடமாயிற்றே உன் இதயம்! அங்கு வைத்துச் சிந்திப்பதால் ஈசன் மகிழ் கிருன். இதயத்தை இறைவனுக்குக் கொடுத்துவிட்டுச் சும்மா இரு என்பது தொனி.

பரம்பொருளான ஆத்மாவை அணைக் கட்டு என்று வேதம் அழைக்கிறது. இது ஏன் என்று சங்கரர் ஓர் உவமை மூலம் அழகாகக் காண்பிக்கிருர். அணைக் கட்டு ஆற்றின் பெருக்கைத் தடுத்து நிற்கிறது. இதன் மூலம் வெள்ளம் பாய்ந்து நெல் விளையும் வயல்கள்

அழிந்துவிடாமல் காப்பாற்றப் படுகின்றன. அதுமட்டுமா? அணைக்கட்டினால் தண்ணீரைத் தேக்கி அளவோடு அந்தந்த ஊர்களின் தேவைக்கேற்ப அவ்வப் பொழுது நீரை விடுவதாலும் வெவ்வேறு பகுதிகளிலுள்ள வயல்கள் முறையாகப் பாசனம் பெற்றுத் தழைக்கின்றன.

இப்படியேதான் உலகத்தின் தரும நியதிகள் இறைவனால் வரம்பிற்குள் வைத்துக் காப்பாற்றப் படுகின்றன என்பதுடன் எந்தெந்தத் தரும நெறிகள் எவ்வெப்பொழுது ஏற்படவேண்டுமோ அவ்வப்பொழுது உயிர்களின் தேவையறிந்து அவற்றை அளித்துக் காப்பாற்றுகிறான் அவன். எல்லாவற்றுற்கும் இறைவன் அணை. எல்லாம் கட்டுக்குள் இருக்க வேண்டும் என்பது அவன் ஆணை.

தூய ஸ்படிகக் கல் ஒன்று இருக்கிறது. அதற்கு நேர் எதிரே ஒரு சிவப்பு ரோஜாவை வைத்துவிட்டால், அந்த ஸ்படிகத்தில் ரோஜாவின் சிவப்புப் பிரதிபலிக்கிறது. வெண்மையான தூய ஸ்படிகமே இப்பொழுது சிகப்பாக பவளம் போல் ஒளி வீசுகிறது. சின்னக்குழந்தை ஒன்று வருகிறது. அது அந்த ஸ்படிகத்தைப் பார்த்துவிட்டு சிவப்புக்கல் என்று நினைக்கிறது, சட்டென்று பக்கத்திலிருக்கும் சிவப்பு ரோஜாவை அகற்றிவிடுகிறோம். உடனே ஸ்படிகக்கல் வெண்மையாகிவிடுவதைக் குழந்தை பார்த்து அதிசயிக்கிறது; மலர மலர விழிக்கிறது. எப்படிப்பட்ட மாயம் என்று மகிழ்ந்து போகிறது.

இப்படித்தான் தூய பரம்பொருளில் வண்ணங்களாக உலகம் தெரிகிறது; எண்ணங்கள் எழுகின்றன. சரி, இவையெல்லாம் பரம்பொருளுடைய இயற்கை போலும் என்று குழந்தைபோல் மயங்கி நிற்கும்பொழுது, வேதாந்தங்களும் மெய்யுணர்ந்த ஆசாரியனும் பளீரென்று உலகத் தோற்றத்தை நீக்கிய தூய பரம்பொருளைக் காண்பிக்கிறபொழுது சிந்தை தெளிந்து உய்ந்துபோகிறது மானிட இனம் என்பது சங்கரர் வாக்கு.

சூரியனும் சந்திரனும் தாரகைகளும் மற்ற ஒளி மண்டலங்களும் ஆத்ம ஜ்யோதிஸ்ஸை ஒட்டித்தான் ஒளி வீசுகின்றன. இந்த இறைத்தத்துவம் இல்லையென்றால், உலகம் இருண்டுபோய்விடும். அப்படியானால் சூரியனைப்போல இறைவனும் ஓர் ஒளி மண்டலமா என்னும் ஐயம் எழக்கூடும். ஒன்றையொட்டி இன்னொன்று ஒளிவீசுகிறது என்றால் இந்த இரண்டும் ஒரே வகையான பொருளாக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை என்று சொல்லிச் சங்கரர் அதற்கு உவமையும் காட்டுகிறார்.

ஓர் இரும்புக் குண்டை அனலில் போடுங்கள். சிறிது நேரங்கழித்துப் பார்த்தால் இரும்புக் குண்டு நெருப்புக் கோளமாய்த் திகழும். இரும்பே நெருப்பாகிவிட்டதா என்ன? அதெல்லாம் ஒன்றுமில்லை. சூட்டையும் ஒளியையும் இரும்பு கொஞ்சநேரம் நெருப்பினிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறது, அவ்வளவுதான். இரும்பு சுடுகிறது என்று சொல்வதும் தவறு. சுடுவது என்னவோ நெருப்புத்தான். இரும்பு நெருப்பாகுமா? இருந்தும் அது சூட்டையும் ஒளியையும் பெற்றுக் காட்சி அளிக்கிறது. இப்படித்தான் இறைவனிடமிருந்து கேவலம் பௌதிகப் பொருளான சூரியன் முதலிய ஒளி மண்டலங்கள் ஒளிபெற்றுத் தோன்றுகின்றன. எனினும், இறைவனுடைய இயல்பு வேறு, பௌதிக ஒளிகளின் இயல்பு வேறு.

''புழுதிவாரி அடிக்கிறது'' என்று சொல்லுகிறோமே? அங்கு மாத்திரம் என்ன? மேலைக்காற்று புழுதியை அள்ளி அடிக்கிறது. காற்றின் வேகத்தால் புழுதியும் பலம் பெறுகிறது. எனினும் காற்றின் இயற்கையும் புழுதியின் இயற்கையும் வேறு. ''புழுதிதான் புழுதியை வாரி அடிக்கமுடியும், ஆகவே காற்றும் புழுதிதான்'' என்று யாராவது சொல்வார்களா?

வேதத்திலிருக்கும் சொற்கள் நித்யம் என்று எப்படிச் சொல்லமுடியும்? அப்படி நித்யமில்லாத சொற்களை வைத்துக் கொண்டு ஈசுவரன் உலகங்களைப் படைக்கிறார் என்பதுதான் எப்படிப் பொருந்தும்! என்று ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டு எதிராளி மேலும் சொல்லுகிறான். வஸுக்கள், ஆதித்யர், ருத்ரர், மருத்துக்கள் முதலிய தேவகணங்கள் சாசுவதமல்ல. ஆகவே அவர்களைக் குறிக்கும் வேதச் சொற்களுக்கும் பொருளில்லாமல் போய்விடுவதால் அவையும் சாசுவதமல்ல, இதுதான் வாதம்.

இதற்குச் சங்கரர் ஒரு சின்ன உவமையைக் காட்டிப் பதில் சொல்லுகிறார். ''அப்பா! தனித்தனிப் பசுக்கள் பிறக்கின்றன; இறக்கின்றன. ஆனால் பசு

ஜாதிக்குப் பிறப்புமில்லை; இறப்புமில்லை. அதுபோல இந்திரன் வந்து போகக்கூடும். ஆனால் இந்திர பதவி என்றுமிருப்பது தான். நாமும் நமது அநுபவத்தில் பார்க்கிறோமே? ராணுவத்தில் ஒரு சேனாபதி வருகிறார்; பிறகு போகிறார். ஆனால் சேனாபதி பதவி என்றுமிருப்பதுதானே? ஆகையால் இந்திரன் முதலிய சொற்கள் குறிப்பதற்கு ஆளில்லாமல் போய் விடாது. அவை சாசுவதமே.''

நாமும்கூட நினைத்துப்பார்த்துக்கொள்கிறோம். ''அமைச்சரவைகள் வரும்; போகும், ஆனால் அரசாட்சி தொடர்ந்து நடக்கும்.'' என்று சொல்வதில்லையா? இது அப்பொழுதே சங்கரர் சொன்ன சங்கதிதான்.

நமக்கு ஒன்று தெரியவில்லை என்பதால் அப்படி நடக்கவே நடக்முடியாது என்று சொல்லிவிடலாமா? வியாஸர் முதலிய பெரியவர்களுக்கு எது ஸாத்தியமோ அது எல்லாருக்கும் ஸாத்தியம் என்று கூறுவதற்கில்லை. வியாஸர் முதலிய பெரியோர்கள் தேவர்களுடன் நேரில் பேசியதாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதெல்லாம் கட்டுக்கதை என்று உதறமுடியாது. நம்மால் முடியவில்லை என்பதால் முன்னோர்களால் முடியவில்லை என்பது நகைப்புக்கு இடமாகும், இதைச் சின்ன உதாரணத்தால் விளக்குகிறார் சங்கரர்.

உலகெல்லாம் ஒரு குடையின் ஆளுகிற சக்ரவர்த்தி இப்பொழுது யாரேனும் இருக்கிறார்களோ? இல்லை. இந்தக் காரணத்தால் அப்படிப்பட்ட சக்ரவர்த்திகள் ஒருபொழுதும் இருந்ததில்லை என்று சொல்லமுடியுமா?

என்னுடைய அறிவிற்குள் வருவதைத்தான் நான் ஒப்புக்கொள்வேன் என்ற அசட்டுப் பிடிவாதமும் அறிவின்மையே ஆகும் என்பது உவமையின் கருத்து.

தெய்வம் ஒன்றே

ஹிந்துசமயம் சொல்லும் எல்லாத் தெய்வங்களும் ஒன்றேயாகும். இப்படி இருக்க ஒரு தெய்வம் இன்னொன்றைவிடப் பெரியது என்றும் ஜனங்கள் ஏன் சண்டைபோட்டுக் கொள்ளுகிறார்கள்?

ஒரு நதிக்குக் குறுக்கே கட்டிய பாலத்துக்குப் பல கண்கள் இருக்கின்றன. ஒரு கண்ணுக்குள் பாதி வளைவுக்கு அடியில் நிற்கும் ஒருவனுக்கு, மற்ற கண்களும் வளைவுகளும், தான் நிற்கும் கண்ணையும் வளைவையும்விடச் சிறியனவாகவே தோன்றும். இதேபோல பக்தன் ஒருவனுக்குத் தன் இஷ்டதெய்வத்தினிடம் வைத்திருக்கும் பற்றுக் காரணமாக, மற்றத் தெய்வங்கள் தன் இஷ்டதெய்வத்தைவிடத் தாழ்வானவையாகவே தோன்றும். ஆனால் எல்லாத் தெய்வங்களுமே ஒவ்வொரு வகையில், மூலமான ஒரே தெய்வத்தின் தோற்றங்களேயாம். பாலத்தின் கண்கள் யாவும் ஒரே அளவில் கட்டியவையே.

—ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி பெரியவர்கள்.

காலத்தை வென்ற காமகோடி

N. ராமேசன், I. A. S.

இருநூறு, முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நம் தேச சரித்திரத்தை நிர்ண யிப்பதற்கு ஆதார பூர்வமான அரசாங் கப் பத்திரங்கள் எதுவும் கிடையாது. கலிங்கத்துப் பரணி போன்ற ஒரு சில நூல்களிலிருந்து கிடைக்கும் வரலாற்று உண்மைகளும் மிகவும் சொற்பமே. எனவே அந்தப் பழங்காலச் சரித்தி ரத்தை நிர்ணயிப்பதற்குக் கல்வெட்டுக் களும், செப்புப் பட்டயங்களுமே பெரும் பாலும் உதவுகின்றன.

இவற்றில் செப்பேடுகள் என்பவை அர சர்கள் செய்த தானங்களைப் பற்றிய விவ ரங்கள் பொறித்தவையாகும். கிரகணம், அர்த்தோதயம், மகோதயம், ஸங்க் ராந்தி முதலிய புண்ணிய காலங்களில் அரசர்கள் தம் சந்ததியின் மேன்மையை முன்னிட்டு அந்தணர்களுக்கும், ஆலயங் களுக்கும், மடங்களுக்கும் நிலமாகவோ, மனையாகவோ, கிராமமாகவோ தானங் கள் வழங்குவதுண்டு. இந்தத் தானச் சொத்துக்களின்மீது அரசாங்க சேவகர் கள் தவறுதலாக வரிகள் விதித்து விடாம லிருப்பதற்காக, அவ்வரசர்கள் தானம் வழங்கிய விவரங்களைச் செப்பேடுகளில் எழுதச் செய்து அவற்றைத் தமது முத் திரையுடன் தானம் பெற்றவர்களிடம் கொடுப்பார்கள். இந்தச் சாதனங்களின் முதற்பகுதியில் தானம் தந்த அரசைப் பற்றிய விவரங்களும், அவர் பெற்ற வெற்றிகளும், அவரது வம்சாவளியும் கூறப்பட்டிருக்கும். இது பிரசஸ்தி எனப் படும். பிற்பகுதியில் தானம் பெற்றவ ரைப் பற்றியும் தானம் அளிக்கப்பட் டது எதற்காக என்பது பற்றியும், அளித்த நாளும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்தச் செப்பேடுகள் தானம் பெற்றவர் களின் தலைமுறையினரால் காக்கப்பட்டுப் பின்னர் அஜாக்கிரதையினாலோ அல்லது அத்தலைமுறை நசித்தவுடனே, அல்லது தானம் அளித்த அரச வம்சம் முடிந்த பின்போ காணாமற் போய்விடுகின்றன. காலப்போக்கில் தற்செயலாக இவை வெளிப்படும்போது பழைய அரசர்களைப் பற்றியும், அவர்கள் காலத்தைப்பற்றியும் பல விஷயங்கள் நமக்குத் தெரியவருகின் றன. நம் சரித்திரத்தைப் புனர்நிர்மா ணம் செய்யவும் இவை உதவுகின்றன.

அரசாட்சி புரியும் ராஜ வம்சத்தைப் பற்றி மட்டும் அல்லாமல், பல நூறு ஆண்டுகளாகத் தண்டம் தாங்கி ஞான ஆட்சி புரிந்து வரும் ஞான வம்சத்தைப் பற்றிச் செப்பேடுகள் சொல்லும் சுவை யானதொரு சரித்திரத்தை இங்கு காண் போம்.

காலம் காலமாகத் தமிழ் நாட்டில் தருமம் தழைக்கச் செய்து வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்கும், அதன் பீடாதிபதிகளுக்கும் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்து பல மன்னர் கள் கிராமங்களாகவும், தோட்டங்களா கவும், அணிபணிகளாகவும் காணிக்கை கள் சமர்ப்பித்திருக்கின்றனர். இந்தக் காணிக்கைகள் பற்றிய விவரங்களைச் செப்பேட்டில் பொறித்து அந்தச் சாத னங்களையும் ஸ்ரீமடத்தில் சமர்ப்பித்திருக் கின்றனர். இவை இன்னும் ஸ்ரீகாமகோடி பீடத்தின் நூல்நிலையத்தில் வைத்து காப் பாற்றப்பட்டு வருகின்றன. இவற்றை பரி சீலிக்கும் வாய்ப்பை எனக்கருளிய இன் றைய பீடாதிபதிகளான ஸ்ரீசந்திரசேக ரேந்திர சரஸ்வதி ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகளுக்கு என் இதயபூர்வமான அஞ் சலிகளைச் செலுத்தி, இந்தச் செப்பேடு கள் கூறும் விவரங்களைச் சொல்லத் தொடங்குகிறேன்.

இந்தச் செப்பேடுகள்தான்தாம் எவ்வ ளவு அதிசயமான விவரங்களைச் சொல்லு கின்றன? குதுப்ஷாஹி வம்சத்தைச் சேர்ந்த கோல்கொண்டா சுல்தானும் முகம்மதிய மன்னருக்குட்பட்ட இரு அமைச்சர்களும் கூட அல்லவா காம கோடி பீடாதிபதிகளுக்கு காணிக்கை கள் செலுத்தியிருக்கிறார்கள்! அப்படியா னால் இப்பீடத்தின் பெருமை நம் தமிழ் நாட்டு எல்லையையும், ஏன் இந்து மதத் தின் எல்லையையும் கூடக் கடந்து பரவி

யிருக்கிறது என்று தெரிகிறதல்லவா? ஆம், அருளுக்கு எல்லை ஏது?

ஸ்ரீ காமகோடி பீடத்துக்குத் தான சாஸனம் அளிக்கப்பட்டுள்ளவற்றில் மிகவும் தொன்மை வாய்ந்த ஒரு செப்பேட்டை இப்போது அறுதியிட்டு உறுதியாகக் கால நிர்ணம் செய்யலாம்.

ஸ்ரீ காமகோடி பீடநூல் நிலையத்தில் காணப்பட்ட செப்பேடுகளில் ஒன்று ஒரு வாக்கியத்தின் நடுவிலிருந்து தொடங்குவதால், அதற்கு முற்பகுதி ஒன்று உண்டு என்பது நிச்சயமாயிற்று. ஆனால் அந்த முந்தைய ஏடு, எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை; கிடைத்த ஏட்டின் கடைசியில் 'ஸ்ரீ விஜய கண்ட கோபால தேவன்' என்று தெள்ளத் தெளிய தமிழில் கையொப்பம் இருந்தது. இவன் தான் காணிக்கை செலுத்திய கோமகன். ஸ்ரீ ஹஸ்திசைலநாதஸ்வாமியின் கோயிலுக்கு மேற்கேயுள்ள ஸ்ரீ சங்கரமடத்திலிருக்கும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கு இக் காணிக்கை அர்ப்பணிக்கப்பட்டதாக வடமொழியில் தெளிவாகக் கூறுகிறது செப்பேடு. ஆம். கையொப்பம் தவிர மீதி வாசகம் முழுதும் வடமொழியில்தான் அமைந்திருக்கிறது. இவை ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முந்தைய கிரந்த லிபியில் பொறிக்கப்பட்டு சுலோகங்களாக அமைந்தவை. அளித்தவன் யார்? யாருக்கு அளித்தான் என்பவை மட்டுமின்றி அளிக்கப்பட்ட பொருளைப் பற்றியும் இந்தச் செப்பேடு தெரிவிக்கிறது. அம்பிகா என்ற ஒரு கிராமம் முழுவதுமே இந்தக் காணிக்கைப் பொருள். ஸ்ரீ விஜயகண்ட கோபாலனின் காணிக்கையான அது வேகவதியாற்றுக்கு வடகரையிலுள்ள வளமிக்க பகுதி. அதன் வளத்தைப் பற்றிய சுலோகங்களிலும் வளம் இருக்கிறது.

தினம் நூற்றியெட்டு அந்தணர்களுக்கு உணவு அளிப்பதற்காக இந்தக் கிராமம் ஸ்ரீ காமகோடி பீடத்துக்கு அளிக்கப்பட்டது என்கிறது சாஸனம்.

சரித்திரத்தை நிறுவிக் காட்டுவதற்கு மிகவும் வசதியாக, தானம் வழங்கப்பட்ட தேதியையும் இச்செப்பேடு கூறுகிறது. கர வருடம் ஒன்றில், சூரியன் கர்காடக ராசியில் இருக்கும்போது—அதாவது ஆடி மாதத்தில்—சுக்லபட்ச தசமியன்று, இந்து வாரமென்ற திங்கள் திருநாளில், அநுராத நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காணிக்கை செலுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வளவு விரிவாக தானம் பற்றியும் தானம் அளித்தவர்-அளிக்கப் பெற்றவர் குறித்தும், தானம் வழங்கப்பட்ட தேதி குறித்தும் இந்தச் சாஸனம் சொல்லியும் கூட சரித்திரபூர்வமாக அதனைப் பற்றிய உண்மை இதுவரையிலும் சரிவர அறியப்படவில்லை. காரணம்முதல் செப்பேடு இவ்வளவு காலமாக வெளிப்படாததுதான்.

கி. பி. 1250-ம் ஆண்டு பட்டத்துக்கு வந்த விஜய கண்ட கோபாலன் என்ற ஒரு தெலுங்குப் பல்லவ மன்னனைச் சரித்திரம் அறியும். எனவே, முன்பு இந்தச் சாதனத்தைப் பரிசிலனை செய்திருந்த ஸ்ரீ டி. ஏ. கோபிநாத ராவ், பேராசிரியர் ஸ்ரீ எஸ். வி. வெங்கடேசுவரா. ஸ்ரீ எஸ். கிருஷ்ண சாஸ்திரி, திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை முதலிய அறிஞர்கள் இது அந்தத் தெலுங்குப் பல்லவ மன்னனின் காணிக்கை என்றே கருதினர். கி. பி. 1291-ம் ஆண்டு கரவருஷமாதலால் இந்தக் காணிக்கை விஜய கண்ட கோபாலனின் ஆட்சிக் காலத்தின் நற்பத்தொன்றாவது ஆண்டில் அளிக்கப்பட்டது என்று அவர்கள் அநுமானம் செய்தார்கள். என்றாலும், கி. பி. 1291-ம் ஆண்டின் ஆடி மாத சுக்கிலபக்ஷ தசமி ஒரு சனிக்கிழமையாக இருக்கிறது; செப்பேடு சொல்லுவதுபோல் திங்கள் அல்ல. அன்றைய நட்சத்திரம் விசாகம்; அநுராத அல்ல. செப்பேடுகளில் தேதி விவரம் தப்புவது மிகவும் அரிது. எனவே இம்முரண்பாடுகளைக் கவனித்த இந்த அறிஞர்கள், திர்மானமாகக் கால நிர்ணயம் செய்ய இயலவில்லை என்று தயங்கியப் பிறகு விஷயத்தையே விட்டு விட்டார்கள். (இந்த இரண்டாது ஏட்டைப் பற்றிய தகவல்கள் 1615-ம் வருஷத்திய 'எபிக்ராபிகா இண்டிகா'வின் பதின்மூன்றாவது புத்தகத்தில் பேராசிரியர் வெங்கடேசுவரா அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.)

முதல் ஏடு நெடுங்காலமாகத் தேடப்பட்டு வந்தது. ஒருவேளை 'இரண்டாம் ஏட்டில் காணக் கிடைக்காத தகவல்களை அது தெரிவிக்கக் கூடும்; இதுவரை நிச்சயப்படுத்திக் கூறமுடியாத கால விவரத்தை அது தெளிவாக்கக்கூடும்? என்று நான் நம்பினேன். என்னுடைய அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்; சில மாதங்களுக்கு முன்பு இந்த முதல் ஏடும் ஸ்ரீ காமகோடி பீடத்திலிருந்து கிடைத்து விட்டது. அதோடு, ஸ்ரீ ஆசாரியசுவாமிகள் அதனை எனக்கு அனுப்பி வைத்ததும் நான் எதிர்பார்த்தது போலவே அது சந்தேகங்களைத் தீர்த்து வைத்ததும், நம்முடைய நல்வினைப் பயனேயாகும். இது சின்னஞ்சிறிய செப்பேடுதான். ஆனாலும் இத்தனை ஆண்டுகளாக ஆழப் புதைந்து

கிடந்த விவரத்தையல்லவா வெள்ளிடை மலையாக எடுத்துக் கூறிவிட்டது.

இந்தப் புராதன கிரந்த லிபியை உள்ளபடி புரிந்துகொள்வது மிகவும் சிரம சாத்தியமான காரியமாகும். சாஸன சாஸ்திர விதிகளை மனத்தில் கொண்டு நீண்ட காலம் நுணுகி ஆராய்ந்த பின்னரே அதனைப் புரிந்துகொண்டு தேவ நாகரியில் பெயர்த்துத் தர இயன்றது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த லிபியிலும், அதனை எழுதும் முறையிலும் மத்திய சரித்திரக் காலத்துக்கே உரிய விசேஷ அம்சங்கள் காணப்படுகின்றன. அநேகமாக எல்லாச் செப்பம் பட்டயங்களிலும் போல், இதிலும் குறில் நெடில் இவற்றைப் பாகுபடுத்துவதில் அதிக அக்கறை காட்டப்படவில்லை. எனவே உள்ளபடி இதனைக் கொடுத்தால் இதிலுள்ள சிக்கல்களை 'நிபுணர்கள்' தான் அறிந்துகொள்ள முடியும். ஆகையால் நாகரப் பெயர்ப்பில் உசிதமான வரை மூலத்தைச் செப்பம் செய்து தந்திருக்கிறேன்.

முதல் செப்பேட்டில் ஆரம்பத்திலிருந்து ஏறக்குறைய எட்டாது சுலோகம் வரை காணப்படுகிறது. இருபதாவது சுலோகத்துடன் இரு சாஸனங்களும் பூர்த்தியாகின்றன. அரசனின் பிரசஸ்தியைக் குறிக்கும் சுலோகளில் முதல் மூன்று சார்த்தூல விக்ரீடித விருத்தத்திலும், நான்காவது மந்தாக்ராந்த விருத்தத்திலும், மீதமுள்ள பதினாறு சுலோகங்கள் அநுஷ்டுப் சந்தத்திலும் உள்ளன.

முதல் ஏட்டின் ஏழாவது சுலோகத்தில் தான் ஆராய்ச்சியைத் தூண்டிய முக்கியமான ஒரு விஷயம் கண்டிருந்தது. அதாவது இந்தக் காணிக்கையானது விஜய கண்ட கோபாலன் பட்டத்துக்கு வந்த பதினாறும் ஆண்டு (பட்டாபிஷேசனாத் ஊர்த்வம் வர்ஷே ச ஸதி ஷோடசே) அர்ப்பிக்கப்பட்டதாக அதில் கண்டிருக்கிறது. இதன்படி, மேலே சொன்ன விஜய கண்ட கோபாலன் என்ற ஆந்திரப் பல்லவனே தானமளித்தவன் என்றால் 1266-ம் ஆண்டு தான் அளிக்கப்பட்டிருக்கவேண்டும்: இது க்ஷய அல்லது பிரபவ ஆண்டாகவே இருக்கும்; சாஸனத்திலுள்ளது போல் கர அல்ல. எனவே இந்தத் தானமானது இதுவரை ஆராய்ச்சியாளர்கள் எண்ணிய அரசனுடையதாக இருக்கமுடியாது என்று திண்ணமாகத் தெரிந்து கொண்டேன். எனவே, புதிதாகவே கால நிர்ணயம் செய்யத் தொடங்கினேன். அதாவது, எந்த கர வருட ஆடி மாத சுக்கிலபட்ச தசமியன்று திங்கட் கிழமையும், அநுராத நட்சத்திரமும் கூடியிருந்தன என்பதைக் கணக்குப் போட்டுப் பார்ப்பதெனத் தீர்மானித்தேன்.

ஆனால் எங்கே ஆரம்பிப்பது, எங்கே முடிப்பது என்ற வரையறையில்லாமல் காலக் கடலில் எப்படி இறங்குவது? இந்த வரையறையையும் எனக்கு அமைத்துக்கொடுத்து விட்டது புதிதாகக் கிடைத்த இந்தச் செப்பேடு.

இந்த ஏட்டின் மூன்றாவது சுலோகத்தில் கண்டுள்ள சோள நரேச்வரோ விஜயதே ஸ்ரீ கண்ட கோபாலக: என்ற வாசகமும், ஐந்தாவது சுலோகத்தில் சோள பார்த்திவ என்று காணும் பதமும் இந்தத் தான சாஸனத்துக்குரிய மன்னன் சோழ வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதையும், இதுவரை எண்ணியது போல் தெலுங்குப் பல்லவன் அல்லன் என்பதையும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரியப்படுத்தின. இந்தச் சோழ மன்னன் ஸ்ரீ கரிராஜ சைலம் என்ற ஸ்ரீ ஹஸ்திகிரி க்ஷேத்திரமாகிய காஞ்சிபுரத்திலுள்ள விஷ்ணு ஆலயத்துக்கு இதுவே இன்றைய அருளாளப் பெருமான் கோயில் என்று நிச்சயமாகியுள்ளது - பிராகாரம், மண்டபம், கோபுரம் எல்லாம் கட்டி, புதுப் புது விழாக்களையும் எடுப்பித்ததாக எடுத்த எடுப்பிலேயே தாமிர சாஸனம் கூறுகிறது. இதைக் கொண்டு இவனது ஆணை எல்லையை ஊகிக்க முடிந்தது. இதிலிருந்து அவன் விஜயாலய சோழ வம்சத்துக்கு உட்பட்டு, விக்கிரமசிம்மபுரம் என்ற நெல்லூரிலிருந்தும், தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சியம்பதியிலிருந்தும் சாமந்த மன்னர்களாக ஆட்சி புரிந்த தெலுங்கு சோழ வம்சத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று எண்ணினேன். என் எண்ணத்துக்கு உரமிட்டது செப்பேடு சொன்ன இன்னொரு விஷயம். அதாவது இந்த அரசனின் இயற்பெயர் ஸ்ரீகண்ட கோபாலன் என்பதுதான்; இவனது திக்விஜயங்களாலேயே இவன் விஜயகண்ட கோபாலன் ஆனான் - ராகவன் விஜயராகவனானது போல, என்ற சமாசாரம். [யஸ்ஸர்வாம் அவநீம் விஜித்ய விஜய ஸ்ரீகண்ட கோபால இத்யாக்யாவான் (சுலோகம் 2) விஜயதே ஸ்ரீகண்ட கோபாலக: (சுலோகம் 3) இந்தப் பெயர் அறிஞர்கள் நிர்ணயித்தது போல் அவன் தெலுங்குப் பல்லவனான விஜயகண்ட கோபாலனல்லன், ஆனால் தெலுங்குச் சோழ வம்சத்தைச் சேர்ந்த வெறும் ஸ்ரீகண்ட கோபாலனாக இருக்க வேண்டுமென்பதைக் காட்டிற்று. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மன்ம

ஸித்தியின் காலத்திலிருந்துதான் இந்த ஆந்திர சோழப் பரம்பரையைப் பற்றித் தெரிய வருகிறது. எனவே ஒரு மதிப்பாக அதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து-அதாவது கி. பி. பத்தாவது நூற்றாண்டிலிருந்து-பதினைந்தாம் நூற்றாண்டு வரை வருகிற கர வருடங்கள் எத்தனையோ அத்தனையிலும் உள்ள ஆடி மாதங்களில் சுக்கிலபட்ச தசமி திதியில் என்ன கிழமை, என்ன நட்சத்திரம் என்று அறுபது ஆண்டுகளாகக் கணித்துக் கீழே தந்திருக்கிறேன்.

கர வருடத்துக்குச் சமமான ஆங்கில ஆண்டு	இவ்வாண்டின் ஆடி.மாத சுக்கிலபட்ச தசமிக்குச் சரியான ஆங்கில மாதமும், தேதியும்	
கி.பி. 931	ஜூன்	27
,, 991	ஜூலை	24
,, 1051	,,	21
,, 1111	,,	17
,, 1171	,,	14
,, 1231	,,	10
,, 1291	,,	7
,, 1351	,,	4
,, 1411	,,	1
,, 1471	,,	26

அன்றைய கிழமை	அன்றைய நட்சத்திரம்
திங்கள்	விசாகம்
வெள்ளி	ஜேஷ்டம்
ஞாயிறு	,,
திங்கள்	அநுராதா
புதன்	,,
வியாழன்	,,
சனி	விசாகம்
திங்கள்	,,
புதன்	,,
வெள்ளி	அநுராதா

முடிந்த முடிபாகத் தானம் தரப்பட்ட தேதியைக் கண்டு கொண்டேன். கி. பி. 1111-ம் ஆண்டு ஜூலை 17 ந் தேதிக்குச் சரியான கர வருட ஆடி, சுக்கிலபட்ச தசமி தினம், செப்பேட்டில் காண்பது போல் ஓர் அநுராத நட்சத்திரம் கூடிய திங்கட்கிழமையாகவே அமைந்திருக்கிறது அல்லவா? அன்றுதான் ஸ்ரீகண்ட கோபாலன் காஞ்சீபுரம் மடாதிபதிகளாயிருந்த ஒரு சங்கராசாரிய சுவாமிகளுக்குக் காணிக்கை செலுத்தி, அதைச் செப்பேட்டிலும் பொறித்து, ஸ்ரீமடத்தில் ஒப்புவித்திருக்கிறான். இதைப் பற்றி எள்ளளவும் ஐயமில்லை. தானமளித்த அரசனைப் பற்றிய விவரங்களை இனி ஆதாரபூர்வமாக ஆராயலாம்.

செப்பேடு கூறும் கரிராஜ சைல விஷ்ணு ஆலயமென்பது காஞ்சீபுரம் அருளாளப் பெருமாள் கோவில் என்று கூறுவதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. எனவே இக்கோயிலுள்ள கல்வெட்டுக்களைப் பற்றி ஆராயலானேன். 1902-ம் ஆண்டு 'எபிகிராபிகா இண்டிகா'வின் ஏழாவது புத்தகத்தில் இக்கோயிலிலுள்ள ஒரு சிலாசாஸனத்தை டாக்டர் லூடர்ஸ் என்ற ஹாலந்து அறிஞர் பிரசுரித்திருப்பது இதற்குப் பேருதவி புரிந்தது. இந்தச் சாஸனத்தில் சக வருஷம் 1127-ல் தம்முஸித்தி என்ற தெலுங்கு சோழ அரசன் நெல்லூரில் பட்டாபிஷேகம் செய்து கொண்ட பின், (நெல்லூர் நகரே கிருதாபிஷேக:) ஸ்ரீ ஹஸ்தி சைலஸ்வாமிக்கு 'முட்டியம் பாக்கா' என்ற கிராமத்தை அர்ப்பணித்திருப்பதாகக் கூறியிருக்கிறது. வடமொழிப் பாக்களால் ஆன கல்வெட்டு இது. இதில் தம்முசித்தியின் தகப்பனார் ஸ்ரீகண்ட கோபாலர் என்றும், தாயார் ஸ்ரீதேவி என்றும், தமையன் மன்மஸித்தி என்றும் கூறப்பட்டுள்ளது:

ஸ்ரீகண்டகோபால ஸ்ரீ தேவீ வீரஸூத:
மன்மஸித்தி மஹாராஜ அநுஜன்மா,
தம்முஸித்தி மஹீபால:

தம்முஸித்திக்கும் அவன் தந்தைக்கும் இடையே அவனது சகோதரனான மன்மஸித்தி, இரண்டாவது பேட்டா ஆகியோர் அரசு புரிந்ததாக ஏனைய சான்றுகளிலிருந்து தெரிகிறது. தம்முஸித்தியின் கல்வெட்டு சக வருஷம் 1127-ல், அதாவது கி. பி. 1205-ல் பொறிக்கப்பட்டது. விஜயகண்ட கோபாலனின் சாஸன காலம் கி. பி. 1111-ஆக இருக்கலாமென முன்பு முடிவு செய்தோம். இந்த விஜயகண்ட கோபாலனே தம்முசித்தியின் தந்தையான ஸ்ரீ கண்ட கோபாலனென்றால் (இவனது இயற்பெயர் இதுதான் என்பதை முன்பு கண்டோமே) இருவர் ஆட்சிக்குமிடையே தொண்ணூற்று நான்கு ஆண்டுகள் இடைவெளி இருப்பது தெரியும். நான்கு

முதல் ஏடு: இரண்டாம் பக்கம்

स्वस्ति श्रीकरिराजशैल शिखरालंकार चिन्तामणेः
विष्णोरुन्नत गोपुर प्रवितत प्राकार सन्मण्टपैः।
नाना नव्य महोत्सवादिकरणैः श्री गण्डगोपाल
भूसुत्रामा कलयन्मुदं विजयते प्रत्यर्थिनिद्रावणः॥१॥

यत्कीर्तिस्तुहिनांशुशेखरमणेः आवास भूमीधरो
यस्योम्नतरः प्रतापवलयो मेरुस्सुरावासभूः ।
यस्सर्वामवनीं विजित्य विजय श्रीगण्डगोपाल इत्या-
ख्यावान् भुवने धनञ्जय इव प्रख्यातशौर्यो नृपः ॥ २
यः कन्या पृथिवीधनाचलमहादानांबुधारा परीवाहैः
पूरितमातनोति जलधिं नित्यं विशुद्धात्मनाम् ।
यः कन्यास्मणिमेव कृपया पुत्रं कुलांकूरकं लेभे
चोळनरेश्वरो विजयते श्रीगण्डगोपालकः ॥ ३ ॥
यस्योदग्रध्वज बिळसितः फल्गुनस्येव तादृक्
तेजोराशेः पवनतनयः पावनी यस्य कीर्तिः ।
धर्मेणास्यास्सुचिरभवनेः पाळनादस्य लोके
विख्यातासीद्विजयपदवत् गण्डगोपालसंज्ञा ॥ ४ ॥
स्वस्ति श्रीमान्स्त्रिभुवन + क
+ चक्रवर्ती महाबलः*
ल्पकश्चोळपार्थिव आर्थिनामाश्रितानाञ्च
विदुषां कल्पपादपः ॥ ५ ॥
अशेषशास्त्रजलधिपारगैः परिवारितः
शास्त्रेषु कुशलश्शूरः क्षमामूर्तः परन्तपः ॥ ६ ॥
सोयं श्रीगण्डगोपाल शोळ क्ष्मापतिरात्मनः
पट्टाभिषेचनादूर्ध्वं वर्षे च सति षोडशे ॥ ७ ॥
तपोधनाय मुनये शिवध्यानरतात्मने ।
स्वात्मारामाय विदुषे पोप्पिल्लिप्रथितात्मने ॥ ८ ॥

மன்னர்களின் ஆட்சிக் காலம் தொண்ணூற்று நான்கு ஆண்டுகளில் பரவியிருப்பதென்பது நம் சரித்திரத்தில் சர்வ சகஜமே. ஆகவே விஜயகண்டகோபாலனைக் குறித்த நம் அனுமானம் ஊர்ஜிதமாகிறது. அவனது காலம் முதலாவது குலோத்துங்க சோழனின் காலவரைக்குட்படும்.

காணிக்கை அளிக்கப்பட்ட ஆசாரிய புருஷர் யார் என்று தெரிந்துகொள்ளலாமா? ஹஸ்தி சைல நாதராலயத்துக்கு மேற்கேயுள்ள மடத்தில் வசிக்கும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கு - [ஸ்ரீ ஹஸ்தி சைலநாதஸ்ய நிலயாத் பச்சிமே மடே.. ஸ்ரீ சங்கரார்ய குரவே] காணிக்கை செலுத்துவதாகக் கூறும் சாஸனம், அந்த ஆசாரியர்களை ஆத்மாநந்தத்தில் திளைக்கும் ஞானி, 'பொப்பிள்ளி' என்று பிரசித்தி பெற்றவர் (ஸ்வாத்மா ராமாய விதுஷே, பொப்பிள்ளி ப்ரதிதாத்மனே) என்று புகழ் பாடுகிறது. பொப்பிள்ளி என்பது கேரளம் அல்லது ஆந்திர தேசத்தின் ஓர் இல்லப் பெயர். (இன்றைக்கும் மலையாளத்தில் ஸ்ரீ ஆதி சங்கரபகவத் பாதர்களைக் குறிப்பிடும்போது கைப்பிள்ளி என்னும் அவரது இல்லப் பெயரையும் சேர்த்துச் சொல்லுகிறார்கள்.) காமகோடி பீடத்தின் குரு பரம்பரையைப் பார்த்தால் கி. பி. 1111-ம் ஆண்டு அதில் ஆரோஹணித்திருந்தவர் இப்பீடத்தின் நாற்பத்தி ஏழாவது அதிபதிகளாகிய மூன்றாவது சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் என்று தெரிகிறது. கி. பி. 1098 லிருந்து 1160 வரை இவரது அருளாட்சி நடைபெற்றது. அதோடு, இவரது பூர்வாசிரமப் பெயர் ஸ்ரீகண்டர் என்றும் இவர் ஆந்திர தேசவாசி என்றும் குரு பரம்பரை பகர்கிறது. ஆகவே பொப்பிள்ளி என்பது ஆந்திர நாட்டில் 'இண்டி பேரு' எனப்படும். இவரது இல்லப் பெயரே எனக் கொள்ளலாம். இத்துறவி மன்னர் ஸ்ரீகண்டருக்குத்தான் முடிமன்னன் ஸ்ரீகண்டன் அம்பிகாபுரத்தை அர்ப்பணித்திருக்கிறான்.

அர்ப்பணப் பொருள் அம்பிகாபுரம் என்ற கிராமமெனக் கண்டோம். இது யைர கோஷ்டியத்தைச் சேர்ந்தது என்று சாஸனம் சொல்லுகிறது. இதுவே தமிழில் எயிற்கோட்டம் எனப்படுவது. இது தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள 'எயிர்' என்ற கிராமத்திலிருந்து வந்த பெயராகும். க்ருத்ரபுரத்துக்குக் கிழக்கில் அம்பிகாபுரம் இருப்பதாகக் காண்கிறது. இந்த க்ருத்ரபுரமே ஜடாயு தீர்த்தம் எனப்படும் திருப்புட்குழி. காஞ்சிபுரத்துக்கு மேற்கில் இந்த அம்பிகாபுரம் அமைந்திருப்பதாகவும், இதற்கு முறையே வடக்கிலும் தெற்கிலும் சிறு நன்னியும், கைதடுப்பூரும் உள்ளதாகவும் செப்பேடு சொல்கிறது. சிறு நன்னியே இன்றைய சிறுணை என்றும் கைதடுப்பூரே இன்றுள்ள கதிர்பூர் என்றும் உறுதி கொள்ளலாம். இதில் மிகவும் முக்கியமான விஷயம், இந்த இடங்களால் சூழப்பட்ட அன்றைய அம்பிகா கிராமம் இன்றும் அம்பி என்றே அழைக்கப்படுவதுதான்.

இந்த சாஸனத்தில் ஸ்ரீ சங்கரமடம் ஹஸ்தி சைலம், அதாவது திரு அத்தியூர் என்ற விஷ்ணு காஞ்சியிலுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. 'மடாம்னாயத்'

திலும் மடத்துக்குப் பக்கத்திலுள்ள ஸ்தலம் சத்தியவிரத க்ஷேத்திரம் என்று காணப்படுகிறது. இது திரு அத்தியூருக்கே வேறு பெயராகும். இன்றும் விஷ்ணு காஞ்சி ஆலயத்தருகே ஸ்ரீ காமகோடி பீடத்துக்குச் சொந்தமான ஒரு மண்டபம் இருப்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே முதலில் விஷ்ணு காஞ்சியிலிருந்த ஸ்ரீமடம் பின்பு சிவகாஞ்சிக்கு மாற்றப் பட்டது என ஊகிக்கலாம். கர்நாடகப் போர்களின்போது அதுவே கும்பகோணத்துக்கு இடம் பெயர்ந்து கும்பகோணம் மடம் என்று அழைக்கப்படலாயிற்று. ஆக, கி. பி. 1111-லேயே நமது பக்திக்குகந்த பரமபாவனமாகிய ஸ்ரீ காமகோடிபீடம் அரசர்களாலும் ஆராதிக்கப் பட்டு வந்தது என்பது சந்தேகத்துக் கிடமின்றித் தெரிய வருகிறது.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்களின் ஜீவிய காலம் கி. பி. 788—820 என்ற சரித்திர நிபுணர்கள் கூற்றை ஏற்றுக் கொண்டால், அவரது காலத்துக்கு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் இந்தக் காணிக்கை செலுத்தப்பட்டது என்று ஏற்படுகிறது. ஸ்ரீ காமகோடி பீடத்துக்கு அப்போதே இத்தகைய செல்வாக்கு இருந்ததென்றால், அதற்குக் காரணம் அதனை ஸ்ரீ பகவத்பாதர்களே அலங்கரித்ததுதான் என்று திடமாகச் சொல்லலாம். ஆதி ஆசாரியரவர்கள் கி. மு. முதல் அல்லது ஆறாம் நூற்றாண்டில் இம்மண்ணுலகில் வாழ்ந்து அதனை வாழ வைத்தார் என்று கொண்டால், பொப்பிள்ளி என்ற மூன்றாவது சந்திர சேகரேந்திர சுவாமிகள் முதல் பீடாதிபதிகளுக்கும், இன்றைய பீடாதிபதிகளுக்கும் மத்தியில் வாழ்ந்தவரென ஏற்படுகிறது. அதாவது தலைமுறை தலைமுறையாக, வாழையடி வாழையாக அடிபணிந்தவர்களுக்கு அருள் புரிந்து வந்திருக்கிறது நமது காமகோடி பீடம்.

ஃ ஃ ஃ

இனி, ஸ்ரீ காமகோடி மடத்துக்குக் காணிக்கை செலுத்தி உய்யும் பேறு பெற்ற மற்றவர்களைப் பார்ப்போம். பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டிய தங்களது இச்செயலைச் செப்பேடுகளில் எழுதி வைத்துச் சென்ற அவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்வோம்.

ஃ ஃ ஃ

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவ ராயருடைய தமையனான ஸ்ரீ வீர நரசிம்ம தேவ மகாராஜா சக வருடம் 1429-ல் (கி. பி. 1507), தமது காணிக்கையை ஸ்ரீ காமகோடி பீடாதீசுவரருக்கு அளித்திருக்கிறான். மாசிமகத் திருநாளன்று, பாவனமான துங்கபத்திரைத் தடத்தில், விருபாட்ச ஸ்வாமியின் திருச்சந்நிதியில் அர்ப்பணம் செய்து புண்ணியத்தைப் பெரும் புண்ணியமாக்கிக் கொண்டிருக்கிறான் இவன். ஜய சோழ மண்டலத்தின் பிரிவான, செங்காட்டுக் கோட்டத்துக்குட்பட்ட சங்கிலிப்பட்டுச் சீமையிலுள்ள எலிச்சூர், வெண்பாக்கம் என்ற இரண்டு கிராமங்களைக் காமகோடிபீடம் ஆசாரிய சுவாமிகளுக்கு அளித்திருக்கிறான் இவன். (சோழர் காலத்திலிருந்த மண்டலம், கோட்டம் சீமை என்னும் பகுதிப் பிரிவுகளே மாறுதலடையாமல் விஜயநகர மன்னர்கள் காலத்தில் பின்பற்றப்பட்டன.) இதில் விசேஷம், இவ்விரு கிராமங்களும் இன்றும் அதே பெயரில் இருப்பதுதான். எலிச்சூர் கிராமம் ஸ்ரீ பெரும்பூதூர் தாலூகாவிலும், வெண்பாக்கம் காஞ்சிபுரம் தாலூகாவிலும் உள்ளன. கி. பி. 1507-ல் பீடாதிபதிகளாக இருந்தவர் ஐம்பத்து நான்காவது பீடாதிபதிகளான ஸ்ரீ வியாஸாசல மகாதேவ சுவாமிகள் இவரது பெயரும் இவரது குரு ஸ்ரீ பூர்ணாநந்த சதாசிவ சுவாமிகளின் பெயரும் குரு பரம்பரையில் கண்டுள்ளபடியே தாமிர சாஸனத்திலும் இருக்கின்றன.

வீரநரசிம்ம தேவன் அதே ஆசாரியர்களுக்கு வேறொரு தானமும் வழங்கியிருக்கிறான். ஜயசோழ மண்டலத்தின் பிறிதொரு பகுதியான படவீடு ராஜ்யத்துக்கு உட்பட்ட வலகூறு சீமையிலுள்ள குடியாந்த மண்டலம் என்ற கிராமத்தை அவன் அர்ப்பணம் செய்ததாக வேறொரு செப்பேடு இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் குண்டியாத்த மண்டலம் என்ற பெயரில் இன்றைக்கும் உள்ளது அந்தக் கிராமம். இன்றும் அங்கு ஸ்ரீ காமகோடி பீடத்துக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன.

தமையன் வழி சென்றான் தம்பி. அந்தத் தம்பியின் வழியைத்தான் எந்த மன்னனும் பின்பற்ற வேண்டும் என

இரண்டாவது ஏடு: முதல் பக்கம்

श्रीहस्तिशैलनाथस्य निलयात् पश्चिमे मठे ।
निगमान्तरहस्यार्थं शिष्येभ्यस्सुविवृण्वते ॥ ९ ॥
नित्यान्नदानविधिसन्तर्पितात्मद्विजन्मने
श्रीशंकरार्ये गुरवे वत्सरे खरसंज्ञिते ॥ १० ॥
प्राप्ते कर्कटकं पुण्याराशिं कमलबान्धवे
मित्रदैवतनक्षत्रयुक्तायां शुक्लपक्षके ॥ ११ ॥

इन्दोर्वारेण युक्तायां दशम्यां सुमुहूर्तके ।
पृथग्विधरसोपेतैरन्नैरमृतसंमितैः ॥ १२ ॥

नित्यमष्टशतानाञ्च तोषणाय द्विजन्मनाम् ।
प्राञ्च गृध्रपुरात् काञ्चीपुरात् प्रत्यञ्चमुत्तरम् ॥ १३ ॥

कैदङ्कुप्पूरुतो ग्रामात् शिरुनञ्जेश्च दक्षिणम् ।
वेगवत्युत्तरतटी सीमारामैकमण्डनम् ॥ १४ ॥

नाळिकेराम्रपनसताळहिन्तालशोभितम् ।
नाना भूरुहवाटिनां पुष्पसौरभवासितम् ॥ १५ ॥

यैरकोष्टियमजस्त्रेन्दुमौळकारुण्यरक्षितम् ।
अंबिकापुरनामानं ग्रामचिन्तामणीन् ददौ ॥ १६ ॥

भूमेरस्याः प्रदानेन यावच्चन्द्रार्कयोर्गतिः ।
श्रीहस्तिशैलनिळयः प्रीयतां परमेश्वरः ॥ १७ ॥

इत्थमुत्तुङ्गया भक्त्या निधाय मनसीश्वरे ।
देवश्रीगण्डगोपाळ चोळशंकरयोगिने ॥ १८ ॥

भूदानशासनं स्वस्य हस्तसंलिखिताक्षरम् ।
अदादुन्नतधर्मस्य लाभाय शुभचेतसा ॥ १९ ॥

दानपालनयोर्मध्ये दानात् श्रेयोनुपालनम् ।
दानात् स्वर्गमवाप्नोति पालनादच्युतं पदम् ॥ २० ॥

இன்று நாம் கூறுகிறோம். ஆம், ஸ்ரீ கிருஷ்ண தேவராயரை அசோகன், ஹர்ஷன், ராஜராஜசோழன் முதலிய ஆதரிச மன்னர்களுடன் வைத்தல்லவா போற்றுகிறோம்? அந்தக் கிருஷ்ண தேவ ராயரும் போற்றி வழிபட்டது ஸ்ரீ காம கோடி பீடம். அதனைப் பெருமையோடு பகரும் பட்டயங்களையும்தான் அவர் விட்டுச் சென்றிருக்கிறாரே!

சகவருடம் *1444* (கி. பி. *1522*)-ல்—அது ஒரு சுபானு ஆண்டு-மார்கழித் திங்கள் சுக்கிலபட்ச கோத்வாதசி திதி யன்று கிருஷ்ணவேணி (கிருஷ்ணா) நதிக் கரையில் அவரது காணிக்கை அளிக்கப் பட்டது. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட யதி, ஸ்ரீ மகா தேவேந்திர சரஸ்வதி சுவாமிகளின் சிஷ்யர் ஸ்ரீசந்திர சூட சரஸ்வதி சுவாமிகளுக்கு அதை அளித்ததாகச் செப்பேட்டில் பொறித் திருக்கிறது. சந்திரகிரி ராஜ்யத்தில், செங்காட்டுக் கோட்டத்திலுள்ள பொட லூர், காட்டுப்பட்டி என்ற கிராமங்களே காணிக்கைப் பொருள்கள். பொடலூருக் குக் கிருஷ்ணராயபுரம் என்று பெயரிட்டு ஆத்மார்ப்பணம் செய்வது போன்ற சுவாநுபூதியோடு கிருஷ்ணதேவராயர் ஆசாரியர்களுக்கு அன்பளிப்புச்செய் திருக்கிறார். ஆனால் இன்றும் அந்தக் கிராமம் பொடலூர் என்ற பழைய பெயரிலேயே காஞ்சீபுரம் தாலூகாவில் இருக்கிறது. காட்டுப் பட்டியானது ஸ்ரீ பெரும்பூதூர் தாலூகாவில் காட் டேரிப்பட்டி என்ற பெயருடன் உள்ளது. ஸ்ரீ காமகோடிபீட குரு பரம்பரையி லிருந்து, செப்பேடு கூறும் ஆசாரியர் ஐம்பத்தைந்தாவது பீடாதிபதிகளான இரண்டாவது சந்திரசூடர் என்று ஊர்ஜிதமாகிறது. கிருஷ்ணதேவராயனின் தமையன் வெகுமானம் செய்த ஸ்ரீ மகா தேவரே இவரது குரு ஆவார்.

தமயைனப் போலவே இவரும் இரண் டாம் முறையாக ஸ்ரீ காமகோடி பீடத் துக்குச் சம்பாவனை செய்திருக்கிறார். சக *1450*-ம் ஆண்டு (கி. பி. *1528*) விரோதி வருடம், வைகாசி விசாகப் பூர்ணிமை யன்று ஸ்ரீ சந்திரசூட சரஸ்வதியை அடுத்துப் பீடாரோஹணம் செய்த ஸ்ரீ சதாசிவேந்திர சரஸ்வதி சுவாமி களுக்கு, அதே துங்கபத்திரை தடத்தி லுள்ள விருபாட்சர் சந்நிதியில் காணிக்கை செலுத்தியிருக்கிறார் பேர ரசர் கிருஷ்ண தேவராயர். க்ஷீரா நதிக் கரையிலுள்ள, சங்கிலிப்பட்டுச் சீமை யைச் சேர்ந்த உதயம்பாக்கம் என்ற கிராமத்தைக் கொடுத்ததாகச் செப் பேட்டில் கண்டிருக்கிறது. க்ஷீரா நதி தான் பாலாறு என்பது வெளிப்படை. செங்கல்பட்டுத் தாலூகாவில் உதயம் பாக்கம் கிராமம் அந்தப் பழைய பெயர் மறையாமலே இன்றும் உள்ளது. சர் வக்ஞ சதாசிவ போதர் என்ற புகழ் வாய்ந்த மகான் ஸ்ரீசதாசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள். இவர் இப்பீடத் தின் ஐம்பத்தாறுவது அதிபதி. கி. பி. *1524* லிருந்து *1539* வரை ஞான ஆட்சி செலுத்தியவர்.

கிருஷ்ண தேவராயர் சாமானிய சாமந்த மன்னரல்லர். சக்கரவர்த்தி என்றே விருது பெற்றவர். இவர் திருப் பணிகள் செய்திருப்பது பிரசித்தி பெற்ற புராதனப்பதிகளான திருப்பதி, ஸ்ரீ சைலம், சிம்மாசலம் போன்ற தலங் கள்தாம். இவர் அடுத்தடுத்துக் காம கோடிபீடத்தை அலங்கரித்த இரண்டு ஆசாரிய புருஷர்களுக்கும் தாமே காணிக்கை செலுத்தினர் என்பதிலிருந்து நமது ஸ்ரீ மடத்துக்கு எவ்வளவு பெருமை யான இடம் அளித்து வழிபட்டார் என்பதும், ஆசாரிய சுவாமிகளின் ஆசி யைப் பெற வேண்டுமென்பதில் எவ்வளவு நாட்டம் கொண்டிருந்தார் என்பதும் தெரிகின்றன. அந்நாள் பொதுமக்களும்

ஸ்ரீ காமகோடி பீடத்தை மகாக்ஷேத்திரங்களுக்குச் சமமாகப் பாவித்தனர் என்பதும் இதிலிருந்து வெளியாகிறது.

விஜயநகர சாம்ராஜ்யத்தை ஆண்ட வம்சங்களில் கடைசியான ஆரவீடு வம்சத்தைச் சேர்ந்த ஒரு செப்பேடு ஸ்ரீகாமகோடிபீட நூல் நிலையத்திலுள்ளது. இந்த சாஸனத்திலும் முதல்-ஏடு மாத்திரம்தான் இருக்கிறது. இதில் இந்தக் குடியைச் சேர்ந்த அரசர்களின் வம்சாவளி மட்டுமே இருக்கிறது. மற்ற ஏடுகள் இல்லாததால் எந்தக் காணிக்கையை ஒட்டி இந்த சாஸனம் அளிக்கப்பட்டது என்பதை அறிய இயலவில்லை.

கோல்கொண்டா நவாபின் முக்கியமான இரு மந்திரிகள் ஸ்ரீகாமகோடி பீடத்துக்குக் காணிக்கை அளித்துள்ளனர் என்ற விஷயம் வேறொரு செப்பேட்டின் வாயிலாக அறியப்படுகிறது. அக்கன்னா, மாடன்னா என்ற சகோதர்களே அந்த மந்திரிகள். இவர்கள் இராமபிரானின் பேரருளுக்குப் பாத்திரமான பக்த ராமதாஸரை இவ்வுலகுக்கு அளித்த புண்ணியவதியின் சகோதரர்களே.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி சாரதா பீடாதிபதிபரும், ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதியின் சிஷ்யருமான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஹொய்சால கர்நாடகத்தைச் சேர்ந்த ராமசாஸ்திர என்ற வேதியருக்கு சம்பாவனை செய்த விவரத்தைக் கூறுகிறது ஒரு செப்பேடு. அதில்தான் இவ்விரு மந்திரிமாரும் சக வருஷம் 1608 (இ. பி. 1686)-ம் ஆண்டு வைகாசி மாதப் பௌர்ணமி தினத்தில் நிகழ்ந்த சந்திர கிரகண புண்ணிய காலத்தில் மேலுபாகா என்ற கிராமத்தைக் காமகோடி பீடத்துக்கு அளித்த விவரம் தரப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பூமியில் சிறிதளவும், மடத்திலிருந்து வருடத்துச்கு இரண்டு வராகனும், விடு கட்டிக்கொள்ள மனையும் மேலே கண்ட ராம சாஸ்திரிகளுக்குக் காமகோடி பீடாதிபரால் அளிக்கப்பட்டதாகச் செப்பேடு சொல்கிறது.

புதுக்கோட்டை மன்னர்களும் ஸ்ரீ காமகோடி பீடத்துக்குப் பொருள் உருவில் மரியாதை செலுத்தியுள்ளனர். அதன் அரசர்களில் ஒருவரான விஜய ரகுநாதத் தொண்டைமான் கொள்ளிடத்துக்கு வடகரையிலுள்ள அன்பில் கிராமத்தில் காணிக்கையளிக்க முன் வந்ததாக ஒரு சாஸனம் இருக்கிறது, சக 1616 இ. பி. 1691)-ல் காணிக்கை சமர்ப்பணமாகியிருக்கிறது.

ஸ்ரீ காமகோடி பீடத்தின் பிரதிநிதியாக வெங்கடகிருஷ்ணய்யன் என்பவர் கீழ்க்கண்ட காணிக்கைகளைச் செப்பேட்டில் எழுதி வாங்கியிருக்கிறார்:

(1) தொண்டைமானின் சேவகத்திலுள்ள ஒவ்வொருவரும் ஸ்ரீ மடத்துக்கு மாதம் ஒரு குருணி நெல் வீதம் அளிக்க வேண்டும். (2) அதோடு அவர்கள் பத்து பத்து பேர்களாகச் சேர்ந்து ஒருவடைய சம்பளத்தை 'உம்பலமாக'ச் செலுத்த வேண்டும். (3) மேலும் ஆண்டொன்றுக்கு எட்டு மரக்கால் நெல் அளிக்க வேண்டும். (4) பள்ளையச் சொத்துக் கட்டளை என்ற பெயரில் அவர்கள் நாள் தோறும் மூன்றுபடி அரிசி வழங்கவேண்டும். (5) வருடத்துக்கு ஒரு முறை ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இரண்டு உடைகள் கொடுக்கவேண்டும்.

மதுரை மன்னர்கள் மட்டும் இந்த மடத்துக்குக் கைங்கரியம் செய்யத் தவறி விடுவார்களா என்ன? பதினெட்டாம் நூற்றாண்டில் மதுரையை ஆண்டு வந்த ஸ்ரீ விஜயரங்க சொக்கநாதன் அளித்த ஒரு காணிக்கையைக் கூறும் செப்பேடு மடத்தில் உள்ளது, சக வருடம் 1630 (கி. பி. 1708), விக்ருதி ஆண்டு, கார்த்திகை மாதம் சுக்கில பக்ஷப் பிரதமையில்—அது ரோகிணி நட்சத்திரம் கூடிய ஒரு திங்கட்கிழமை—அந்த அரசன், கஜாரண்ய க்ஷேத்திரம் பொன் வாசி கொண்டான் வீதியிலுள்ள ஸ்ரீ காமகோடி பீடத்துக்குச் சொந்தமான மடத்தில் தினந்தோறும் வேதியர்களுக்குப் போஜனம் செய்விப்பதற்கான இந்தச் காணிக்கையைக் கொடுத்திருக்கிறான். லோக குரு ஸ்ரீமத் சங்கராசாரியரின் ஆக்ஞையின் மீது இதனை அளித்ததாகச் சாஸனத்தில் இருக்கிறது, தொட்டியம் சீமையிலுள்ள மகேந்திரமங்கலம், கிருஷ்ணபுரம், காரக்காடு, கொண்டையம் பேட்டை, திருச்செந்துறை சீமையிலுள்ள மங்கமாம்பாபுரம், தின்னம் சீமையைச் சேர்ந்த அரியூர், கோனாட்டுக்கு உட்பட்ட அரியமங்கலம் முதலிய இடங்களிலிருந்து பூதானம் செய்திருக்கிறான் விஜயரங்க சொக்கநாதன். கஜாரண்யம் என்பது திருவானைக்கா என்ற திருப்பதியாகும். திருஞான சம்பந்த சுவாமிகளுடன் தொடர்புடையது பொன்வாசிக் கொண்டான் தெருவு. இச்செப்பேடு வழங்கப்பட்ட காலத்தில் பீடாதிபதிகளாக இருந்தவர் அறுபத்தோராவது ஜகத்குருவான மூன்றும் மகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகள் (1704—46) ஆவார். இதே செப்பேட்டில் இன்னும் சில தான விவரங்களும் தரப்பட்டிருக்கின்றன.

காவேரி கொள்ளிடத்தில் பரிசல் ஓட்டுவதற்காக அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரியிலிருந்து, அடியாரை அஞ்ஞானக் கடலிலிருந்து கடத்துவிக்கும் இப்பீடத்துக்கும் தினந்தோறும் ஒரு வராகன் கொடுக்கவும் மதுரை மன்னன் வழி செய்திருக்கிறுன். காவேரியின் இரு கரையிலுமுள்ள வயல்களிலிருந்து ஒரு 'சேய்' வயலுக்கு ஒரு 'தூம்' நெல் வீதம் மடத்துக்கு கிடைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறுன். மேலும் ஜம்புகேசுவர சுவாமியையே காமகோடி பீடத்துக்குக் காணிக்கை அளிக்கச் செய்திருக்கிறுன் அவன். ஜம்புகேசுவரர் ஆலயத்திலிருந்து ஜகத்குரு மடத்துக்குப் பிரதி தினமும் நான்கு படி அரிசி, இரண்டு வேளைச் சாப்பாடு, இரண்டு தோசை, இரண்டு அதிரசம், ஒரு சுகியன் ஆகியவையும் (என்ன கச்சிதமான கணக்கு பாருங்கள்!) விளக்குக்கு எண்ணெய்க்காக (தீபம் ஸமரு) நாள்தோறும் முக்கால் படி எண்ணெயும் கொடுக்க வகை செய்திருக்கிறுன் விஜயரங்க சொக்கநாதன்.

மகாமதி என்று போற்றப்படும் பேரறிவாளரான ஆசாரியரின் இப்பீடத்துக்கு மகம்மதிய மன்னன் ஒருவனும் காணிக்கை அளித்திருக்கிறுன் என்பது குறிப்பிட வேண்டிய விஷயம் அல்லவா? காஞ்சிக்கு எத்தனையோ தொலைவிலுள்ள கோல்கொண்டாவிலிருந்து ஆட்சி புரிந்த குதுப்ஷா வம்சத்தைச் சேர்ந்த தானுஷா என்பவன் இந்தக் காணிக்கையைச் செலுத்தி யிருக்கிறுன். ஹிஜிரி 1088-ம் ஆண்டு ஷௌவல் மாதம் முதல் தேதியன்று இந்த முஸ்லீம் மன்னன் சாரதா மடம் எனப்படும் காமகோடி பீடத்தின் ஆசாரியர்களுக்குக் காணிக்கை செலுத்தி யிருக்கிறுன்.* அன்றோடு முடிந்துவிட்ட விஷயமல்ல அது. ஆண்டொன்றுக்கு நூற்றுப் பதினைந்து வராகன்கள் சமர்ப்பிப்பதாகச் செப்பேட்டில் கூறியிருக்கிறது. அந்தணர்களுக்கு உணவளிப்பதற்காக இது பயன்படும் என்று செப்பேடு தெரிவிக்கிறது.

இச்செப்பேட்டில் பல விசேஷங்கள். விஷயத்தின் விசேஷம் தவிர வாசகம், லிபி எல்லாவற்றிலும் பல புது அம்சங்கள் அமைந்திருக்கின்றன. தெலுங்கு எழுத்திலுள்ளது செப்பேடு. ஆனுல் மொழியோ பாதி வடமொழியும் பாதி பாரசிகமுமாக உள்ளது. முகலாய மன்னரை ஜில்லு-இல்-உலா (ஆண்டனின் பிரதிநிதி), திவானி ஹுமாயும் (ஏக சக்ராதிபதி), கெலாபாத் மசஹனு ('காலிப்' போன்ற கௌரவம் உடையவர்). பர்மான் பரானு ஜஹாமதா (மற்ற அரசர்களால் பணியப்பட்டவர்) என்றெல்லாம் பாரசிக மொழியில் வர்ணித்திருக்கிறது. காஞ்சியையும் காமகோடி ஜகத்குருவையும், ஆதி தேவதையான சந்திரமௌளீசுவரனையும்.

ஸ்வஸ்தி ஸ்ரீமத் அகில பூமண்டலாலங்கார, த்ரயஸ் த்ரிம்சத்கோடி தேவதா ஸேவித, ஸ்ரீ காமாக்ஷிதேவீ ஸநாத, ஸ்ரீமத் ஏகாம்ரநாத ஸாக்ஷாத்கார, பரமாதிஷ்டான, க்ருதாதி சதுர்யுக, ஸகல தார்மிக, ராஜபரிபாலித, ஸகல வேத சாஸ்த்ர மூல பூத, ஸ்த்யவிரத நாமாங்கித காஞ்சீ திவ்ய க்ஷேத்ரே, சாரதா மட ஸம்ஸ்தித ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரிய ஸ்ரீ சங்கராசார்ய பூஜித, ஸ்ரீ சந்திர மௌலீச்வர ஸ்வாமி என்று பரவசமாக வடமொழியில் வர்ணிக்கிறது சாஸனம்.

உருவ வழிபாட்டையே நம்பாத பிறமதத்தைச் சேர்ந்த ஓர் அரசன், இவ்வளவு பாராட்டிப் போற்றிப் புகழ்ந்து நம் பீடத்தின் அதிபர் ஒருவருக்குக் காணிக்கை அர்ப்பணம் செய்தான் என்பதிலிருந்து ஸ்ரீ காமகோடி பீடத்தின் அருள் எல்லை எவ்வளவுக்கு பரவி யிருந்திருக்கிறது' என்பதும் அதன் ஆசாரிய புருஷர்கள் எத்தகைய விசால மனத்தினராக இருந்திருக்க வேண்டும் என்பதும் வெள்ளிடைமலையாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

ஸ்ரீ காமகோடி பீடத்தின் இந்தப் பழம் பெருமையை யெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது நம் உள்ளம் பேருவகை அடைகிறது. ஆனுல் நாம் செப்பேட்டில் பொறித்துள்ள வாசகங்களை நினைத்துப் பெருமைப்படுவதோடு நின்றுவிடக் கூடாது. பீடத்தின் ஆதி அதிபதிகளான ஸ்ரீ பகவத்பாதர்களின் மறு உருவாக

---

* இதுவரை இந்த மன்னன் முகலாயச் சக்கரவர்த்தி பஹதூர்ஷா என்று கருதப்பட்டு வந்தது. இக்கருத்தை வெளியிட்ட ஸ்ரீ கோபிநாதராவ் முதலிய அறிஞர்கள் ஹிஜிரி 1088 என்பது கிறிஸ்துவ சகாப்தத்தில் 2710-ம் ஆண்டு என்று கணக்கிட்டாதாலேயே இவ்வாறு எண்ணினர். ஆனுல் முஸ்லீம் வருஷங்களை சாந்திராயண மாத சங்கியைப்படி கணக்கிட வேண்டுமாதலால் ஹிஜிரி 1088 என்பது கி. பி. 1667 என்றுதான் கொள்ளவேண்டும். இக் கருத்துக்கிசைவாகவே போபால் புதைபொருள் இலாகா டைரக்டர் டாக்டர் ஆர். சுப்பிரமணியம் அவர்கள் ஹைதராபாத் ரிகார்டு ஆபீசில் உள்ள பாரசிக பர்மான்களைப் பரிசீலித்து இந்த முகம்மதிய மன்னர் மேற்காணும் தானுஷா என்று முடிவு செய்திருக்கிறார்.

விளங்கி இன்று அறம் வளர்த்து வரும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளுரைகளை நம் இதய ஏட்டில் பொறித்துக் கடைப்பிடிக்க வேண்டியதே அதைவிட முக்கியம்.

முற்றும் துறந்த முனிபுங்கவரான அந்த மகான் உலகுக்கு வழிகாட்டுவதொன்றுக்காகவே பலவித தர்மங்களையும் ஆசாரங்களையும் வழுவறக் கடைப்பிடிப்பதைத் தம் ஸ்வதர்மமாகக் கருதி வாழ்கிறார்கள். இதில் அவர்கள் காட்டும் அதே திடபுத்தியுடனும், ஈடுபாட்டுடனும் நாம் அவரது உபதேசங்களைப் பின்பற்ற வேண்டும். அதனால் பயன்பெற வேண்டும். இந்த மன உறுதியையும், சிரத்தையையும் நாம் அவரிடமிருந்தே பிரார்த்தித்துப் பெறலாம். இதற்காக நாம் அவருக்குத் தரவேண்டியது நம் இதயபூர்வமான பக்தியைத்தான். கள்ளம் நிறைந்த நம் உள்ளத்தை அவருக்குச் சமர்ப்பித்தே விலைமதிப்பற்ற அருளைப் பெற்று விடலாம். பின் வரும் சுலோக அஞ்சலி புஷ்பத்தால் காலத்தை வென்ற அந்தக் கருணா மூர்த்தியை அர்ச்சித்து, அவரது தண்ணருளைத் தந்தருளுமாறு பிராரர்த்திக்கிறேன்.

गण्येऽहं दीनदीनः त्वमिह
शिवतनुः गण्यसे दीनबन्धुः
चिच्छक्त्याः कामकोट्याः हितमथ
भगवत्पादसंस्थापिताघ्र्यम् ।
पीठं विश्वप्रशस्तं कलयसि
महसा सद्गुरो ज्ञानमूर्त्ते
त्वत्पादांभोजयुग्मार्पितज-
निमव मामाविलं पापपङ्कैः ॥

சத்குருவே! சித்சக்தியான ஸ்ரீகாமகோடியன்னைக்கு மிகவும் உகந்த பீடத்தை—பகவத்பாதர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, உலகெங்கும் புகழ் பரப்பும் பீடத்தை—தம் மகிமையால் அலங்கரிக்கும் ஞான மூர்த்தியே! மங்கள உருவினனான ஈசனின் மாற்று வடிவமான தங்களைத் தீனபந்து என்று உலகம் போற்றுகிறது. நானோ தீனர்களிலும் பரமதீனன். எனினும் பாபச் சேற்றினால் மாசுற்ற என் பிறவியைத் தங்கள் அடியிணைத் தாமரைகளில் அர்ப்பணம் செய்துவிட்டதால் என்னையும் கடைத்தேற்றியருள இறைஞ்சுகிறேன்.

உதவி: கல்கி தீபாவளி மலர்

ஸத்யம்தான் என்றைக்கும் நிலைத்துநிற்கும். பொய் வெகுகாலம் நிற்காது. ஸத்யத்தால் தேவயானம் என்ற வழியை விஸ்தாரமாகச் செய்யலாம். இவ்வழியாகச் சென்றோர் எல்லா ஸுகங்களையும் அடைவர். ஸத்யமே ஞானத்திற்குச் சிறந்த ஸாதனம். மூடனுக்கு தூரத்திலும், வித்வானுக்கு அருகிலுமுள்ள ஆத்மாவை கண்ணால் அல்லது மற்ற ஸாதனங்கள்கொண்டு காணமுடியாது. ஞானத்தாலும், தியானத்தாலுமே தரிசிக்கலாம். நினைத்த லோகத்தை அடையும் சக்தி உள்ளவன் ஞானி. அவனைப் பூஜிப்பாயாக.

—ஸ்ரீசங்கரபகவத்பாதர்.

நாம் நன்றாகப் பேசுகிறோம். எழுதுகிறோம். உலகம் புகழ்ந்து மாலை போடுகிறது. இம்மாதிரி சமயங்களில் நமக்கு அகம்பாவம் சுலபமாக வந்துவிடும். அப்போது யோசித்துப் பார்க்கவேண்டும். இந்தப் புகழ்ச்சிக்கெல்லாம் உண்மையான தகுதி நமக்கு உண்டா? எல்லாம் அம்பாளுடைய அநுக்ரஹம் அல்லவா? எந்த இடத்திலிருந்து நமக்கு அந்தச் சக்தியெல்லாம் வந்ததோ அந்த இடத்திற்கே நம் புகழ், ஸ்தோத்ரம் எல்லாவற்றையும் அர்ப்பணம் பண்ணிவிட்டால் நமக்கு ஒரு குறையும் இல்லாமல் மேலும் மேலும் அம்பாளுடைய அநுக்ரஹம் கிடைக்கும். அகம்பாவமே உண்டாகாது. நல்லதோ கெட்டதோ எல்லாவற்றையும் அம்பாளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, அவளுடைய சரணகமலத்தை நாமும் கொஞ்சம்கூட அகம்பாவம் இல்லாமல் தியானம் பண்ணிக்கொண்டிருந்தால் க்ஷேமம் அடைவோம். லோகம் முழுவதும் க்ஷேமத்தை அடையும்.

—ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பெரியவர்கள்.

श्रीः

श्री कामाक्षीविलासः

பாரத தேசத்தில் உள்ள ஏழு மோக்ஷ புரிகளுள் ஒன்று ஸ்ரீகாஞ்சி திவ்ய க்ஷேத்ரம். ஸ்ரீகாஞ்சி க்ஷேத்திரத்தில் விளங்கும் சக்தி காமாக்ஷீ என்றும், காமகோடி என்றும், இந்த சக்தியின் ஸ்தானம் காமகோஷ்டம் என்றும் வழங்கப்படுகிறது. ஸ்ரீமத் பாகவதம் தசம ஸ்கந்தத்தில் பலராமனின் தீர்த்த யாத்ரா ப்ரகரணத்தில் ''காமகோடிபுரியான காஞ்சீ'' என்று கூறப்பட்டுள்ளது. ''ஐகார ரூபமான அம்பாளின் நாபி'' காமகோடியில் விழுந்ததாக மேருதந்த்ரத்தில் கூறக் காண்கிறது.

மார்கண்டேய புராணத்தில் ஸுரதர்-மார்கண்டேயர் இவ்விருவர்களுடைய ஸம்வாதரூபமாக ''காமாக்ஷீ விலாஸம்'' உள்ளது. இந்த நூலின் எட்டாவது அத்யாயத்தில் உள்ள விஷயத்தின் ஸாரமாவது—

ஏழாவது அத்யாயத்தில் கூறப்பட்ட மாமரத்தின் அடியிலிருக்கும், ஜ்யோதிலிங்கப் பெருமானது ஸ்வரூபத்தையும், அந்த ஜ்யோதிலிங்கப் பெருமானை அடைவதற்கு, உமாதேவி கைலாயத்தை விட்டு வந்த காரணத்தையும், கைலாயத்திலிருந்து புறப்பட்ட உமாதேவி பதரிகாச்ரமத்துக்கு வந்துசேர்ந்ததும் அந்த ஆச்ரமத்தில் உள்ள காத்யாயன மகரிஷி உமாதேவிக்கு யோகதண்டம் முதலியவைகளைக் கொடுத்த விருத்தாந்தங்கள் இந்த அத்யாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. யோகதண்டம் முதலியவைகளைப் பெற்றுக்கொண்ட அம்பிகை, காசிக்ஷேத்ரத்திற்கு விஜயம் செய்து, அங்கு மக்களை வருத்திக்கொண்டிருந்த த்வாதச வருஷ க்ஷாமத்தைப் போக்கினாள். பிறகு யோகதண்டம் முதலியவையெல்லாம் சிவபூஜைக்குரிய சிவலிங்கமூர்த்தி முதலியவைகளாக மாறின. பிறகு தேவி காஞ்சியில் கடுந்தவத்தை மேற்கொண்டாள். தவத்திற்கு இணங்கி சிவபெருமான் தேவியை ஸ்வீகரித்துக் கொண்டு லோகாநுக்ரஹம் செய்தார்.

ईश्वर उवाच—

गच्छ शीघ्रं महागौरि भूमौ बदरिकाश्रमम् ।
गत्वाऽऽश्रमं महापुण्यं भवत्वं शिशुरूपिणि ॥
अकस्माद्ब्रह्मवित्तत्र कात्यायनमहामुनिः ।
आगमिष्यत्यपुत्रस्त्वां दृष्ट्वा तत्र मुदान्वितः ॥
ज्ञात्वा ज्ञानेन दिव्येन त्वां गौरीं शिशुरूपिणीम् ।
संगृह्य त्वां मुनिस्तुष्ट्या यास्यति स्वाश्रमं प्रति ॥
अष्टवर्षावधि प्रीत्या भवतीं पूजायिष्यति ।
पश्चान्ममाज्ञया तत्र ऋषेः कात्यायनस्य च ॥
योगदण्डं चाक्षमालां दीपाधारं घटद्वयम् ।
व्यजनं चामरद्वन्द्वं विद्याधारं च पुस्तकम् ॥
व्याघ्रासनं ताम्रमुद्गं गङ्गासैकतमेव च ।
गङ्गातीर्थं च छत्रं च गृहीत्वा च मनोन्मनि ॥
दुर्भिक्षं भविता काश्यां तत्काले त्वं शुचिव्रता ।
गत्वा तां अन्नदानेन सद्भयस्तत्र मनोन्मनि ॥
अन्नपूर्णेति विख्याता स्थित्वा द्वादशवत्सरम् ।
कात्यायनि ततः पश्चात् प्राप्स्यसे दक्षिणां दिशम् ॥
यत्र व्याघ्रासनं सोमवृत्तं तत्सूत्रकं घटम् ।
सैकतं लिङ्गरूपं च जपाक्षो बिल्वमालिका ॥
नागभूषणकं छत्रं त्रिशूलं योगदण्डकम् ।
चामरं युवतीयुग्मं व्यजनं शुकरूपकम् ॥
घटदीपद्वयं वह्निरूपं धेनुश्च पुस्तकम् ।
विद्याधारं सूचिकां च ताम्रमुद्गं च साङ्कुरम् ॥
गङ्गातीर्थं पयोरूपं भवेद्यत्र मनोन्मनि ।
तत्काञ्चीनगरं विद्धि तत्र सोमसुवृत्तके ॥
सूत्रे तत्सैकतं लिङ्गं बिल्वमालासमन्वितम् ।
नागभूषणसंयुक्तं नित्यं क्षीराभिषेचितम् ॥
मुद्राङ्कुरं च नैवेद्यं कृत्वा ध्यात्वा तु शाम्भवि ।
पार्श्वयोर्वनिते स्थाप्य गोक्षीरैस्समयासनैः ॥
करे धृत्वा शुकश्रेष्ठं पञ्चाग्नौ सूचिकोपरि ।
स्थित्वा मां ध्यायती भक्त्या तपः कुरु सुदुश्चरम् ।

तत्राह सन्निधिं कृत्वा त्वद्विवाहं करोम्यहम् ।
तेनैव नश्येत् पापोपि तवरूपं शुभं भवेत् ॥
तस्मादेवं प्रकर्तव्यं मम चोक्त्यातिभक्तितः ।
इति तस्य वचश्श्रुत्वा तमेव करुणानिधिम् ॥
प्रणम्य शिरसा नाथं स्तुत्वा नत्वा मुहुर्मुहुः ।
बदरीकवनं प्राप्य शिशुरूपं समाश्रिता ॥
कात्यायनेन पृष्टा च तस्मै कैलाससद्गतिम् ।
दत्वाष्टवार्षिकी कन्या समादायासनादिकान् ॥
काश्यामन्नप्रदानेन साऽन्नपूर्णेति विश्रुता ।
काशीराजाय भक्ताय दत्वा मुक्तिं सुदुर्लभाम् ॥
प्रयाता दक्षिणामाशां उद्दिश्य परमेश्वरी ।
यथा प्रचोदिता पूर्वं तथा दृष्ट्वा घटादिकान् ॥
काञ्चीक्षेत्रमिति ज्ञात्वा तद्धरादेशमम्बिका ।
तत्रतत्र वने चूतं नानावृक्षसमन्विते ॥
विचिन्वत्याऽथ पार्वत्या दृष्टश्चैकाम्रवृक्षकः ।
आश्चर्ययुक्ता सा गौरी तद्वृक्षाय मनोहराम् ॥
एकाम्राख्यां महापुण्यां दत्वा तन्मूलभूतले ।
यथा नाथोदिता पूर्वं तथा शम्भुमपूपुजत् ॥

स्वनायकं समुद्दिश्य चकारोग्रं तपोऽम्बिका ।
ततः कतिपये काले भगवद्ध्यानतत्परः ॥
नारदो नाम देवर्षिस्त्रिकालज्ञानतत्ववित् ।
तीर्थयात्रापदेशेन चचार निखिलां भुवम् ॥
अथ काञ्चीं समासाद्य गौरीं तत्र तपस्विनीम् ।
ददर्श परमप्रीत्या तपोनिष्ठैककन्यकाम् ॥
ततोष्टवर्षिणी बाला तदा सर्वाङ्गसुन्दरी ।
दृष्ट्वा समागतं तत्र समाराध्य मुनीश्वरम् ॥
चन्द्रचूडस्य ज्यायात्वमिच्छन्ती गिरिनन्दिनी ।
उपायं मुनिशार्दूलं अपृच्छद्विनयान्विता ॥
अथ तत्र मुनिश्रेष्ठः सन्तुष्टः कन्यकार्चनैः ।
शिवप्रीत्यै सुखोपायं पञ्चबाणमनुं मुनिः ॥
उपदिश्य तदा गौर्यै गतवान् दक्षिणां दिशम् ॥

* * *
* * *

सुवर्णकरकालक्ष्म्या मुक्ताधाराम्बुना सह ।
श्रीमदेकाम्रनाथाय कामाक्षीं प्रददौ हरिः ॥
देवोपि हरिणा दत्तां पाणौ जग्राह पार्वतीम् ॥

शुभम्

ஸ்ரீ காமகோடி பீடம்

என். ராமேசன், ஐ. ஏ. எஸ்.

गुरुर्नाम्ना महिम्ना च शङ्करो यो विराजते ।
तदीयाङ्घ्रिगलद्रेणुकणायास्तु नमो मम ॥
—जगद्गुरु श्रीचन्द्रशेखरेन्द्रस्वामिनः ।

பெயரால் சங்கரராகி, நன்மையைச் செய்வது என்ற பெருமையாலும் எவர் சங்கரராகவே விளங்குகிறுரோ, அவரது பாததூளிக்கு என் நமஸ்காரங்கள்.

—ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

तच्छङ्करांशः श्रीचन्द्रशेखरो यो विराजते ।
तस्मै सद्गुरवे भूयाद् यतीन्द्राय नमो मम ॥
—स्वकृतम् ।

அப்பேர்ப்பட்ட ஆதிசங்கரரின் அம்சாவதாரமாகப் பிரகாசித்துக்கொண் டிருக்கும் துறவி வேந்தரான ஸத்குரு ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமிகளுக்கு என் நமஸ்காரங்கள். —கட்டுரையாசிரியர் ஆக்கம்

ஜகத்குருவான ஆதிசங்கரர், ஏழு மோக்ஷபுரிகளில் ஒன்ருன ஸ்ரீ காஞ்சீபுரத்தில் ஸர்வஜ்ஞ பீடாரோகணம் செய்து, ஸ்ரீசாரதா மடத்தை ஏற்படுத்தித் தம் பிரிய சிஷ்யராகிய ஸுரேச்வராசாரியரை அத்வைதப் பிரசாரத்தின் மூலஸ்தானமாகிய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தில் ஸ்தாபித்து, வேதாந்தத்தைப் பரப்பிவருமாறு ஆஜ்ஞையிட்டு, ஸ்ரீ காஞ்சியிலேயே சித்தியடைந்த விஷயம் அனைவரும் அறிந்ததே. மாதவீய சங்கர விஜயம், வியாஸாசலீய சங்கர விஜயம் முதலிய கிரந்தங்களுக்கு மூலமாக விளங்குவதும், ஆதி சங்கரருடைய சமகாலத்தவராகிய ஆனந்தகிரி என்ற சிஷ்யர் எழுதியதுமான சங்கர விஜயத்தில் இந்த விஷயம் பின்வருமாறு ஸ்பஷ்டமாக விளங்குகிறது:

"तत्रैव निजवासयोग्यं मठमपि परिकल्प्य, तत्र निजसिद्धान्तपद्धतिं प्रकाशयितुं अन्तेवासिनं सुरेश्वरमाहूय, योगनामकं लिङ्गं पूजयेति दत्वा, त्वमत्र कामकोटिपीठमधिवसेति व्यवस्थाप्य...."

"அங்கேயே (அதாவது ஸ்ரீகாஞ்சியிலேயே) தாம் (ஆதிசங்கரர்) வசிப்பதற்குத் தகுந்த மடத்தை ஏற்படுத்தி, தமது சித்தாந்தத்தைப் பிரகாசம் செய்விப்பதற்காகத் தம் சிஷ்யரான ஸுரேச்வரரைக் கூப்பிட்டு, 'யோக லிங்கத்தைப் பூஜை செய்துகொண்டு ஸ்ரீகாமகோடி பீடத்தில் வசித்துக்கொண்டிரு' என்று பாகுபாடு செய்துவிட்டு..."

உலக சரித்திரத்திலேயே சமய சம்பந்தமான வேறு எந்த ஒரு ஸ்தாபனத்தினுடைய வரலாற்றிலும் இவ்வளவு ஸ்பஷ்டமாகவும் தெளிவாகவும் விவரங்களுடனும் அந்த ஸ்தாபனத்தின் தொடக்கம் கொடுக்கப்பட்டதில்லை எனலாம்.

அன்று ஆதிசங்கரர் ஏற்படுத்தி, ஸ்ரீ ஸுரேச்வராசாரியர் ஆரம்பித்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் ஞானதீப பரம்பரை ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஒளி மங்காமல், ஜனங்களுக்கு ஞானக் கலங்கரை விளக்காகச் சுடர்விட்டுப் பிரகாசித்து வந்திருக்கிறது. இந்தப் பீடத்தின் ஆதாரத்தைப்பற்றி ஆராய்ச்சியாளருக்கு எத்தனையோ அத்தாட்சிகள் தேவையாக இருக்கலாம். ஆயினும், பக்தி புரியத் தெரிந்த பாக்கியசாலிகள், நடமாடும் தெய்வமாகிய ஸ்ரீ காமகோடி பீடத்தின் இன்றைய ஆசாரியராகிய ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளைத் தரிசனம் செய்யும்போதே, 'இவர் ஆதிசங்கரரின் அவதாரந்தான்; ஆதிசங்கரரின் பரம்பரையில் நமக்காகவே தோன்றியிருக்கும் முனிவர்' என்று வெள்ளிடை மலையாக விளங்கிக் கொள்வர். எனினும் பீடத்தின் தொன்மைப் பெருமையை நிலைநிறுத்த ஆணித்தரமான அத்தாட்சிகளும் நிறைய உள்ளன. இவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

ஆதி சங்கரரின் பரம்பரையில் வந்த காமகோடி பீடத்து ஆசாரிய பரம்பரையின் சரித்திரத்தைப் பல பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள். இவற்றில் முக்கியமானது, ஸ்ரீகாமகோடி பீடத்தின் 56-ஆம் ஆசாரியராக இருந்த ஸர்வஜ்ஞ சதாசிவ போதேந்திரர் எழுதிய 'புண்ய ச்லோக மஞ்சரி' ஆகும். இந்த ஆசாரியர்கள் கி. பி. 1539-இல் ஸித்தியடைந்தார்கள். இதற்குப் பிறகு ஸ்ரீகாமகோடி பீடத்தின் 57-ஆம் ஆசாரியராகிய ஸ்ரீபரமசிவேந்திர ஸரஸ்வதி அவர்களின் சிஷ்யராகிய சித்த புருஷர் ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர்கள் எழுதிய 'குருரத்னமாலா' என்ற புத்தகம் ஸ்ரீகாமகோடி ஆசாரியர்களின் பரம்பரையைக் கூறுகிறது. 'குருரத்ன மாலா'வுக்கு ஸ்ரீகாமகோடி பீடத்தின் 60-ஆம் ஆசாரியரின் சிஷ்யரான ஆத்மபோதர் 'ஸுஷமா' என்ற வியாக்கியானம் செய்திருக்கிறார். இந்த ஆத்மபோதரே மேற்கூறிய 'புண்ய ச்லோக மஞ்சரி'க்குப் 'புண்ய ச்லோக மஞ்சரி மகரந்தம்' என்ற விரிவுரையும் எழுதி, அந்த மகரந்தத்துக்குப் 'பரிசிஷ்டம்' என்ற பெயரில், ஸ்ரீமடத்தின் 56 முதல் 60-ஆவது வரையான ஆசாரியர்களைப் பற்றிய குறிப்பையும் அநுபந்தமாக எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகங்களிலிருந்தும், ஸ்ரீமடத்தின் ரிகார்டுகளிலிருந்தும் சென்ற நானூறு வருஷங்களாக ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தில் இருந்த ஆசாரியர்களைப் பற்றிய விவரம் தெரிய வருகிறது.

கீழ்க்கண்ட ஆசாரிய பரம்பரைக்குச் சரித்திரபூர்வமாகப் பல சான்றுகள் பல கிரந்தங்களிலும் ஸ்ரீமடத்திலுள்ள செப்பேட்டுச் சாஸனங்களிலும் இதர ரிகார்டுகளிலும் இருக்கின்றன.

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பே, 1111-ஆம் ஆண்டு ஜூலை 17-ஆம் தேதி விஜயகண்ட கோபாலன் என்ற தெலுங்குச் சோழ அரசன் அம்பிகாபுரம் என்ற கிராமத்தை ஸ்ரீகாஞ்சி காமகோடி ஆசாரியருக்குத் தானமாகக் கொடுத்ததுபற்றிய செப்பேட்டைக் குறித்து, 'காலத்தை வென்ற காமகோடி' என்ற கட்டுரையில் விளக்கமாக எழுதியிருக்கிறேன். இது போன்ற அநேகச் சான்றுகள் ஸ்ரீமடத்தில் இருக்கின்றன.

இந்தச் செப்பேடுகளிலிருந்து, விஜயநகரப் பேரரசரான உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீகிருஷ்ண தேவராயர், மகாதேவ ஸரஸ்வதியின் சிஷ்யரான சந்திரசூடருக்குக் கி. பி. 1522-ஆம் ஆண்டில் 'பொடவூர்', 'காட்டுப்பட்டு' என்ற கிராமங்களையும், பிறகு கி. பி. 1528-ஆம் ஆண்டில் ஸதாசிவபோதருக்கு 'உதயம்பாக்கம்' என்ற கிராமத்தையும் தானம் கொடுத்ததாகத் தெரிகிறது. இந்தப் பக்கத்தில் உள்ள பட்டியலில் இவர்கள் பெயரும், வருஷமும் இருப்பதற்கு இசைவாகவே செப்பேடுகளிலும் காணப்படுவது குறிப்பிட வேண்டிய அம்சம்.

குறிப்பு: அடுத்த பக்கத்தில் உள்ள பட்டியலில் ஒரே பெயருடைய பல ஆசார்யர்களைத் தெளிவுபடுத்த, மகாதேவர் (3), சந்திரசேகரர் (4) என்பது போல் நக வளைவுகளுக்குள் இலக்கம் காட்டியிருக்கிறது.

சென்ற முந்நூறு வருஷங்களாக ஸ்ரீமடத்தின் சரித்திரம் எவ்வாறு அமைந்தது என்று பரிசிலனை செய்வதன் பொருட்டு ஸ்ரீமடத்தில் இருக்கும் ரிகார்டுகளைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவை நூற்றுக் கணக்கானவை. இந்த ரிகார்டுகள், 'Contemporary Records' என்று கூறப்படும் சமீப கால ரிகார்டுகளின் வகையைச் சேரும். இவை கையெழுத்தில் இருக்கின்றன. இவற்றைத் தொகுத்து ஸ்ரீமடத்தின் சரித்திரத்தைத் தெளிவுபடுத்துவதே ஆராய்ச்சியின் நோக்கம். இவ்வாறு நான்கு தலைமுறைகளுக்கு முன்பு இருந்த நம் சமீபகால முன்னோர்களின் பண்பாட்டைப்பற்றி ஆராய்ச்சி செய்வது இப்பொழுது மேலை நாடுகளில் பிரபலமாகிக்கொண்டு வருகிறது. ஸ்ரீமடத்தின் ஒவ்வொரு பத்து அல்லது இருபது வருஷ சரித்திரமே ஓர் ஆராய்ச்சியாளரின் குறிக்கோளுக்குப் போதிய விவரங்கள் அளிக்கக் கூடும். அவ்வளவு ரிகார்டுகள் ஸ்ரீமடத்தில் இருக்கின்றன. ஆயினும், இங்கே கடந்த முந்நூறு வருஷங்களில் மிகவும் ரசமான பத்து ரிகார்டுகளைப் பற்றியே எழுதுகிறேன்.

நம் நாட்டில் சிருங்கேரி, காஞ்சீபுரம், திருவாவடுதுறை, அகோபிலம் முதலிய சமய சம்பந்தமான மடங்களின் சரித்திரத்தைப்பற்றி ஒழுங்காகவும் உண்மையாகவும் ஆராய்ச்சி செய்யத் தகுந்த மாணவர்கள் முன்வராதது வருந்தத்தக்க விஷயம். தேச சரித்திரத்தில் அரசியல் மாத்திரமே அல்லாமல் சமயம், பொருளாதாரம், கலை, காவியம் முதலிய துறைகளிலும் ஆராய்ச்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இந்த விஷயத்தில் மாணவர்களின் உற்சாகத்தைத் தூண்டிவிடுவதே என் குறிக்கோள்.

இந்த ரிகார்டுகளைப் பரிசிலனை செய்ய உதவியாக இருந்த என் நண்பர்கள் எல்லாருக்கும் என் நன்றி உரித்தாகும்.

இனி ரிகார்டுகளைப் பார்ப்போம்.

ஆதி சங்கரரிலிருந்து வரிசைக் கிரமம்	ஆசாரியர்களின் பெயர்கள்	பீடத்தில் இருந்த வருஷங்கள்	ஸித்தி பெற்ற நாள்			
			வருஷம்	மாதம்	பக்ஷம், திதி	ஆங்கில வருஷம்
55	சந்திரசூடர் (2)	17	ஸ்வபானு	பால்குனம்	சுக்லபக்ஷம் 11	கி.பி. 1524
56	ஸர்வஜ்ஞ சதாசிவபோதர்	15	விளம்பி	சைத்ரம்	சுக்லபக்ஷம் 8	கி.பி. 1539
57	பரமசிவேந்திரர் (2)	47	பார்த்திவ	சிராவணம்	சுக்லபக்ஷம் 10	கி.பி. 1586
58	ஆத்மபோதர்	52	ஈசுவர	ஆச்வினம்	கிருஷ்ணபக்ஷம் 8	கி.பி. 1638
59	பகவந்நாமபோதர்	54	பிரஜோத்பத்தி	பாத்ரபதம்	பௌர்ணமி	கி.பி. 1692
60	அத்வைதாத்மப் பிரகாசர்	12	ஸ்வபானு	சைத்ரம்	சுக்லபக்ஷம் 2	கி.பி. 1704
61	மகாதேவர் (3)	42	குரோதன	ஜ்யேஷ்டம்	சுக்லபக்ஷம் 9	கி.பி. 1746
62	சந்திரசேகரர் (4)	37	சுபகிருது	கார்த்திகம்	கிருஷ்ணபக்ஷம் 2	கி.பி. 1783
63	மகாதேவர் (4)	31	ஸ்ரீமுக	ஆஷாடம்	சுக்லபக்ஷம் 12	கி.பி. 1814
64	சந்திரசேகரர் (5)	37	சாதாரண	கார்த்திகம்	கிருஷ்ணபக்ஷம் 2	கி.பி. 1851
65	மகாதேவர் (5)	39	விரோதி	பால்குனம்	அமாவாஸ்யை	கி.பி. 1890
66	சந்திரசேகரர் (6)	17	பராபவ	மாகம்	கிருஷ்ணபக்ஷம் 8	கி.பி. 1907
67	மகாதேவர் (6)	8 நாள்	பராபவ	பால்குனம்	சுக்லபக்ஷம் 1	கி.பி. 1907
68	1907-இலிருந்து ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அறுபத்தொன்பது ஆண்டுகளாகப் பீடத்தை அலங்கரித்து வருகிறார்கள்.					

(1) முதலாவது ரிகார்டு, ஹிஜ்ரி வருஷம் 1088 ஷவ்வல் முதல் தேதி கொடுக்கப்பட்ட பர்மான். இது பக்த ராமதாஸரின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற கோல்கொண்டா நவாப் தானுஷா அவர்கள் காலத்தைச் சேர்ந்தது. இந்தப் பர்மானை மாட, பானேஜி மஜூம்தார் என்பவர், லிங்கோஜி ஸங்கரசு என்பவரின் தூண்டுதலால் கொடுத்திருக்கிறார். இந்த லிங்கோஜி அந்த டிவிஷனைச் சேர்ந்த தரப்தார் என்ற ரெவின்யூ அதிகாரி என்றும் தெரிகிறது. இந்தப் பர்மானில் ஸ்ரீகாஞ்சி சாரதா மடத்தின் அதிபரான ஸ்வாமி பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரிய ஸ்ரீ சங்கராசாரியருக்கு ஸ்வாமி சந்திரமௌளீச்வரரின் நித்ய பூஜைக்காகவும் பிராம்மண ஸந்தர்ப் பணத்துக்காகவும் செங்கற்பட்டுச் சீமையில் உள்ள மேலுபாக என்ற கிராமத்தின் வருஷவரியிலிருந்து, 115 வராகன்கள் கொடுக்கும்படி உத்தரவாகியிருக்கிறது. இந்தப் பர்மான் தெலுங்கு லிபியில் இருக்கிறது. இதன் மொழி ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, பெர்ஷியன் ஆகியவை. இம்மாதிரி பல பாஷைகளில் எழுதப்பட்ட தானுஷாவின் மற்றப் பர்மான்கள் ஹைதராபாத் ரிகார்டு ஆபீஸில் இருக்கின்றன. இதில் கண்டிருக்கிற பர்மான் ஜஹானே மாடா அப்டாபே இர்தேபா வாஜிபுல் இட்டேபா என்ற பிருதுகள் மற்றப் பர்மான்களிலும் இருக்கின்றன. இதில் கண்டிருக்கிற ஹிஜ்ரி வருஷம் தேதி, இங்கிலீஷ் வருஷம் தேதி கி. பி. 1677, நவம்பர் 17 க்குச் சரியாக இருப்பதாக நான் கணக்கிட்டிருப்பதுடன், என் நண்பர் டாக்டர் ஆர். சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எச்டி. (Superintendent of Archaeology, Baroda) அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார். இதில் கண்டிருக்கிற 'மேலுபாக' என்ற கிராமம் செங்கற்பட்டு ஜில்லாவில் இப்போதும் உள்ள தென் மேல்பாக்கம் என்ற கிராமமே. பிற மதத்தைச் சேர்ந்தவர்களும் ஸ்ரீமடத்தை எப்படிக் கௌரவித்தார்கள் என்பது, இந்தப் பர்மானிலிருந்து விளங்குகிறது. 1677-ஆம் வருஷத்திலும் ஸ்ரீமடத்தைக் காஞ்சி சாரதா மடம் என்றுதான் குறிப்பிட்டு வந்தார்கள் என்பதும் தெளிவாகிறது. அப்போது பீடாதிபதியாக இருந்தவர் 59-ஆம் ஆசாரியரான பகவந்நாமபோதர்.

(2) இரண்டாவது ரிகார்டு, மதுரை நாயக வம்சத்துக்கு ஆதீனமான விஜய ரங்க சொக்கநாதன் கொடுத்த தான சாஸனம். இது சக வருஷம் 1632, விக்ருதி, கார்த்திகை, சுக்ல பக்ஷ 15, திங்கட்கிழமை, ரோஹிணி நக்ஷத்திரம் கூடிய தேதியில் கொடுக்கப்பட்டது. இதில், திருவானைக்காவில் ஜம்புகேச்வர ஸ்வாமி கோயிலிலிருந்து கஜாரண்ய க்ஷேத்திரத்தில் பொன்வாசி கொண்டான் தெருவில் இருக்கும் மடத்துக்குத் தினம் நான்கு படி அரிசியும், இரண்டு தளிகை அன்னமும், இரண்டு தோசையும், இரண்டு அதிரசமும், ஒரு சுகியனும், தீபத்துக்கு முக்கால் படி எண்ணெயும், காவேரி நதியின் இருகரையில் உள்ள ஒவ்வொரு 'சேய்' நிலத்துக்கும் ஒரு 'தூம்' நெல்லும், சுங்கத்திலிருந்து தினமும் ஒரு வராகன் பணமும் கொடுக்கும்படி கண்டிருக்கிறது. அதோடு அன்ன தானக் கட்டளைக்காக, மஹேந்திரமங்கலம், அரியூர், அரியமங்கலம் முதலிய கிராமங்களிலிருந்து பூதான சாஸனமும் கண்டிருக்கிறது.

இதில் கண்டிருக்கிற தேதி, 1710 நவம்பர் 14-ஆம் தேதி என்று கணக்கிட்டிருக்கிறது. அந்த வருஷக் கார்த்திகைப் பௌர்ணமி திதி, திங்கட்கிழமையும் ரோஹிணி நட்சத்திரமும் கூடியது என்றும் தெரிகிறது. இந்தத் தான சாஸனத்தின் இரண்டாவது மூன்றாவது வரிகளில்,

"श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्री

कांचीपुरस्थित

श्रीमच्छंकरभगवत्पादाचार्यस्वामुलवारिकि"

அதாவது, 'ஸ்ரீகாஞ்சி நகரில் இருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளுக்கு' என்றும், 14-ஆம் வரியில்..

"लोकगुरुस्वामुलन

श्रीमच्छङ्कराचार्य स्वामुलवारिकि"

அதாவது, 'லோக குரு ஸ்வாமியான ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிக்கு' என்றும் தெளிவாகக் கண்டிருக்கிறது.

இதிலிருந்து, பதினேழாவது பதினெட்டாவது நூற்றாண்டுகளிலும் ஸ்ரீகாஞ்சிபுரியில் இருக்கும் ஸ்ரீசங்கராசாரியர் என்றுதான் ஸ்ரீ ஆசார்யர்களை ஜனங்கள் அழைத்தார்கள் என்பது விளங்கும். இந்தத் தானத்தின் பொழுது பீடத்தில் இருந்தவர் 61-ஆம் ஆசாரியரான மகாதேவர்.

(3) மூன்றாவது ரிக்கார்டு, சிவகங்கை ராஜாவான விஜயரகுநாத பெரிய உடையாத் தேவர் அவர்கள் கொடுத்த கிராம

பூதான சாஸனம். இது தமிழில் இருக்கிறது. இதில் பின்வருமாறு கண்டிருக்கிறது:

''சாலிவாஹன சகாப்தா 1705, கல்யப்தா 4884, இதுக்குமேல் சோபகிருது ஞு ஆவணி மாசம் 28௳ சுக்லபக்ஷமும் பௌமவாஸரமும் பௌர்ணமாவாசையும், பூரட்டாதி நட்சத்திரமும் துரதி நாம யோகம் வனிகரணமும் சோமோபராக புண்ணிய காலத்தில் ஸ்ரீகாஞ்சிபுரம் திவ்வியட் சேத்திரத்திலிருக்கும் ஸ்ரீகாமகோடி பீட சிங்காசனபிஷிக்த ஸ்ரீமத் ஸ்ரீ மகா பகவத்பாதாசார்ய ஸ்வாமியவாளுடைய மடத்துக்கு திரிபுர சுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவர ஆறுமுகம் ஸஹாயம், ஸ்வாமி பூஜா தீபாராதனே பிராம்மண போஜனங்களுக்குத் தாராதத்த பூர்வமாக....''

இந்தச் சாஸனத்தில், ஸ்ரீமடத்துக்குப் புலவச்சேரி என்ற கிராமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமம் இப்போதும் ஸ்ரீமடத்தின் பரிபாலனத்திலேயே உள்ளது.

இதில் கண்டிருக்கும் தேதிக் கணக்குப்படி 1783, ஸெப்டம்பர் 10-ஆம் தேதி ஆகும். அது சாஸனத்தில் கண்டுள்ளபடி செவ்வாய்க்கிழமை (பௌம வாஸரம்). அன்று பௌர்ணமி திதி. அந்தத் திதியில் சாஸனத்தில் கண்டபடி சந்திரக் கிரகணமும் (சோமோபராக புண்ய காலம்) நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

குரு பரம்பரைப்படி அப்போது ஸ்ரீமடத்தில் இருந்த ஆசாரியர் 63-ஆம் பீடாதிபதிகளான ஸ்ரீ மகாதேவர்—4. இந்தச் சாஸனத்திலும், ''ஸ்ரீகாஞ்சிபுரம் திவ்வியட்சேத்திரத்திலிருக்கும் ஸ்ரீகாமகோடிபீட சிங்காசனபிஷிக்த ஸ்ரீமத் ஸ்ரீமகா பகவத்பாதாசார்ய ஸ்வாமியவாளுடைய மடத்துக்கு..'' என்று வெகு ஸ்பஷ்டமாகக் கண்டிருக்கிறது. இந்த ஆசாரியர் 1783-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி பீடத்தில் அமர்ந்தார். ஆகையால் இவருடைய பீடாதிபத்திய முதல் வருஷத்தில் கொடுக்கப்பட்ட சாஸனம் இது.

(4) நான்காவது ரிகார்டு, ஆர்க்காட்டு நவாபு, ஸ்ரீஆசார்யர்களின் யாத்திரைக்காக, 'போலிகாரன்' முதலியவர்களுக்கு எச்சரிக்கையாகக் கொடுத்த 'ரஹாதாரி' பர்மான். இது பின்வருமாறு இருக்கிறது.*

முத்திரை

ஷா ஆலம் பாக்ஷா காஜி வ
ஸாஹிப் ஸைபோ கலம்
முல்க் பஹதூர் ஜாபர் ஜங்
ஆஸிபுத்தௌலா அன்வருத்தீன் கான்
வாலாஜா அமீர். ஏ. ஆர்க்காட்

பா இஸ்மே போலிகாரன் வா ரஹதாரன் வ சௌகீதாரன் வ முஸ்தாபிஜானே துருக் வ ஷவாரே. ஆங்கே சங்கராசாரி காமகோடி மஹந்த பராஹே திருப்பதிப கிருஷ்ணுப ராமேச்வரகுர்த..

அதாவது காமகோடி சங்கராசாரி மஹந்த் அவர்கள் திருப்பதி, கிருஷ்ணு, ராமேசுவரம் போகும்போது அவருக்குச் சகல சௌகரியங்களும் செய்து தர வேண்டும்' என்ற இது கட்டளையிடுகிறது. இதையே தெலுங்கு லிபியிலும், ''காமகோடி பீடம் சங்கராசார்யலுவாரு'' என்று ஸ்பஷ்டமாகப் பர்மானிலேயே எழுதியிருக்கிறது.

இதன் தேதி, பெர்ஸியன் மொழியிலும் தெலுங்கிலும், ஹிஜ்ரி 1207 ரபியுஸ்ஸானி மாதம் 24-ஆம் தேதி என்று கண்டிருக்கிறது. இது 1792, டிஸம்பர் 28-ஆம் தேதி ஆகும்.

இந்த ரிகார்டிலிருந்து, பதினெட்டாம் நூற்றுண்டு இறுதியிலும் ஸ்ரீ ஆசார்யர்களை 'ஸ்ரீ காமகோடி பீடாதிபதி சங்கராசாரியர்' என்றே அழைத்து வந்ததாகத் தெரிகிறது. குரு பரம்பரையிலிருந்து, அப்போது இருந்தவர் 63-ஆம் ஆசார்யர்களான மகாதேவர் (4) என்று அறியலாம்

(5) மேற்கூறிய 63-ஆம் ஆசாரியராகிய ஸ்ரீ மகாதேவர் அவர்களின் சிலை ஒன்று, கும்பகோணம் ஸ்ரீஆதி கும்பேச்வரஸ்வாமி ஆலயத்தில் இருக்கிறது. இந்த ஸ்வாமி ஸ்ரீ ஆதி கும்பேச்வர ஸ்வாமி கோவிலிலுள்ள ஸோமாஸ்கந்த உத்ஸவமூர்த்திக்கு அர்த்த மண்டபமும், மகா மண்டபமும், கர்ப்பக்கிருகமும் கட்டியதைத் தெரிவிக்கும் கல்வெட்டு, மேற்படி கோயிலின் ஸோமாஸ்கந்த மண்டபத்தின் ஒரு சுவரில் இருக்கிறது. அதில்தெலுங்கு லிபியில்:

ஆசாரிய ஸ்வாமினு
ஸ்ரீகாஞ்சி பீடாபிஷிக்த
ஸ்ரீமஹாதேவேந்திர:

என்பதாக, 'ஸ்ரீகாஞ்சி பீடாதிபதி' என்பதைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறது. வேறு ஒரு கல்வெட்டில் கிரந்த லிபியில்,

'....கும்பேசுவர ஸ்வாமி ஸோமாஸ்கந்த மூர்த்திகி, கர்ப்பகிருஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம.... ஸ்ரீகாஞ்சி

---

* இதில் இருக்கும் பெர்ஸியன் மொழியைச் சில வருடங்களுக்கு முன் என்னுடைய துணை டைரக்டராக இருந்து, இப்போது ஆந்திரப் பிரதேசத்துப் புதைபொருள் டைரக்டராக உள்ள நண்பர் ஸ்ரீ மகமத் அப்துல் வஹீத்கான் அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அவருக்கு என் நன்றி.

காமகோடி பீடாதிபதி......ஸ்ரீமஹா தேவேந்திரயதி..'

என்று கூறியிருக்கிறது. 'ஸ்ரீகாஞ்சி காம கோடி பீடாதிபதி' என்று இங்கும் வியக்த மாகக் காண்கிறது. இந்த ஆசார்யர் இருந்த காலம் 1783 முதல் 1814 வரை. ஆகையால் பத்தொன்பதாம் நூற்றூண் டின் ஆரம்பத்திலும், கும்பகோணத்தில் கட்டப்பட்ட கோயிலிலேயே ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி என்றே வர்ணித் திருப்பதைக் கவனிக்க வேண்டும்.

(6) தர்மத்தில் பெயர் போன பச்சையப்ப முதலியாரின் மனைவி தைலம் மாள், இதே 63-ஆம் ஆசார்யர்களுக்குத் திருவிடைமருதூரில் மனைதானம் செய் ததை மற்றொரு ரிகார்டு கூறுகிறது.

'ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1725 கல்யப்த 4904....காவேரியாற் றுக்குத் தெங்கு ஸ்ரீ கும்பகோணம் ஸ்வஸ்தி ஸ்ரீமதகில பூமண்டலங்கார காஞ்சி திவ்ய க்ஷேத்ரே ஸ்ரீ சாரதாமட ஸுஸ்திதானும்... ஸ்ரீமத சங்கரபகவத் பாதாசாரியாளும் அதிஷ்டானே....ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சம்யமேந்திராளும் அந்தே வாஸிவரிய ஸ்ரீமத் மகா தேவேந்திர ஸரஸ்வதி சம்பூஜித ஸ்ரீமத் சந்திரமௌளீச் வர ஸ்வாமி பூஜெக்கு, காஞ்சிபுரத்தி லிருக்கும் பச்சையப்ப முதலியார் அகம் படையாள் தைலம்மாள் மனை தான சாஸனம் பண்ணிக் கொடுத்தபடி...'

இதில் ஸ்ரீகாஞ்சி பீடாதிபதியின் ஸகல விருதுகளையும் மாற்றாமல் குறிப்பிட்டே அவர்கள் கும்பகோணத்தில் இருந்த விவரமும் தெரிவித்திருக்கிறது. இது கி. பி. 1803-இல் எழுதியது.

(7) கி. பி. 1808-ஆம் ஆண்டில் தஞ்சையை ஆண்டு வந்த சத்ரபதி மகாராஜா சரபோஜி இதே 63-ஆம் ஆசாரியர்களைத் தஞ்சைக்கு விஜயம் செய்யுமாறு கோரி அனுப்பிய விஞ்ஞா பனம் ஒன்று இருக்கிறது. இது அழகான ஸம்ஸ்கிருதத்தில் எழுதியிருக்கிறது. இதில் ஆசார்யர்களை, ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத சங்கர பகவத் பாதாசார்யாளும் அதிஷ்டான ஸிம்ஹாஸநே அபிஷிக்த ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸம்யமீந்த்ராளும் அந்தேவாஸி வர்ய ஸ்ரீமந் மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்ரீபாதாநாம் ஸகலஜகத் குருணும்' என்று, அதாவது, ஆதிசங்கரருடைய அதிஷ்டான பீடத்தில் இருப்பவர் என்று வர்ணித் திருக்கிறது.

(8) இதற்கு அடுத்த ரிகார்டு, மிகவும் ரசமானது. 63-ஆம் ஆசாரியருக்குப் பின் 64-ஆம் ஆசாரியராகப் பீடாதிபத்தியம் பெற்ற ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 1814—1851 வரையில் பீடத்தில் இருந்தார்கள். இவர்கள் காலத் தில் காஞ்சி காமாட்சி கோயிலின் கும்பா பிஷேகம் நடைபெற்றது. இது 1839-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரையில் நடந்தது. இதை விவரிக்கும் கல்வெட்டு ஸ்ரீகாஞ்சி காமாட்சி கோயிலில் இருக் கிறது. இது தெலுங்கு பாஷையில் பின் வருமாறு காண்கிறது:

'ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப்யுத, சாலிவாகன சகாப்தா 1761 (கி. பி. 1839) விகாரி நாம ஸம்வத்ஸர...ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதி பதுலைன ஸ்ரீசந்திரசேகர ஸ்வாமுலவாரு கும்பகோண முனுச்சி காஞ்சிகி வச்சி..'

கும்பாபிஷேகத்துக்காக ஸ்ரீ ஆசார் யர்கள் கும்பகோணத்திலிருந்து காஞ்சிக் குப் புறப்பட்டு வந்ததை இது குறிக் கிறது. இந்தப் பிரயாணத்தின்போது, பிரதி தினமும் அவர்களது பயண விவ ரங்கள் கொண்ட நாட்குறிப்பு ஸ்ரீ மடத் தில் இருக்கிறது. இந்தப் பிரயாணக் குறிப்பு, படிப்பதற்கு மிகவும் ரஸமாக இருக்கிறது. உதாரணமாகப் பரங்கிப் பேட்டைக்கு வரும்போது கப்பலில் குண் டும் வேட்டும் போட்டு ஆசாரியருக்கு மரியாதை செய்ததாகத் தெரிகிறது. இந்த நாட்குறிப்பு அந்த நாளில் வழங் கிய பேச்சுத் தமிழிலேயே எழுதியிருக் கிறது. அதிலிருந்து பின்வரும் பகுதி யைக் கொடுத்திருக்கிறேன்:

'ஸ்ரீ பகவத்பாதாள் இருக்கிற யெடத் துக்குச் சமீபத்தில் கீழே உட்கார்ந்து ஜபம் பண்ணிக் கொண்டிருக்கும்போது டிகோயில் பிரசாதம் கொண்டு வந்து வைத்தார்..சகல சன்னகத்துடனே திரு வீதி பிரதக்ஷிணமாயி ருஜ வீதியோடே வந்து கெங்கை கொண்டான் மண்ட பத்துக்கு சமீபத்திலிருக்கும் ஸ்ரீ சுவாமி யளவாள் சொந்த மடத்தில் விஜயம் பண்ணினுர். அன்னிய தினம் டி தாலுகா தாசில்தார் ஸ்ரீநிவாசருயற் பிகைஷ பண்ணி வைச்சாற்....

அதில், 1839-ஆம் ஆண்டு ஸ்ரீகாஞ்சி யில் ஸ்ரீமடத்தின் இடம் ஸ்பஷ்டமாகக் காண்பித்திருக்கிறது. இன்றும் கங்கை கொண்டான் மண்டபத்துக்கு எதிரே தான் ஸ்ரீமடம் விளங்குகிறது.

ஸ்ரீமடம் கங்கை கொண்டான் மண்ட பத்துக்கு எதிராக இருப்பதற்கு, அறு நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு கல் வெட்டிலும் அத்தாட்சி இருக்கிறது. சென்னை Oriental Manuscript Library வெளியிட்ட "South Indian Temple Inscription" Vol 1, நெம்பர் 454-இல், ஏகாம்

பரநாதர் கோயில் சபாபதி மண்டபம் கிழக்குச் சுவரில் சாக 1288, பராபவ வருஷம் ஸிம்ம மாசம் சுக்ல அஷ்டமி வெள்ளிக்கிழமை அனுராத நக்ஷத்திரம் கூடிய தினத்தில் வீர பொக்கன்ன உடையார் புத்திரரான விரகம்பன்ன உடையார் கொடுத்த சாஸனம் ஒன்று குறிப்பிட்டிருக்கிறது. இந்தத் தேதி கி. பி. 1366, ஆகஸ்டு 14க்குச் சரியாக இருக்கிறது. இதில் பின் வருமாறு கண்டுள்ளது:

'கெங்கை கொண்டா மண்டபத்துக்கு முன்னண்டை திருவீதியில் மேலச் செருகில் யிவர் வாசலில்'

சாஸனத்தின் முதற் பகுதியிலிருந்து, ''யிவர் வாசல்'' என்பது, ''திருக்காம கோட்ட உடையநாச்சியா''ருக்கு உரியது என்று தெரிகிறது. திருவீதியான ராஜவீதியின் மேலைப்பக்கம் கங்கை கொண்டான் மண்டபத்துக்கு எதிராக இருப்பது இன்றும் ஸ்ரீமடம்தான். ஆகையால் ஆறு நூற்றாண்டுகளாகவே ஸ்ரீமடத்தின் இடம் இன்று இருப்பதுதான் என்று கொள்ள முடியும். ஆதிசங்கரர் நாள் முதலாக அங்கு இருப்பது நம் ஸ்ரீமடம் என்று ஊகிப்பதும் பொருத்தமே.

இன்றைய காஞ்சிபுரம் டவுன் பிளானில் ஸ்ரீமடம் இருக்கும் இடம் ஸர்வே நம்பர் 2378, 2379, 2380 முதலியவை. சென்னை சர்க்கார் இனாம் கமிஷனர் இனாம் டைட்டில் நம்பர் 2216-இல் இந்தப் பூமிக்கு இனாம் டைட்டில் கொடுத்திருக்கிறார். 1802 ரிஜிஸ்தரில் 14-ஆம் பத்தியில், இந்தப் பூமி ஸ்ரீசங்கராசாரிய மடத்தைச் சேர்ந்தது என்று இந்த ரிகார்டின் மூலம் தெரிய வருகிறது. அந்தக் காலத்திலேயே இதைக் கொடுத்தவர்கள் யார், எப்போது என்று தெரியவில்லை என்றும், அநேக வருஷங்களாக ஸ்ரீமடத்தின் சொத்தாக இருப்பதனால் ஸ்ரீமடத்துக்கே மஞ்சூர் செய்திருப்பதாகவும் தெரிகிறது.

(9) அடுத்த முக்கியமான ரிகார்டு ஒரு கோர்ட்டு வழக்கு. இது 64-ஆம் ஆசார்யர்களின் காலத்தைச் சேர்ந்தது. 1844-ஆம் ஆண்டு, திருச்சி ஜில்லா ஸதர் அமீன் கோர்ட்டில் ஸ்ரீ சிருங்கேரி மடம் விசாரணை கர்த்தர், அகிலாண்டேசுவரிக்குத் தாடங்கப் பிரதிஷ்டை செய்யும் உரிமை ஸ்ரீ சிருங்கேரி மடத்துக்கே உண்டு என்று ஸ்ரீ காஞ்சி மடத்தைப் பிரதிவாதியாக்கி வழக்குத் தொடுத்தார். வழக்கில் வாதியின் பிராதும் (Plaint), பிரதிவாதியின் விடையும் (Answer), இதற்கு வாதியின் மறு பிராதும் (Reply), இதை யொட்டிப் பிரதிவாதி அளித்த விளக்கமும் (Rejoinder) அநேக விஷயங்களைத் தெளிவுற விளக்குகின்றன. கோர்ட்டார் தமது தீர்ப்பில், சிருங்கேரித் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிகார்டுகள் நிரூபிக்கப் படவில்லை என்றும், சாட்சியங்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கின்றன என்றும் கூறி, பிரதிவாதியான ஸ்ரீ மடத்துக்குச் செலவு உள்பட வாதி அளிக்கவேண்டும் என்று வழக்கைத் தள்ளுபடி செய்தனர். இந்த வழக்கு O. S. 95-1844 என்ற எண்ணுடையது. இதற்குமேல் அப்பீல் No. 109/1846-இலும் விசேஷ் விஞ்ஞாபனம் (Special Appeal Petition) No. 106-1848 இலும் மேல் கோர்ட்டுகளுக்குச் சிருங்கேரி மடத்தினர் வழக்கைத் தொடர்ந்தபோதிலும் கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பையே மேல் கோர்ட்டுகளும் ஸ்திரப்படுத்தின. இரண்டு அப்பீல்களும் வாதி, பிரதிவாதிகளுக்குச் செலவு தரவேண்டும் என்ற தீர்ப்புடன் தள்ளப்பட்டன. இன்றைக்கு நூற்றிருபது வருஷங்கள் முன்பு ஸ்ரீமடம் விஷயத்தைப் பற்றித் தெரிய வேண்டுமானால் இந்த ஒரு ரிகார்டே போதும்!

இந்த வழக்கில் ஒரு முக்கியமான குறிப்பு இருக்கிறது. வாதியின் ரிப்ளைக்குப் பிரதிவாதியான ஸ்ரீமடத்தின் ரிஜாயிண்டரில் 20-ஆவது பாராவில் பின் வருமாறு காணப்படுகிறது:

'காஞ்சீபுரத்தில் காமகோடி பீடமும் அவடத்தில் சிஷியாளை வைத்ததும் நிஜமானால் முதல் பிரதிவாதி அவர்கள் அவடத்தில்தானே இருக்கவேண்டியது போலவும் கும்பகோணத்தில் வந்திருக்கிற காரணம் ஆன்சரில் சொல்லவில்லை என்றும் (வாதி) ரிப்ளை 20வது காலத்தில் சொல்லுகிறான். காமகோடி பீடாதிபதி அவர்களை அவ்விடத்திலேயே இருக்க வேணுமென்றும் மற்றப் பிரதேசங்களில் இருக்கிறது கூடாதென்றும் எந்த கிரந்தங்களிலும் சொல்லியிருக்கவுமில்லை, காஞ்சிபுரத்திலிருக்கிற மடத்தில் முதல் பிரதிவாதிகளுடைய சிஷியாளும் காரியஸ்தர்களும் இருந்து சர்வக்ஞபீடத்துக்கு பூஜை முதலானதுகள் நடப்பிவித்துக் கொண்டு வருகிறதும் தவிர காவேரி தீரத்தில் வசிக்க வேணுமென்று முதல் பிரதிவாதிகளுடைய பரமகுரு சுவாமியள் அபிப்பிராயப்பட்டு சுரேசுவராசாரியாரால் பூசித்து வந்த யோகலிங்கமென்கிற சந்திர மௌளீசுவர சுவாமியுடன் கும்பகோணத்திலிருந்த மடத்துக்கு வந்து வாசம் செய்தவர்களுக்கு அந்தப் பிரதேசத்தில் இருக்கிற ராஜாக்கள் முதலான சிஷியாக்களால் பூஜிக்கப்

பட்டு அநேக வருமானங்களுக்கு இடமும் அவகாசமும் இருக்கிற இடத்திலும், சில தடவை காஞ்சிபுரத்திலும் வாசம் செய்து வருகிறதைக் குறித்து வாதி சொல்கிற ஆக்ஷேபமும் உபயோகமற்றது...'

சுமார் நூற்றிருபது வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு கோர்ட்டு வழக்கின் ரிகார்டு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் கும்பகோணத்துக்கு ஏன் போயிற்று என்ற கேள்விக்கு ஆணித்தரமாகப் பதிலளிக்கிறது.

இந்த ரிகார்டின் காலம், 64-ஆம் ஆசார்யர்களான ஸ்ரீ சந்திரசேகரர்-5 அவர்களின் காலத்தைச் சேர்ந்தது. இவர் 1814-இலிலிருந்து 1851 வரை பீடத்தில் இருந்தார். இவரது பரமகுரு 62ஆம் ஆசாரியரான சந்திரசேகரர்-4. இவர் 1746 முதல் 1783வரை பீடத்தில் இருந்தார். இவரைத்தான் மேற்படி ரிகார்டு 'முதல் பிரதிவாதியவர்களுடைய பரம குரு சுவாமிகள்' என்கிறது. இவர்தாம் காவேரி தீர வாசத்துக்காகக் காஞ்சியிலிருந்து கும்பகோணம் போயிருக்கிறார். இவர் கி. பி. 1783 ஜனவரியில் கும்பகோணத்திலேயே சித்தி அடைந்தார். இளையாத்தங்குடியில் சித்தி பெற்ற ஆசாரியரை 'இளையாத்தங்குடி சுவாமிகள்' என்றும், கலவையில் சித்திபெற்ற ஆசாரியரை 'கலவையில் சுவாமிகள்' என்றும் வழக்கத்தில் சொல்லுவது போல, கும்பகோணத்தில் சித்தி அடைந்த 62-ஆம் ஆசாரியரைக் கும்பகோணம் ஸ்வாமிகள் என்று நடைமுறையில் கூறிவந்தார்கள். இவருக்குப் பின்னால் 1773 ஜனவரியில் பீடாரோஹணம் செய்தவர் 63-ஆம் ஆசார்யர் ஸ்ரீ மகாதேவர்-4. இவர் பீடத்துக்கு வந்த பின் ஏழெட்டு மாதங்களில் காஞ்சியில் மடம் இருந்ததாகப் புலவச்சேரி சாஸனத்தில் தெரிவதால், இந்த ஸ்வாமிகள் பீடாரோஹணம் ஆகிய பின் காஞ்சிக்கு மறுபடியும் வந்திருக்கவேண்டும். என்று யூகிக்கலாம். தஞ்சையை ஆண்ட பிரதாபசிம்மன் காலத்தில் ஸ்ரீமடம் தஞ்சாவூர் போனதாகக் கர்ண பரம்பரையாகச் சொல்வார்கள். இந்த அரசன் காலம்: 1740-63. இதுவும் ரிகார்டுகளில் இருக்கும் தகவல்களும் ஒத்துப் போயிருக்கின்றன. 63-ஆம் ஆசாரியர் கும்பகோணத்திலேயே பிறந்து அங்கேயே சித்தியையும் அடைந்தார். இதனாலும், இந்த மகானைத் தஞ்சை ஜில்லா அரசர்களும் மக்களும் கௌரவித்ததனாலும் ஸ்ரீமடத்தின் முக்கிய காரியங்கள் கும்பகோணத்துக்குப் போயின, ஆயினும் ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீமடம் அன்றும் இன்றும் என்றும் மங்காமலேயே இருந்து வந்திருக்கிறது; இருக்கவும் போகிறது.

1792-ஆம் ஆண்டு ஈஸ்ட் இந்தியா கம்பெனி கொடுத்த ஒரு பர்மானில், ஸ்வாமிகள் கும்பகோணத்தில் இருந்து வருவதாகக் காணப்படுகிறது. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்துக்கும் கும்பகோணத்துக்கும் உள்ள சம்பந்தத்தைக் குறிக்கும் முதல் ரிகார்டு இதுதான். இதற்குப் பின் இருக்கும் ரிகார்டுகளில்தான் கும்பகோணத்தின் பெயர் இருக்கிறது; ஆனால் இவற்றிலும் ஸ்வாமிகள் 'ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி' என்றே சொல்லியிருக்கிறார்கள்.

கர்ணபரம்பரை கூறும் தஞ்சை மன்னர் பிரதாபசிம்மன் பெயரிலேயே கி. பி. 1748-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஓர் உத்தரவு உள்ளது. ஹேமந்த மோடி லிபியிலுள்ள இந்த உத்தரவு, சென்னை Central Record Office C-373/8-43 இலக்கமிட்ட தஸ்தாவேஜியாக உள்ளது.

இந்த உத்தரவில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கு இன்றளவும் உள்ள பிருதாவளிகள் அவ்வளவும் கூறப்பட்டுள்ளன. காஞ்சி திவ்விய க்ஷேத்திரே சாரதா மட ஸ்திதானாம்..ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் பூஜ்ய சங்கர பகவத் பாதாசார்யாணாம் அதிஷ்டானே ஸிம்ஹாஸனே அபிஷிக்தானாம் ஸ்ரீசந்திரசேகர ஸரஸ்வதீனாம் என்ற வாக்கியம் இதில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதாவது ஆதிசங்கரர் காஞ்சியில் நிறுவிய சாரதா மடத்து அதிபர்களாகிய ஸ்வாமிகளே தஞ்சைச் சீமைக்கு வந்துள்ளார் என்பது ஐயந்திரிபறக் காணக்கிடக்கிறது. பிரதாபசிம்ம மன்னர் தமது ராஜதானிக்கு வந்துள்ள ஸ்வாமிகளுக்குப் பிரஜைகள் யாவரும் எவ்விதம் மரியாதை செலுத்த வேண்டும் என்பதை இந்த உத்தரவில் கூறுகிறார்.

ஸ்ரீமடம் கும்பகோணம் போயிற்று என்றால், ஏதோ சர்க்கார் ஆபீசை ஓர் ஊரில் மூடி வேறோர் ஊரில் திறப்பது போல் எண்ணக் கூடாது, ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தக்குச் சொந்தமான மடங்கள், காஞ்சிபுரம், திருவானைக்கா, திருவிடைமருதூர், கும்பகோணம், திருவொற்றியூர் முதலிய அநேக இடங்களில் இருக்கின்றன. இதைத் தவிர, ஆசாரியர்கள் எப்போதும் சுற்றுப் பிரயாணங்களிலேயே இருப்பார்கள். அவர்கள் இருக்கும் இடத்தில்தான் யோக

லிங்கமான ஸ்ரீசந்திரமௌளீச்வரருக்குப் பூஜை நடக்கும், அவர்கள் இருக்கும் கிராமந்தான் அன்றைய ஸ்ரீ மடத்தின் ஸ்தானம். நம் ஆசாரியரே பீடாரோஹணம் செய்த புதிதில் மஹேந்திரமங்கலத்தில் மூன்று வருஷங்களும், சமீபத்தில் இளையாத்தாங்குடியில் மூன்று வருஷங்களும் தங்கியிருந்தார்கள், இதனால் மடம் இடம் மாற்றப்பட்டது என்று எண்ணுவது தவறு. 'ராமன் இருக்கும் இடம் அயோத்தி' என்பது போல, ஸ்ரீ ஆசாரியர்கள் இருக்கும் இடந்தான் ஸ்ரீமடம் எனினும், எப்போதும் ஓர் அயோத்தி உள்ளது போல் காஞ்சி என்ற மூலஸ்தானமும் உண்டு.

கும்பகோணத்துக்கு வந்த 62-ஆம் பீடாதிபதிகளையும், அவரை அடுத்த ஆசாரியரையும் அப்போது இருந்த தஞ்சை மன்னர்கள் ஆச்ரயித்துத் தங்களுக்குப் பெருமை தேடிக்கொண்டார்கள். நீர்வளமும் நிலவளமும் உள்ள தஞ்சை, திருச்சி மாவட்டவாசிகள் ஸ்ரீமடத்துக்குச் சகல சௌகரியங்களும் செய்து வந்தனர். இந்தக் காரணங்களால் ஸ்ரீமடம் சம்பந்தப்பட்ட வரையில் கும்பகோணத்துக்கு முக்கியத்துவம் அதிகமாக ஏற்பட்டது. எனினும், ஸ்வாமிகளை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி என்றே அழைத்து வந்தார்கள் என்றும், ஸ்ரீமடத்தை ஸ்ரீ சாரதா மடம் என்றே கூறி வந்தார்கள் என்றும் ரிகார்டுகள் மூலம் ஐயமற அறிகிறோம்.

(10) இந்த ரிகார்டு, 1858 ஸெப்டம்பர் 18-ஆம் தேதியன்று கும்பகோணத்தைச் சேர்ந்த ஆங்கிலப் படைத் தலைவன் (Officer Commanding) எழுதியது. இதில், 'சிப்பாய்கள் ஸ்ரீமடத்தின் வழியாகப் போகக்கூடாது' என்று அந்தப் படைத் தலைவன் உத்தரவு பிறப்பித்திருக்கிறான். ஸ்ரீமடத்தின் 17-ஆம் தேதி கடிதத்தின் மீது விசாரணை செய்து இந்த முடிவுக்கு வந்ததாகவும் அந்தப் படைத் தலைவன் எழுதியிருக்கிறான். இந்தக் கடிதத்தின் விலாசம் வருமாறு:

Soobhier the agent of Sree Sun
Karachariar the Priest of
Sree Conjee Commacote
Peetam at Cusbah
of Combaconam

இந்த ரிகார்டிலும், கும்பகோணத்தில் இருக்கும் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி என்று குறித்திருப்பதைக் கவனிக்க வேண்டும். இதில் காணும் 'ஸ்பெல்லிங்' விசித்திரம், கர்னல் ஆர்மலின் புத்தகத்தைப் படித்தவர்களுக்கு விளங்கும்.

64-ஆம் ஆசாரியருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த ஆசாரியர்கள் சமீப காலத்தவரானதால் இக்காலத்து ரிகார்டுகளைப் பற்றி நான் இங்கு எழுதவில்லை.

ஐதிகம், கர்ணபரம்பரை, சரித்திரச் சான்று யாவற்றின் மூலமும் ஆதிசங்கரர் அமைத்ததாக உறுதி செய்யப்படும் ஸ்ரீகாஞ்சி ஸ்ரீமடத்தில் ஆதிசங்கரரின் அவதாரமான நம் ஜகத்குரு இன்று ஆசாரியராக இருந்துகொண்டிருக்கிறார். அந்த மகானை நானும் ஸ்மரித்து உங்களுக்கும் நினைவூட்டிவிட்டுக் கீழ்க்கண்ட ச்லோகத்தை அவரையும், அவர் சார்ந்த குரு பரம்பரையையும் வகித்து வருகிற பெருமை உடைய ஸ்ரீ காஞ்சிக்கு அஞ்சலிகளுடன் சமர்ப்பிக்கிறேன்.


काञ्चि ! त्वं मुक्तिशक्तिः त्वयि
